# உதயன்

24 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 078 வள்ளுவர் ஆண்டு 2044 தை 30 செவ்வாய்க்கிழமை (12/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



**தண்ணீரில் மிதந்தபடி சாதனை**
ஆந்திராவில் 70 வயதான ஓய்வுபெற்ற .... 08

**வடக்கு மாலியில் தொடரும் மோதல்**
தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த... 09

**20 மாணவிகள் திடீர் சுகவீனம்**
காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலயத்தில்... 17

**ரொனால்டோ' ஹெட்ரிக். வென்றது மட்ரிட்**
செவில்லா அணிக்கு எதிரான 'லா லிகா' உதைபந்து... 23


## பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை பகிஷ்கரிக்குக

மொன்றியல், பெப். 12
பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என்று உறுப்பு நாடுகளி

பார்க்க பக்கம் 04

## ஜனாதிபதி இன்று யாழ். வருகிறார்



யாழ்ப்பாணம், பெப்.12
யாழ்ப்பாணத்துக்கு இன்று செவ்வாய்க்கிழமை வருகை தரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றவுள்ளார். அதனையொட்டி யாழ்.குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இராணுவப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகளை விசேடமாகக் கையாள்வதற்காக இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, பொலிஸ்மா அதிபர் என். இலங்கக்கோன் ஆகியோர் நேற்று பலாலிக்கு வருகை தந்து விசேட கலந்துரையா

பார்க்க பக்கம் 24

## பதவி விலகினார் பாப்பரசர்



வத்திக்கான், பெப். 12
கத்தோலிக்க உலகின் 16ஆவது ஆசீர்வாதப்பர் (வயது - 85) இம்மாத இறுதியில் தனது பாப்பரசர் பதவியைத் துறக்க முன்வந்துள்ளார். இது சற்றும்

பார்க்க பக்கம் 04

# பாதுகாப்பு வலயங்கள் படைகளுக்கே உரியன



## அடித்துக் கூறினார் யாழ்.படைத் தளபதி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12
வலி.வடக்கில் படையினரின் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடங்கும் பிரதேசங்கள் படைகளுக்குரியவை. அந்தப் பிரதேசங்கள் மக்கள் பாவனைக்காக ஒருபோதும் விடுவிக்கப்படமாட்டா. அவற்றைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நேற்று அடித்துக் கூறினார் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

யாழ்.நகரிலுள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பலாலியில் படையினரால் வீடுகள் இடிக்கப்படுவது தொடர்பாக

பார்க்க பக்கம் 04

## உதயனை வசைபாடிய தளபதி

யாழ்ப்பாணம், பெப்.12
'உதயன்' பத்திரிகையையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனையும் மாறிமாறி வசைபாடுவதிலேயே குறியாக இருந்தார் யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் படைத் தளபதி அதன்போது குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட இராணு

பார்க்க பக்கம் 04

## பத்து எதிர்க்கட்சிகள் கூட்டு ஒப்பந்தம்

சென்னை, பெப். 12
பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பத்து எதிர்க்கட்சிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, ஜனநாயக ஆட்சியை நாட்டில் நிலைநிறுத்த வேண்டுமென குரலெழுப்பி போராட்டக் களத்தில் நேற்று உத்தியோகபூர்வமாகக் குதித்தன.

ஒரே மேடையில் கூடியிருந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் "நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் என்றும் அதுவரையில் நாம் போராடிக் கொண்டேயிருப்போம்" என்றும் ஒன்றாக கைகோர்த்து உரத்த குரலில் கோஷமெழுப்பினர்.

பார்க்க பக்கம் 04

## இலங்கை மீது கை வைப்பதற்கு மன்மோகன் சிங் அரசுக்குப் பயம்

### புதுடில்லி ஆய்வாளர் கூறுகின்றார்

புதுடில்லி, பெப். 12
இலங்கை விவகாரத்தில் இந்தியாவினால் இன்னமும் முக்கிய பங்கை வகிக்க முடியும். ஆனால், புதுடில்லியில் உள்ள தற்போதைய அரசு இல்லாத சூழலில் தான் அது சாத்தியமாகும். இலங்கை மீது கை வைக்க மன்மோகன் அரசுக்குப் பயம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புதுடில்லி அரசியல் ஆய்வாளரும், ஐ.பி.என். செய்திப் பிரிவின் தலைவருமான ஆர்.ராஜகோபாலன்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட சூழலில், இந்திய - இலங்கை உறவுகள் குறித்து ஐ.பி.என். இணைய வாசகர்களின் கேள்விகளுக்கு, ஆர்.ராஜகோபாலன் அளித்த பதில்கள் வருமாறு:-

கேள்வி : இந்தியாவில் குழப்பமான நிலை உள்ளதா?

பார்க்க பக்கம் 04

## முட்டாள் அரசியல்வாதிகள்

யாழ்ப்பாணம், பெப்.12
முட்டாள் அரசியல்வாதிகளின் பேச்சைக் கேட்டு நீங்கள் கண்டதையும் எழுத வேண்டாம். அரசியல்வாதிகள் அவர்களுக்கென்று இருக்கின்ற தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றனர். நீங்கள் சமூகத்துக்கு பயனுள்ள விடயங்களை எழுதுங்கள்.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரி

பார்க்க பக்கம் 24

## ஐ.நா.பரிந்துரைகளை இலங்கை மதிக்கத் தவறினால் சிக்கல்தான்

### எச்சரிக்கிறது இந்தியா

சென்னை, பெப். 12
மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் பரிந்துரைகளை இலங்கை மதிக்கத் தவறினால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்படும் இலங்கைக்கு எதிரான எத்தகைய பிரேரணையையும் இந்தியா ஆதரிக்கும் என்று பிரதமர் பணியகத்துக்கான மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, அதை இந்தியா ஆதரித்தது.

பார்க்க பக்கம் 24

## பொதுநலவாய மாநாடு திட்டமிட்டபடி கொழும்பில்

கொழும்பு, பெப். 12
பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்றும் வேறு நாட்டுக்கு இடம்மாற்றம் செய்ய வேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தியுள்ள நிலையில், குறித்த மாநாடு திட்டமிட்டபடி கொழும்பிலேயே நடைபெறும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ்சர்மா நேற்று அறிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகமவுடனான சந்திப்பின்போதே அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

மாநாட்டிற்கான ஏற்பாடுகளை பரிசீலனை செய்த பின்

பார்க்க பக்கம் 04

## அழுத்தம் கொடுக்கும் நாடுகள் எம்முடன் இணைய வேண்டும்

### பாதுகாப்புச் செயலாளர் கோரிக்கை

கொழும்பு, பெப். 12
இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் சர்வதேச நாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் போருக்குப் பின்னரான இலங்கையின் முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்ள முடியும் என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகள் நிலையத்தில், 'போர் மற்றும் போரின் பின்னரான காலப்பகுதியில் சர்வதேச நாடுகளால் எதிர்நோக்கும் அரசியல், இராஜதந்திர சவால்கள்'' என்ற தலைப்பில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு

பார்க்க பக்கம் 04

# சர்வதேசத்துடன் சேர்ந்து இந்தியா இலங்கையை அழுத்த வேண்டும்

## சர்வதேச நெருக்கடிகள் குழு வலியுறுத்தல்

லண்டன்,பெப்12

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து இலங்கை அரசு மீது இந்தியா அதிக அழுத்தத்தை செலுத்த வேண்டும் என சர்வதேச நெருக் கடிகளுக்கான குழுவின் இலங்கைக்கான இயக்குநரும், ஆய்வாளருமான அலன் கீனன் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு, சமவுரிமை போன்ற விடயங்களில் மட்டுமில்லாது, மனித உரிமை, சட்டத்தின் ஆட்சி, அதிகாரப் பகிர்வு மற்றும் ஜனநாயம் போன்ற விடயங்கள் இலங்கையில் மேலும் மேம்பாடு அடைவதற்கான அழுத்தங்ளை இந்தியா சர்வதேச சமூகத்துடன் இணைந்து பிரயோகிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருகோணமலையில் கடந்த 4ஆம் திகதி இடம் பெற்ற இலங்கையின் 65 ஆவது சுதந்திரதின நிகழ்வில் இலங்கைத் தமிழ் மக்களின் சுயாட்சி உரிமையை முற்றாக நிராகரித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை அவரது சகோதரர்களின் மன உணர்வை வெளிப்படுத்தி உள்ளது. தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதை விடுத்து மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் அல்லது நீக்க வேண்டும் என இலங்கை அரசில் முக்கிய பதவிகளை வகிக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் மூன்று சகோதரர்களும் ஏற்கனவே தெரிவித்துள்ளனர்.

**இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசுக்கு இந்தியாவும், சர்வதேச சமூகமும் மேலும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.**

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இந்தியா, அமெரிக்கா போன்ற உலக நாடுகளுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரின் சகோதரர்கள் கடந்த காலங்களில்வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற்படுகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள அமைதியை சீர்குலைக்க இலங்கை அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.இலங்கைத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை ஒதுக்கும் இலங்கை அரசு, சிங்கள பௌத்த தேசிய வாதத்தை வளர்த்து வருகின்றது.

இதனால் இங்கு இனங்களுக்கு இடையில் பதற்ற நிலை தோன்றியுள்ளது. இலங்கை என்பது சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்தினை இலங்கை அரசு ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழலாமே ஒழிய, சிங்கள மக்களுக்கு நிகராக வாழமுடியாது என இலங்கை அரசு தெரிவித்து வருகின்றது. தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என்ற பொய்யான கருத்தை இலங்கை அரசு பரப்பி வருகின்றது.

13 ஆவது திருத்தச் சட்ட வரைவின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படுவது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை மீறி செயற்படுகின்றார். அதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்ட வரைவு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், விருப்பங்களையும் முழுமையாகத் திருப்திப்படுத்தாது. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்பதே உண்மை. இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசுக்கு இந்தியாவும், சர்வதேச சமூகமும் மேலும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் போதே, இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியப்படும் -என்றார். (த)




யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று யாழ்.றில்கோ ஹோட்டலில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி ஹோட்டல் நுழைவாயிலில் ஜனாதிபதியின் 'கட் அவுட்' அமைக்கப்பட்டுள்ளது. (த-17)

## சவூதி அரேபியாவுக்கான தூதராக கிருஷ்ணமூர்த்தி?

கொழும்பு,பெப்.12

சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவராக சிரேஷ்ட இராஜதந்திரியான வி.கிருஷ்ணமூர்த்தியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுஎன வெளி விவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பணிப்பெண்ணாக கடமையாற்றிய மூதூரைச் சேர்ந்த ரிஷானா நபீக்குக்கு கடந்த ஜனவரி 9ஆம் திகதி சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சவூதி அரேபியாவுக்கான தூதுவர் அஹமட் ஜவாத், இலங்கை அரசினால் மீளழைக்கப்பட்டார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சிரேஷ்ட இராஜதந்திரியான வி.கிருஷ்ணமூர்த்தியின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராஜதந்திர சேவையில் 33 வருட அனுபவம் கொண்ட இவர், தற்போது சார்க் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பிரிவின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றி வருகின்றார்.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பிரதி தூதராக இறுதியாக வி.கிருஷ்ணமூர்த்தி கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஐந்நூறு பொலிஸார் கடமையில்

யாழ்ப்பாணம்,பெப்.12

ஜனாதிபதியின் யாழ்.வருகையை முன்னிட்டு 500 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பிலிருந்தும் பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளதாக என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார். (4)

## அரசின் இணையத்தளங்கள் மீது தொடரும் சைபர் தாக்குதல்கள்

கொழும்பு,பெப்.12

இலங்கை அரசின் இணையத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அரசின் 50 இணையத்தளங்கள் இதுவரை சைபர் தாக்குதலுக்கு இலக்காகிச் செயலிழந்துள்ளன.

**இலங்கை அரசின் அதிகாரபூர்வ ஆவணங்கள், தகவல்களும் அழிந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.**

ஆகப்பிந்திய தாக்குதல் நல்லிணக்க ஆணைக்குழுவின் இணையத்தளம் மீது நடத்தப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இணையத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல்களால் கணினிகளில் சேமிக்கப்பட்டிருந்த இலங்கை அரசின் அதிகாரபூர்வ ஆவணங்கள், தகவல்களும் அழிந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியம், நீதி அமைச்சு, தேசிய அருங்காட்சியகம், குடிவரவுத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், ஊவா மாகாண சுற்றுலாப் பிரிவு, மூலோபாய நிறுவன முகாமைத்துவ முகவரகம், தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம், வடமத்திய மாகாணசபை, துறைமுக அதிகார சபை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்,சுங்கத் திணைக்களம், தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணையம், மதிப்பீட்டுத் திணைக்களம், நிதி ஆணையம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், தேசிய பாரம்பரிய அமைச்சு உள்ளிட்ட பல தளங்கள் சைபர் தாக்குதலால் முடங்கியுள்ளன.

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையத்தின் இணையத்தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு பல வாரங்களாகியும் இதுவரை அது மீள இயங்கத் தொடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்கள் புதிய கட்சி

கான்பரா,பெப்.12

ஆஸ்திரேலியாவில் குடியேறிய இலங்கையர்கள் அங்கு அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்துள்ளனர்.

''ஆஸ்திரேலிய எழுச்சிக் கட்சி'' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கட்சியில் தற்போது ஆயிரத்து 500 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்தநிலையில் எதிர் வரும் பிராந்தியத் தேர்தலில் 65 வேட்பாளர்களை நிறுத்த இந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட டானியல் நல்லையா என்பவரினால் இந்த ஆஸ்திரேலிய எழுச்சிக் கட்சி அமைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்கள் அந்த நாட்டுக்கு விசுவாசமான முறையில் தம்மை மேம்படுத்துவதுடன் ஆஸ்திரேலியாவின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற முக்கிய கொள்கையை இந்தப் புதிய கட்சி கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## நாடு திரும்புகிறார் சவூதித் தூதுவர்

**24 மணித்தியாலங்களுக்குள் நாடு திரும்புமாறு கொழும்பிலுள்ள தூதுவருக்குச் சவூதி அரேபிய அரசு அறிவித்திருந்தது**

கொழும்பு,பெப்.12

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நாடு திரும்பவுள்ளார் எனக் கொழும்பிலுள்ள சவூதி அரேபியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

24 மணித்தியாலங்களுக்குள் நாடு திரும்புமாறு கொழும்பிலுள்ள தூதுவருக்குச் சவூதி அரேபிய அரசு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவசரமாக அறிவித்திருந்தது. இதனையடுத்தே இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் உடனடியாக நாடு திரும்பவுள்ளார்.

சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய மூதூரைச் சேர்ந்த ரிஷான நபீக்குக்கு கடந்த ஜனவரி 9 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றியது அந்நாட்டு அரசு. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அஹமட் ஜவாத் கடந்த ஜனவரி 9 ஆம் திகதி இலங்கை அரசினால் மீள அழைக்கப்பட்டார்.

அதற்குப் பதிலடியாகவே இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் திருப்பியழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## யாழ்.– கொழும்பு பஸ் சேவையில் ஆசன ஒதுக்கீட்டுக்கு அதிகாரிகள்

கொழும்பு,பெப்.12

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே சேவையிலுள்ள, பஸ்களில் ஆசன ஒதுக்கீடுகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளுக்காக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளை ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளது.

வெள்ளவத்தை, கொட்டாஞ் சேனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பஸ் தரிப்பிடங்களில் ஆசன ஒதுக்கீடு தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பஸ் உரிமையாளர்கள் மற்றும் போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளிடையே இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (த)

## உயிரிழந்த புலிகளை நினைவு கூரத் தடையில்லை

யாழ்ப்பாணம்,பெப்.12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து உயிரிழந்த பிள்ளைகளை, அவர்களின் பெற்றோர்கள் வீட்டில் வைத்து நினைவுகூரலாம். அதற்குத் தடையில்லை. மாறாகப் பொது இடங்களில் வைத்து பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படக் கூடாது.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

தமிமீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து உயிரிழந்த உறவுகளை நினைவஞ்சலி செலுத்த அனுமதியுண்டா என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீடுகளில் வைத்து அஞ்சலி செலுத்த நாம் தடையாக இருக்கமாட்டோம். மாறாகப் பொது இடங்களில் வைத்து இவ்வாறு செய்யக் கூடாது.

13 ஆயிரம் இராணுத்தினரே இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ளனர். 2010 ஆம் ஆண்டு நீங்கள் வீதியில் பயணம் செய்யும் போது சந்திக்கு சந்தி இராணுவத்தினர் நின்றனர். இன்று அப்படியா இருக்கின்றது ? கடவுளின் பெயரால் நீங்கள் உண்மையை எழுதுங்கள்.

2010 ஆம் ஆண்டு ஆம் ஆண்டு 27 ஆயிரமாகக் காணப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை தற்போது 13 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் வேண்டாம் என்கிறீர்கள். ஆனால் ஏதாவது சம்பவம் இடம்பெற்றால் இராணுவம் தான் பொறுப்பு என்கிறீர்கள்.

மிச்ச சொச்சமாக எஞ்சியிருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் இன்னமும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கின்றனர். மக்களைக் குழப்புகின்றனர். தனிநாட்டுக் கோரிக்கையை அரசு அனுமதிக்காது.

பிரிவினையை உண்டாக்க வேண்டாம் நல்லிணக்கத்தை வளருங்கள். - என்றார். (த-1)

# ஆலய உண்டியல்களில் சில்லறைகள் முடக்கம்

## மக்கள் விசனம்

*யாழ்ப்பாணம், பெப்.12*
*சில்லறைப் பணத்துக்காகப் பயணிகளும், வியாபாரிகளும் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் கோயில் உண்டியல்களில் சில்லறை முடக்கப்படுவது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

கோயில் உண்டியல்களில்எவ்வளவு பணம் சேருகிறது என்பதில் கூட கவனம் செலுத்தாது இருக்கும் கோயில் நிர்வாகிகள் அந்தப் பணம் திருட்டுப் போதவதற்கே வழி வகுக்கின்றனர் என்று கவலை தெரிவிக்கின்றனர் மக்கள். அதே வேளை பஸ்ஸில்மிகுதிப் பணத்தைநடத்து நர்கள் கொடுக்காததால் பயணிகள் முரண்படுகின்றனர்.

கடைகளில் மிகுதிப் பணத்துக்குப் பதிலாக வேறு பொருள்களைக் கொடுப்பதால் வாடிக்கையாளர்கள் முகம் சுழிக்கின்றனர். சில்லறைத் தட்டுப்பாட்டே இதற்கு காரணமாக உள்ளது.

பஸ்ஸில் நடத்துநர்கள் பலர் சில்லறைப் பணம் வைத்திருந்தாலும் இல்லை என்று கூறி மிகுதிப் பணத்தைக் கொடுக்காமல் விடுவது அல்லது குறைத்துக் கொடுப்பது ஒரு புறம் இருந்துவருகிறது என்றும் மக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

கோயில்களில் சேரும் சில்லறைப் பணத்தை வெளியே எடுத்து அவர்கள் நாணயத்தாள்களாக மாற்றுவதன் மூலமாக சில்லறைப் பணம் வெளியே பயன்பாட்டுக்கு வரும். உண்டியலுக்குள் முடங்க வேண்டிய நிலைமை ஏற்படாது. சில்லறைக்குத் தட்டுப்பாடும் ஏற்படாது. ஆனால் பெரும்பாலான கோயில்களின் உண்டியல்களில் சில்லறை முடங்கியிருப்பதையே காணமுடிகிறது.

இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவே அனலைதீவில் உள்ள கோயில் ஒன்றிலிருந்து 61 ஆயிரம் ரூபா இலங்கைப் பணமும் 200 பவுண்ஸ் வெளிநாட்டுப் பணமும் திருட்டுப் போன நிலையில் மீட்கப்பட்டதைக்கூறலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு கோயிலில் மாத்திரம் இவ்வளவு நாணயக் குற்றிகள் முடங்கியிருக்கும் நிலையில் இது போன்று இன்னும் எத்தனை கோயில்களில் சில்லறைப்பணம் முடங்கியிருக்கும் என்பதனை அனைவருமே உணரமுடியும்

தவிர 200 பவுண்ஸ் வெளிநாட்டு நாணயத்தாள் உண்டியலில் இருந்துள்ளது. இதன் இலங்கைப் பெறுமதியோ அதிகம். இந்தளவுக்கு பெறுமதியான பணம் உண்டியலில் இருப்பது அக்கறையீனமா? இது போன்று சம்பவங்களால் கோயில்களில் திருட்டு இடம்பெறுவது அதிகரிக்க கோயில் நிர்வாகிகளே மறைமுகமாக உடந்தையாக இருக்கின்றனர் என்றே எண்ணத் தோன்றுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் இனிவரும் காலங்களிலாவது உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4)

# நுளம்பு பெருகக் கூடிய சூழலை வைத்திருந்ததால் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.12
வலி. கிழக்கு பிரதேசத்தில் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாகச் சூழலை வைத்திருந்த 22 பேருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு செயற்பாட்டு வாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான சுகாதார பகுதியினர் மற்றும் பொலிஸார் வீடுவீடாக சென்று மக்களின் குடியிருப்பு சுற்றாடல்களை பார்வையிட்டு வருகின்றனர். அத்துடன் டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

பிரதேசத்தின் சில பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் போதிய சுகாதார வசதி இன்றி காணப்படுகின்றன.

மக்களின் இந்தக் குடியிருப்புகள் துப்புரவு இன்றிக் காணப்படுவதோடு அந்தப் பகுதிகளில் இருக்கும் கழிவுப் பொருள்களில் இருந்து நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்தும் காணப்படுகின்றன என்று சுகாதர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு குடியிருப்புச் சுற்றாடல்களில் இருந்து நுளம்பு பெருக்கத்துக்கு வழி சமைத்த குடியிருப்பாளர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

கோப்பாய், இருபாலை பகுதிகளில் மூன்று குடியிருப்பாளர்கள் கோப்பாய் பொலிஸாரினால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப் படவுள்ளனர். சிறுப்பிட்டி பிரதேசத்தில் 11 பேரும் புத்தூர் பிரதேசத்தில் 8 பேரும் அச்சுவேலி பொலிஸாரால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனார்.

தொடர்ந்தும் பிரதேசத்தில் ஏனைய ப்குதிகளில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# தொழில்நுட்ப முயற்சியாளரை உருவாக்க நடவடிக்கை

**மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவரை வருமானத்தை எட்டக் கூடியதாக இருக்கும்.**

யாழ்ப்பாணம்,பெப்.12
விவசாய அமைச்சு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விவசாயத் தொழில்நுட்ப முயற்சியாளர்களை உருவாக்கும் திட்டத்துக்கு 18 வயது முதல் 40 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்வதன் மூலம் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவரை வருமானத்தை எட்டக் கூடியதாக இருக்கும் எனவும் விவசாய அமைச்சு கூறியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தச் செயற்றிட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தமக்கான விண்ணப்பப் படிவங்களை நல்லூர் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சொந்தக் காணியுள்ளவர்களே விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# தொழிற்சங்க பிணக்குகள் குறித்து டிசெம்பர்வரை 10 முறைப்பாடுகள்

## வடமாகாணத்தில் பதிவாகியுள்ளன.

வடமாகாணத்தில் கடந்த டிசெம்பர் மாதம் மட்டும் தொழிற்சங்க பிணக்கு சம்பந்தமாக வர்த்தகர்களிடமிருந்து 10 முறைப்பாடுகள் தொழிற் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன.

ஊழியர் சேமலாபநிதி கட்டத்தவறிய 3 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வடமாகாண தொழிற் திணைக்கள ஆணையாளர் கே.கனகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

வடமாகாணத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 30 நிறுவனங்கள் தொழிற் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களிலிருந்து தலா 14 நிறுவனங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 நிறுவனங்களும் இவ்வாறு இணைந்துள்ளன.

டிசெம்பரில் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த நிறுவனங்கள் எதுவும் புதிதாக இணையவில்லை.

பிணக்கு சம்பந்தமாக கடந்த டிசெம்பரில் 10 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கிளிநொச்சியில் இருந்து 4 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்திலிருந்து 3 முறைப்பாடுகளும், வவுனியாவில் இருந்து 2 முறைப்பாடுகளும், மன்னாரில் இருந்து ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளன. முல்லைத்தீவில் இருந்து முறைப்பாடு எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

பிணக்கு சம்பந்தமாக யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே நிலுவையில் இருந்த வழக்குகள் உட்பட 12 வழக்குகள் டிசெம்பரில் நீக்கப்பட்டுள்ளன.

இன்னும் 29 வழக்குகள் நிலுவையில் உள்ளன நகர்ப்பகுதி கடைகளில் இருந்தே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கிளிநொச்சியில் டிசெம்பரில் ஒரு பிணக்குத் தீர்க்கப்பட்டது. இன்னும் 23 பிணக்குகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன. வவுனியாவில் நிலுவையில் உள்ள வழக்கு உட்பட 4 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. 15 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# கைதடி முதியோர்களின் உளநலன்கள் கவனிப்பு

குருநகர்,பெப்.12
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள அனைத்து முதியவர்களதும் உள நிலையை மேம்படுத்தும் நோக்குடன் மாதாந்தம் முதியோர்களுக்கான ஒன்று கூடல் இடம்பெற்று வருகின்றது என்று கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இந்த ஒன்று கூடலில் சகல முதியவர்களும் பங்கேற்று தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இங்கு கடமை புரியும் பணியாளர்கள் இங்கு தங்கியுள்ள முதியவர்களின் உள நலனை மேம்படுத்தும் நோக்குடன் தமது கடமைகளுக்கு மேலதிக பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் இந்த முதியவர்களை அவதானித்து அந்த முதியவர்களின் நடத்தை மாற்றம், ஒத்திசையும் தன்மை, குறைகூறும் தன்மையைக் குறைத்தல், தனிநபர் சுகாதாரம் பேணல், மற்றவர்க்கு உதவும் மனப்பான்மையை வளர்த்தல், பொழுது போக்குகளில் ஈடுபட வைத்தல், பொதுச் சொத்தை பாதுகாக்கும் தன்மை ஆகியவற்றை கடைப்பிடிக்க பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

மாதாமாதம் நடைபெற்று வரும் இந்த முதியோர் ஒன்று கூடலில் முதியோர் தமது கருத்துக்களை சுயமாக முன் வைக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-51)

# சட்டவிரோத கல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் மாட்டினர்

தென்மராட்சி, பெப்.12
மீசாலை வேம்பிராய் இந்து மயானப் பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோதமாக கல் அகழ்வில் ஈடுபட்ட நபர்கள் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

பிரதேச சபைத் தலைவர் ச.துரைராஜா கொடிகாமம் பொலிஸாருடன் தொடர்பு கொண்டதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் கல் அகழ்வில் ஈடுபட்ட நபர்களை கைது செய்ததுடன் வாகனத்தையும் கைப்பறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபையால் வேம்பிராய் மயானப் பகுதியில் கல் அகழ்வது தடை செய்யப்பட்டிருந்த போதிலும் சிலர் வாகனங்களில் வந்து சட்ட விரோதமாக கல் அகழ்வை மேற்கொள்கின்றனர் என்று பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

எதிர்பாராத வகையில் பிரதேச சபைத் தலைவரிடம் இவர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# வலி.கிழக்குப் பிரதேச சனசமூக நிலையங்கள் நிர்வாகங்களை விரைவில் தெரிய வேண்டும்

## பிரதேச சபையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,பெப்.12
வலி. கிழக்கு பிரதேசத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களின் நிர்வாகங்களும் இரண்டு மாதங்களுக்குள் கூட்டப்பட்டு புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

வலி. கிழக்கு பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்கிடையேயான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சபையின்தலைவர் அ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இந்தப் பிரதேசதில் உள்ள சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்யவும் சனசமூக நிலையங்கள் ஊடாக மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதேசத்தில் இருக்கும் பெரும்பாலான சனசமூக நிலைய அமைப்புக்கள் செயலிழந்து காணப்படுகின்றன.

இந்த சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலில் அந்த நிலையங்களின் நிர்வாக அமைப்புக்கள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

இதற்காகப் பிரதேசத்தின் சகல சனசமூக நிலையங்களும் இரண்டுமாத காலப் பகுதிக்குள் பொதுச் சபைகளை கூட்டி நிர்வாகத் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் புதிய நிர்வாகத் தெரிவுகள் சம்பந்தமான அறிக்கையை சபைக்கு உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களின் நிர்வாகங்களுக்கும் கீழ்ப்பட்டதாக மாதர் சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் செயற்பட வேண்டும்.

சனசமூக நிலைய அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு அதற்கான நிர்வாகக் கட்டமைப்புகள் சிறந்த முறையில் செயற்பட வேண்டும்.

குறிப்பாக பிரதேசத்தில் இடம்பெறும் சிரமதானம் மற்றும் வேலைத் திட்டங்கள் போன்றவற்றை பிரதேச சபையுடன் இணைந்து இந்த அமைப்புகள் மக்களுக்கான சிறந்த சேவையை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே செயற்படாமல் முடங்கி காணப்பட்ட சனசமூக நிலையங்களில் சில மீளத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களில் மக்களை உறுப்பினர்களாக இணைத்து அவற்றை சிறந்த நிலையமாக பலப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# வீதி திருத்தத்தைப் பார்வையிட அவசரமாக வந்த குழுவினர்

யாழ்ப்பாணம்,பெப்.12
கொழும்பில் இருந்து அவசர அவசரமாக வருகை தந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று வீதி புனரமைப்பு பணிகளை பார்வையிட்டது.

தற்போது பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இரவு பகலாக முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு இந்த வீதி புனரமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் இந்தக் குழுவினர் இங்கு வருகை தந்திருந்தனர் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

தற்போது இந்தப் புனரமைப்பு பணிகள் யாழ். நகரை அண்டிய பிரதான வீதிகளில் கூடுதலாக இடம்பெற்று வருகின்றன.

இந்த குழுவினர் யாழ்ப்பாணத்தில் ஏனைய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி புனரமைப்பு பணிகளையும் பார்வையிட்டனர். (ம-17)

## 10 எதிர்க்கட்சிகள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

''எதிர்க்கட்சியின் எதிர்ப்பு'' என்ற தொனிப்பொருளில் செயற்பட்டு வருகின்ற பொது எதிர்க் கட்சிகள் பொது இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் நேற்றுக் கைச்சாத்திட்டன. இருப்பினும், இந்த உடன்படிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய சோசலிஷக் கட்சி ஆகிய கட்சிகள் கைச்சாத்திடவில்லை.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் 3.05 மணிக்கு பொது எதிர்க் கட்சிகளின் தலைவர்களால் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடப்பட்டது.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி, மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார, ருஹுணு மக்கள் கட்சியின் தலைவர் அருண சொய்ஸா, ஐக்கிய மக்கள் கட்சித் தலைவர் சிறிமசிறி அப்பு ஆராச்சி, சுதந்திர அரங்கு கட்சியின் தலைவர் சட்டத்தரணி சுதர்ஷன குணரத்ன ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சார்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

பொது எதிர்க்கட்சியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமது கட்சி கைச்சாத்திடுவது குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என்று தெரிவித்த சுமந்திரன், கட்சித் தலைவர் சம்பந்தன் நாடு திரும்பியவுடன் இது தொடர்பில் கலந்தாலோசித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட நாம் எதிர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய சோசலிஷக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரியவும் வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பியவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார் என பொது எதிர்க் கட்சிகள் தெரிவித்தன.

(த-சி)

## பதவி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எதிர்பாராத அதிர்ச்சியளிக்கும் ஒரு அறிவிப்பாகும்.

புனித பாப்பரசர் ஜோன் போலின் மறைவையடுத்து 16 ஆவது ஆசீர்வாதப்பர் 2005 ஆம் ஆண்டு ஏப்ரலில் தெரிவுசெய்யப்பட்டார்.

கத்தோலிக்க தேவாலயத்துக்கு வியப்பளிக்கும் இந்தப் பதவி துறப்புக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை.

பாப்பரசர் ஒருவரின் மறைவுக்குப் பின்னரே அடுத்த பாப்பரசர் தெரிவு இடம்பெறும். இந்த சம்பிரதாயத்துக்கு மாறாக பாப்பரசர் ஒருவர் பதவி துறப்பது இதுவே முதற்தடவை என வியப்பு தெரிவிக்கப்படுகிறது.

78 வயதான முன்னாள் கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் பாப்பரசராக தெரிவுசெய்யப்பட்டவர்களில் வரலாற்றிலேயே அதிக வயதானவராவார். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஒருசில குருவானவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என எழுந்த அவதூறுகளால் 16ஆவது ஆசீர்வாதப்பர் மனங்கலங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## பொது. தலைவர்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டம் கனடா மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கையில் நீதிமன்றக் கட்டமைப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொது நலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்குப் புறம்பாக இலங்கை அரசு செயற்பட்டு வருவதாகவும் கனடா குற்றம் சுமத்தியுள்ளது. (த)

## உதயனை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வத் தளபதியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அப்போது படைத்தளபதி தெரிவித்தவை வருமாறு:-

'உதயன்' பத்திரிகை எப்போதும் இராணுவத்தை விமர்சிக்கிறது. பெரும்பாலான சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றால், குறித்த சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 200 மீற்றர் தூரதில் இராணுவ முகாம் அமைந்திருப்பதாகச் செய்தியைப் பிரசுரிப்பதே 'உதயனின்' வாடிக்கையாக இருக்கின்றது.

முன்னர் இருளுக்குள் இருந்த மக்கள் இப்போது சந்தோசமான வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். முன்னர் இருந்த வீதித் தடைகள் இப்போதில்லை. இதைப்பற்றி எழுதுங்களேன். வீணாகக் கண்டதையும் எழுதி உங்கள் பத்திரிகையின் பக்கங்களை வீணடிக்காதீர்கள்.

தந்தையால் பிள்ளை கற்பழிப்புச் செய்யப்பட்டது பற்றியோ, இளம் சமுதாயம் தறிகெட்டுப் போவதைப் பற்றியோ, தமிழ் மக்களின் கலாசார விழுமியங்கள் சீரழிவதைப் பற்றியோ நீங்கள் எழுதாமல் இராணுவத்தைப் பற்றி ஏன் எழுதுகின்றீர்கள்?

பத்திரிகைகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். பிரபாகரன் இறந்துவிட்டார். இனி அதைப்பற்றி கதைத்து நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லாமல், நாட்டை வளப்படுத்துவதற்கு எழுதுங்கள்.

எப்போதும் இல்லை இல்லை என்று எழுதுவதை விட மக்களுக்கு எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி பத்திரிகையில் பிரசுரியுங்கள்.

நீங்கள் இப்படித் தவறாக எழுதிச் சம்பாதிப்பது களவெடுத்த பணத்துக்குச் சமனானது. நிம்மதியான வாழ்வைத் தராது. உங்கள் பிள்ளைகளும் இந்தப் பணத்தால் சந்தோசமாக இருக்கமாட்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் 'தினக்குரல்' பத்திரிகை எரிப்புச் சம்பவம் எனக்குத் தெரியும் என்று அறிக்கை விட்டிருந்தார். அது எனக்குத் தெரியாமல் நடந்திருக்காது என்று தெரிவித்திருந்தார். இது எனக்கு மிகக் கடுமையான ஆத்திரத்தை உண்டாக்கியது.

யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் நான் இருக்க வேண்டுமென்றால் எனக்கு விசேட சக்தி இருக்க வேண்டும். நான் அப்படி எல்லா இடங்களிலும் இருப்பின் இவ்வாறான சம்பவங்களை நடக்க விடமாட்டேன்.

எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்தமை தொடர்பில் அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆலோசித்து வருகிறேன்-என்றார். (த-1)

## பாதுகாப்பு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவத்தால் விடுவிக்கச் சாத்தியமான நிலப்பரப்புக்கள் விடுவிக்கப்பட்டுக் கொண்டே வருகிறன. பொதுமக்களின் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு தற்போது எமது முகாம்களை பின்நகர்த்தியுள்ளோம்.

ஆனால் பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய பிரதேசங்களில்தான் பிரச்சினை. ஏனெனில் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலுள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பிரிகேட்டுக்கள் பலாலிக்குள் இப்போது உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனால் இராணுவ முகாம்கள் அமைப்பதற்குக் காணிகள் தேவைப்படுகின்றன. இதற்காக நாங்கள் மேற்படி பிரதேசங்களைச் சுவீகரிக்க வேண்டிய தேவையுள்ளது.

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பனவற்றை விஸ்தரிப்புச் செய்ய வேண்டியுள்ளது. மேலும் பலாலி விமான நிலையத்தைச் சுற்றி சிறிய முகாம்கள் அமைக்க முடியாது. விமானங்கள் தரையிறங்க முடியாத நிலை முன்னர் இருந்தது. எனவே அவற்றைக் கருத்திற் கொண்டு பெரிய முகாம்களை அமைக்க வேண்டிய பாதுகாப்புத் தேவை இருக்கின்றது. விமான நிலைய விஸ்தரிப்புக்காகக் காணிகள் சுவீகரிக்கப்படுவது பலாலியில் மட்டும் நடக்கவில்லை. கொழும்பு கட்டுநாயக்காவிலும் நடந்ததுதான்.

நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்குள் உள்ளடங்கும் பிரதேசங்களைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்களுக்குத் தற்போதையை பெறுமதிக்கு ஏற்ப காணிகளுக்குரிய நஷ்டஈட்டை வழங்கியே அவற்றைச் சுவீகரிக்கிறோம்.

இராணுவத்தினரால் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்குள் உள்ளடங்கும் பிரதேசங்களே சுவீகரிக்கப்பட்டுள்ளன.- என்றார்.

(த)

## அழுத்தம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நம் நாட்டில் இடம்பெற்ற போரின் பின்னர் பெரும் சவால்களை நாம் எதிர் கொண்டதுடன் கடந்த நான்கு வருட சமாதான காலத்தில் பல பாடங்களையும் கற்றுக் கொண்டோம். இதில் எமக்கு மிகப் பெரும் சவாலாக அமைந்தது இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவது ஆகும். அதனையும் நாம் பெரும் சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்தோம்.

இறுதிப் போரின் போது பல எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தனர். அந்த மக்களுக்கு உடனடி மருத்துவ வசதிகள், சமைத்த உணவு மற்றும் காலநிலைக்கு ஏற்ற வகையில் அவர்களுக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் நிறைவேற்றினோம்.

மருத்துவ முகாம்களை அமைத்தோம் குறிப்பாக புல்மோட்டையில் நடமாடும் மருத்துவமனையொன்றை அமைத்து அதில் இராணுவ மருத்துவர்கள் சேவை புரிந்தனர்.

இதேவேளை, சரணடைந்த புலி உறுப்பினர்களை நாம் விசாரணை செய்து புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தோம். இடம்பெயர்ந்த மக்களுக்கு கதிர்காமர், ஆனந்த குமாரசுவாமி மற்றும் மனிக்பாம் போன்ற நலன்புரி முகாம்களை அமைத்து உயர் உதவிகளை வழங்கினோம்.

இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் மீள் குடியேற்றத்துக்குத் தேவையான சந்தை வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், கோயில்கள், பாடசாலைகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அமைத்தோம்.

எமக்கு அடுத்த பாரிய சவாலாக, கைப்பற்றப்பட்ட பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அமைந்திருந்தன. அதனை அகற்றுவதற்குப் பல வெளிநாட்டு நிறுவனங்கள் குறிப்பாக டனிஷ் போன்றன எமக்கு உதவின. இதுவரை சுமார் அரை மில்லியன் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

மீள் குடியேற்றத்துக்காக இந்திய உதவியுடன் 40 ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். குறிப்பாக மீள்உருவாக்கத்துக்குத் தேவையான மனிதவளத்தை படையினர் அளித்தனர். இந்நிலையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான தொழில் உபகரணங்களை வழங்கினோம்.

இராணுவத்திடம் சரணடைந்த புலி உறுப்பினர்களை ஜனாதிபதியின் நோக்கத்தின் அடிப்படையில் சாதாரண வாழ்க்கையில் இணைத்துக் கொள்ளும் முகமாக அவர்களை விசாரணை செய்து, வகைப்படுத்தி புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்தோம்.

குறிப்பாக திருமணங்களை நிறைவேற்றிக்கொடுத்தோம். சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளில் தோற்ற அவர்களுக்கு ஆவன செய்தோம். இராணுவத்தினரிடம் சரணடைந்த 594 சிறுவர் போராளிகளைப் பாடசாலையில் இணைத்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆவன செய்தோம்.

தற்போது நாட்டில் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு பல புதிய பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களில் அதிகமாக தமிழ் இளைஞர்களே கடமையில் உள்ளனர்.

எனவே, எமக்கு அச்சுறுத்தல் கொடுக்கும் சர்வதேச நாடுகள் எம்மோடு இணைந்து செயற்பட்டால் நாட்டின் முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்ள முடியும்-என்றார்.

(த)

## இலங்கை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

**பதில்:** ஆம். எல்லாவற்றுக்குமே ஐக்கிய முற்போக்கு கூட்டணி 2 இன் தவறுகள் தான் காரணம். ஐக்கிய முற்போக்கு கூட்டணி 1 இன் காலத்தில் இந்திய இலங்கை கொள்கை புதைக்கப்பட்டு விட்டது. அப்போது தி.மு.க வின் ஆட்சி இடம்பெற்ற மாநில அரசை மத்திய அரசு கேட்கவில்லை. வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு இந்தியா சாட்சியாக இருந்தது. இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தோல்வி கண்டதால் தான் இந்தக் குழப்பநிலை நிலவுகிறது.

**கேள்வி** : தமிழ்நாட்டில் தமிழர்களுக்கான அனுதாப உணர்வு பலமாக இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** ஆம் நிச்சயமாக. இது ஒரு காட்டுத் தீ போன்றது. ஆனால் கண்ணுக்குத் தெரியாதது. வெளியே இது புகை போலத் தோன்றினாலும், தீ உறுதியானது.

கேள்வி : இப்போது இலங்கையைச் சீனா மடக்குகின்ற நிலையில், ஜனாதிபதி ராஜபக்ஷவை வலுப்படுத்துவதை விட எமக்கு என்ன தெரிவு உள்ளது?

**பதில்:** அனைத்துலக உறவுகள் தொடர்பான ஐக்கிய முற்போக்கு கூட்டணி 2 இன் பார்வை தவறானது. இது இந்திய வெளிவிவகார அமைச்சின் மீதுள்ள தவறு. ஆம், இலங்கையில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தவதற்கு ஒரு வழி உள்ளது. ஆனால் அதற்கு அரசியல் மனோபலம் தேவை.

**தமிழர்கள் கொல்லப்படுவதை இந்தியா வேடிக்கை பார்த்தது**

**கேள்வி:** தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட போது, இலங்கைக்கு எதிராக இந்தியா பலமான கரத்தைப் பயன்படுத்தியிருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? தலையிடாக் கொள்கையில் இந்தியா உறுதியாக இருக்கவும், விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்படுவதற்கு அனுமதித்ததற்கும் ராஜீவ்காந்தி கொலைச் சம்பவம் காரணம் என்பது உண்மையா?

**பதில்:** இலங்கை மீது நடவடிக்கை எடுப்பதற்கான மனோபலத்தை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி கொண்டிருக்கவில்லை. இராஜதந்திர வழிகளின் ஊடாக, உயர் அதிகார சக்திகள் இலங்கை மீது அழுத்தம் கொடுத்தன.

ஆனால் இந்தியா வேண்டுமென்றே தமிழர்கள் கொல்லப்படுவதை வேடிக்கை பார்த்தது. இந்தக் குற்றச்சாட்டு தமிழ்நாடு முழுவதிலும் உள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்களைக் காப்பாற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தவறிவிட்டதாக தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல் கட்சிகள் உணர்கின்றன. இலங்கையின் வடக்கு,கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமை கிடைப்பதற்கான மிகப் பெரிய தடைக்கல்லாக ராஜீவ்காந்தி கொலை அமைந்தது.

**கேள்வி:** தமிழீழத்துக்கு ஆதரவான உணர்வு தமிழ்நாட்டில் உச்சத்தில் இருந்தபோது, இந்தியாவுக்கு வேறு தெரிவு இல்லை. ஆனால், கொழும்புடன் நல்லுறவைப் பேணியது. எவ்வாறு சமனிலை ஆட்டம் ஆடமுடியும்?

**பதில்:** நான் அப்படி நினைக்கவில்லை. இந்தியாவுக்குப் பல விருப்பத் தெரிவுகள் இருந்தன. ஆனால் இந்திய அரசியல் தலைமைக்கு மனோபலம் தேவை. பல சந்தர்ப்பங்களில் இலங்கை மீது தடைகளை ஏற்படுத்தியிருக்க முடியும். அவர்களின் உள்பிரச்சினையில் இந்தியா ஈடுபட்டிருக்கத் தேவையில்லை.

இந்திராகாந்தி செய்தது போன்று துணிச்சலான அணுகுமுறை தான் இப்போது தேவைப்படுகிறது.ஆனால் துரதிஷ்டவசமாக,இந்திரா காந்தி போன்ற உயர்ந்த தலைவர்கள் இப்போது இல்லையே.

**கேள்வி:** இலங்கை விவகாரத்தில் இந்தியா சீரான கொள்கையைப் பின்பற்றக் கூடாதா? ஒன்றில் அவர்களை ஆதரிக்க வேண்டும் அல்லது முழுமையாக எதிர்க்க வேண்டும். இந்தக் குழப்பமான நிலை வெளிநாட்டுக் கொள்கை மீது தாக்கத்தைச் செலுத்தாதா?

பதில்: இந்தியாவினால் இன்னமும் முக்கிய பங்கை வகிக்கமுடியும். ஆனால், புதுடில்லியில் உள்ள தற்போதைய அரசு இல்லாத சூழலில் தான் அது சாத்தியம். இந்திய - இலங்கை உறவு என்பது தமிழ்நாட்டுடன் நேரடியாகத் தொடர்புபட்டது என்பது தான் எனது புரிதல். கடந்த 20 ஆண்டுகளில் அ.தி.மு.க.வும், தி.மு.கவும் தான் பதவியில் இருந்துள்ளன. மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணியும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும் ஆட்சியில் இருந் துள்ளன.

வாஜ்பாயின் தேசிய ஜனநாயகக் கூட்டணி தமிழர்களுக்கு ஆதரவாக இருந்தது. வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் படுகொலை செய்யப்படவில்லை. அப்போது இலங்கை விவகாரத்திலோ தமிழர்கள் விடயத்திலோ பழிவாங்கும் அணுகுமுறை இருக்கவில்லை. (த)

## பொதுநலவாய

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னரே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கை தன் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கத் தவறியுள்ளது என்றும் இலங்கையில் தொடர்ந்து மனித உரிமை மீறப்பட்டு சிவில் சமூகம் தாக்கப்படுவது நீதித்துறை தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன என்றும் விசனம் தெரிவித்துள்ள கனடா, பிரிட்டன் போன்ற முக்கிய நாடுகள் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளன.

இலங்கையில் மோசமாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள், சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசின் அசமந்தப் போக்கு ஆகியவை உட்பட மேலும் சில காரணங்களைக் கருத்திற்கொண்டு பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்தக் கூடாது என்று வாதம் முன்வைக்கப்படுவது தெரிந்ததே. (சி-த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எந்தக் கொம்பனும் வாலாட்ட முடியாது என்ற போக்கில்....

தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை அவர்கள் விரும்பும் வகையில், அல்லது அனைத்துலக நாடுகள் நிர்ணயிக்கும் விதத்தில் வழங்க இயலாது. அரசாங்கம் எவை சரியெனக் கருதுகிறதோ அவை மட்டுமே வழங்கப்படும் என்பது இப்போது தெட்டத் தெளிவாகிவிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சுதந்திரதின உரை அதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

அதற்கும் மேலாக, தமிழர்களின் நிலங்களை கபளீகரம் செய்வதே அரசினதும் படையினரதும் முதன்மை இலக்காக இப்போது உருவெடுத்துள்ளது. பாதுகாப்பு வலயங்கள் படையினருக்கே உரியவை; அவை அமைந்துள்ள (தமிழ் மக்களின்) காணிகளை அரசுடைமையாக்க - சுவீகரிக்க - நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி நேற்றுத் தெரிவித்திருப்பது, தமிழர்கள் தமது சொந்த மண் என்று எதனையும் உரிமை கொண்டாட முடியாது, கொழும்பு அரசுக்கே முதன்மைத்துவ உரித்து என்ற நிலையை தொட்டுக்காட்டி உள்ளது.

அண்ணளவாக 18 கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிப் படையினர் அமைக்கும் பாதுகாப்பு வேலி தொண்டைமானாறு தொடங்கி கட்டுவன், ஒட்டகப்புலம், காங்கேசன்துறை வரை நீள்கிறது. அவற்றின் உரிமையாளர்களின் கண்முன்னாலேயே எல்லை அருகில் உள்ள வீடுகள் புல்டோசர் கொண்டு இடிக்கப்படுகின்றன.

துறைமுக, விமானநிலைய விஸ்தரிப்புகளுக்கு பாதுகாப்பு அவசியம் என்றும் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு தற்போதைய பெறுமதியில் நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார். ஆகவே, வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படமாட்டாது என்பது தற்போது உறுதியிலும் உறுதியாகிவிட்டது.

1991 ஆம் ஆண்டுக்கு முன்னர், உயர்பாதுகாப்பு வலயம் அமைக்கப்படு முன்னர், குடாநாட்டின் பொருளாதாரத்தில் வலிகாமம் வடக்கு முக்கிய பங்கு வகித்தது. சிறந்த மண்வளம் உடைய பூமி இது. மரக்கறி, வெங்காயம் என்பவற்றின் அபரிமித விளைச்சல் மூலம் குடாநாட்டின் தேவை பெருமளவு பூர்த்திசெய்யப்பட்டது. மயிலிட்டித் துறைமுகம் ஊடாக குடாநாட்டுக்குத் தேவையான கடல் உணவுகள் கிடைத்தன. இலங்கையின் கடலுணவுத் தேவையில், மூன்றில் ஒரு பங்கை மயிலிட்டியே பூர்த்தி செய்து வந்தது.

ஆனால் இன்று, 28 சதுர கிலோமீற்றர் பகுதி இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் உள்வாங்கப்பட்டுவிட்டது; கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தினர் அங்கு வேளாண்மை செய்கிறார்கள்; போக்கட் உற்பத்தி செய்கிறார்கள்; உல்லாச விடுதி நடத்துகிறார்கள். எதிர்காலத்தில் பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் உள்ள யூதக் குடியிருப்புகள் போன்ற பெரும் நிலப்பரப்பு வடபகுதியில் உருவாகிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இந்தளவு பெரும் பகுதியை சமாதான காலத்தில் எந்த ஒரு நாடும் கையகப்படுத்தியதில்லை.

இத்தகைய நிலையில், மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கான ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவத்தால் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதைக் கண்டித்தும், மக்களை மீளக்குடியமர்த்துமாறு கோரியும் எதிர்வரும் வெள்ளியன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ள அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு உட்படப் பல அரசியல் கட்சிகள், மற்றும் மக்கள் அமைப்புகள் பங்குகொள்கின்றன. இதில் ஆகப்பிந்திய திருப்பம் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கி இருப்பதுதான். அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ள உள்ளார்.

எதிர்வரும் ஏப்ரலில் பொதுநலவாய அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக் குழுக்கூட்டமும், மார்ச்சில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டமும் நடைபெறவிருப்பதால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

59.5 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புடைய வலிகாமம் வடக்கு 45 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டது. 2012 இறுதிவரை 21 பிரிவுகளில் மீளக்குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் 24 கிராமசேவையாளர் பிரிவுகள் இன்னும் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்து வருகின்றன.

1981 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பிரகாரம், வலி.வடக்கில் 26 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 618 பேர் வாழ்ந்தனர். 1987க்குப் பின்னர் போர்ச் சூழல் காரணமாக அத்தனை பேரும் வெளியேற நேரிட்டது. அவ்விதம் வெளியேறிய மக்களில் மீளக்குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்பட்ட 21 கிராமசேவகர் பிரிவு மக்கள் தவிர்ந்த ஏனையோர் அகதிமுகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் குடியிருந்து அல்லாடுகிறார்கள்.

இந்த மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்படுவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். போரின் போது பாதுகாப்புக் கருதி உயர் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் போர் முடிவடைந்து மூன்றரை ஆண்டுகள் கடந்த இன்றைய சமாதான காலத்திலும், உயர்பாதுகாப்பு வலயத்தை தொடர்ந்து பேணும் நோக்கில் அதனைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது, அரசியல் தீர்வில் இலங்கை அரசுக்கு ஒரு துளியேனும் அக்கறை கிடையாது என்பதை நூறு சத வீதம் உறுதிப்படுத்துகிறது.

அதுமட்டுமன்றி, அனைத்துலக நியமங்களுக்கு இசைவாகச் செயற்பட வேண்டும் என்ற கட்டாயம் தனக்கு இல்லை. இலங்கை மீது எந்தக் கொம்பனும் வாலாட்ட முடியாது என்பதனையும் இந்த நிலைப்பாடு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அனைத்துலக நியமங்களுக்கு நேருக்குநேர் தலையடி போடும் போக்கு, ஒரு சவாலாகப் பதிவாகி உள்ளது. செய்வதைச் செய்து பார் என்ற கெஞ்சிதமும் மேலோங்கி நிற்கிறது.



# வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் உரிய வகையில் நடைமுறையில் இல்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.12

வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை கல்வி அமைச்சோ, கல்வி அதிகாரிகளோ உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதில்லை.

அதனாலேயே கடந்த வருடமும் கல்வித்துறை மீதான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவது இன்றுவரை அதிகரித்துள்ளமைக்கும் இதுவே காரணம்.

இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளமைவருமாறு:-

மேல் மாகாணத்தில் பாடசாலைத் தேவைக்காக எட்டுத் தேங்காய்களைத் திருடிய குற்றச்சாட்டில் பதின்மூன்று வயதுடைய மாணவி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பாடசாலைகளால் மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடப்படுவது வடக்கு மாகாணம் உட்பட நேரடியாகவும் மறைமுகமாகவும் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலைகளில் ஏராளமான தேவைகளை நிறைவு செய்வதற்காக மாணவர்களிடமிருந்தே பல காரணங்கள் முன்வைக்கப்பட்டு பணம் அறவிடப்படுகிறது.

மாணவர்கள் திருட்டில் ஈடு பட்டு பணம் பெற்றுப் பாட சாலைக்குச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளமையே குறித்த மாணவியின் செயற்பாடு வெளிக்காட்டுகிறது.

பல சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் அவற்றை கல்வி அமைச்சோ அதிகாரிகளோ பின்பற்றுவதில்லை.

கல்வித்துறை மீதான முறைப்பாடுகள் முன்னரைவிட கடந்த வருடம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இத்தகைய அதிகாரிகளின் கவனயீனமான செயற்பாடுகளாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதத்தைக் கல்விக்கு ஒதுக்குமாறு கோரி வருகிறோம்.

பாடசாலைகளுக்குத் தேவையான நிதி வழங்கப்படுமிடத்து மாணவர்கள் மீதான தாக்கம் மிகக்குறைவாக இருக்கும்.

ஆனால் அவற்றைக் கவனித்துக் கொள்ளாத நிலையிலேயே மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவது முன்னரைவிட அதிகரித்துள்ளது. இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இனிவரும் காலங்களிலாவது உரியமுறையில் செயற்பட அதிகாரிகள் அனைவரும் முன்வர வேண்டும்-என்றார். (ம-4)

# வலிகாமம் வலயத்துக்கு 11 ஆசிரியர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.12

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர்களுக்கு வலயங்களுக்கிடையிலான 2013 இடமாற்றல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய வலயங்களிலிருந்து 11 ஆசிரியர்கள் வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றல் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இருந்து ஐந்து ஆசிரியர்களும் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து தலா மூன்று ஆசிரியர்கள் வீதமும் இடமாற்றல் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றல் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் விவரங்களும் தற்போது கடமையாற்றும் பாடசாலைகளும் வருமாறு:-

**யாழ்ப்பாணக் கல்வி வலயம்**

திருமதி தவநாயகி கனகரத்தினம்-ஆனைப்பந்தி மெ.மி.த.க.பா, திருமதி சிவசக்தி நந்தகுமார்-கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண ம.வி, திருமதி கேமாவதி சிவலிங்கம்-புத்தூர் மடிகே பஞ்சகே வித்தி, திருமதி சசிகலா ஜெயகுமார்-அச்சுவேலி சரஸ்வதி வித்தி, திருமதி செல்வராணி ரமேஸ்குமார்-உரும்பிராய் இந்துக் கல்லூரி.

**தென்மராட்சி கல்வி வலயம்**

திருமதி சிவாசினி சேனாதிராசா- குடமியன் அ.த.க.பா, திருமதி புஷ்பராணி தனபாலசிங்கம்-நாவற்குழி ம.வி, திருமதி பவீந்திரராணி விஜயகுமார்-கச்சாய் அ.த.க.பா.

**வடமராட்சி கல்வி வலயம்**

திருமதி ராசிகா வீரவதனன்-துன்னாலை தெற்கு அ.த.க.பா, சகோதரி மேரி வினோதா-வதிரி திரு இருதயக் கல்லூரி, பத்மநாதன் பத்மகாந்தன்-கொற்றாவத்தை அ.மி.த.க.பா.

மாகாண கல்வித் திணைக்களத்தால் வலயங்களுக்கு இடையில் செய்யப்பட்ட ஆசிரியர் இடமாற்றல் பட்டியலுக்கு புறம்பாக அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களால் சிபார்சு செய்யப்பட்ட 11 ஆசிரியர்களே இடமாற்றல் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆசிரியர்களுக்கு ஆசிரியப் பரம்பலை சீராக்கம் செய்யும் வண்ணம் வெற்றிடப் பாடசாலைக்கு முக்கியத்துவம் அளித்து வெற்றிடமுள்ள பொருத்தமான பாடசாலையை வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

முன்னர் வெளியான இடமாற்றல் பட்டியலில் குறிப்பிட்ட ஆசிரியர்கள் நேற்று தத்தமது வலயங்களுக்கு வருகை தந்து பொருத்தமான பாடசாலைக்கு வலயங்களில் கடிதங்களைப் பெற்றுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# மத்தியஸ்த சபையினர் களத்துக்கு செல்வது தவிர்க்கப்படல் வேண்டும்

## மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

மத்தியஸ்தர் சபை உறுப்பினர் பிணக்குகள் தொடர்பில் இடப் பரிசோதனைகளுக்கு (வெளிக்களப் பரிசோதனை) சமுகமளித்து இடப் பரிசோதனை நடத்துதலாகாது என்று மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் மிக வெற்றிகரமாகவும், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புப் பெற்றுத் திகழும் அனைத்து மத்தியஸ்த சபைகளுக்கும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ள சுற்றிக்கை ஒன்றில் இதனை வலியுறுத்தியுள்ளது.

மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவின் சார்பில் பதில் செயலாளர் வாசனா.பி.குணரத்ன இந்தச் சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

**இடப் பரிசோதனைகள்**

மத்தியஸ்தர் சபைகளில் பிணக்குக்காரர்களிடையே மத்தியஸ்தத்தை மாத்திரமே ஏற்படுத்த வேண்டும். மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் இடப் பரிசோதனை வெளிக்களப் பரிசோதனை நடத்தலாகாது.

மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2002 இன்படி காணிகளைப் பிரித்து ஒதுக்குவது மத்தியஸ்தர்களால் செய்யப்படுதலாகாது.

ஆதலால் காணிகளைப் பிரித்து ஒதுக்கும் அலுவல்களில் தலையிடாமல் கட்சிக்காரர்களுக்கு இடையே மத்தியஸ்தம் ஏற்படுத்துவது மாத்திரமே செய்யப்படல் வேண்டும்.

**கூட்டங்கள் நடத்துதல்**

மாதமொன்றுக்கு 4 மத்தியஸ்தர்கள் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவது கட்டாயமாகும். இந்த நாள்களில் மத்தியஸ்த சபை உறுப்பினர்களின் கூட்டங்களை நடத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாகாது.

மத்தியஸ்தர் சபைக் கூட்டங்கள் நடைபெறும் நாள், போயா விடுமுறை போன்ற விசேட விடுமுறை நாளொன்றாக இருப்பின் அதற்குப் பதிலாக வேறு வசதியான நாளொன்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விடுமுறைபெறல்**

மத்தியஸ்த சபை ஆணைக் குழுச் சுற்றறிக்கை 02/2010 இல் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளுக்கு மேலதிகமாக மத்தியஸ்தசபை நடைபெறும் நாள்களில் ஒரு நாளுக்கு மேற்பட்டதாக விடுமுறை பெறுவதாயின் தலைவர் உட்பட சகல உறுப்பினர்களும் மத்தியஸ்த சபை ஆணைக் குழுவுக்கு அறிவித்து விடுமுறைகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்.

மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படும் உச்ச விடுமுறை காலப் பகுதி மூன்று மாதங்களாகும். மூன்று மாதங்களுக்கு மேலாக விடுமுறை பெறுதல் உறுப்புரிமை இடைநிறுத்தப்படுவதற்கு ஒரு காரணமாக அமையும்.

அத்தகைய சந்தர்ப்பங்கள் இருக்குமாயின் தலைவர்களால் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**வருகை அறிக்கை**

மத்தியஸ்தர்சபை ஆணைக்குழு சுற்றறிக்கை 2006/3 இன் படி ஒவ்வொரு மாதத்துக்குமான வரவு அறிக்கை அடுத்துவரும் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவுக்கு தலைவர்களால் கட்டாயம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**ஆண்டு விழாக்கள்**

மத்தியஸ்தர் சபை ஆணைக் குழு சுற்றறிக்கை 01/94 இன் படி வருடாந்தக் கூட்டங்களை நடத்துவதாயின் அதற்காக ஆணைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதோடு அதன் பின்னர் அழைப்பதற்கு எதிர்பார்க்கும் ஆள்களின் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிக்கவும் வேண்டும்.

அத்துடன் போட்டிகளை நடத்தச் சான்றிதழ்களை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாயின் போட்டி விவரங்கள் மற்றும் சான்றிதழ்களின் வரைவையும் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்.- என்றுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் பிரதிகள் சகல மாவட்ட மத்தியஸ்தர் பயிற்சி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-30)

# மன்னாரில் 18ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம்

மன்னார்,பெப்.11

மன்னாரில் எதிர்வரும் 18 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை விவசாயிகள் முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப்புக்களும், விவசாயிகளும் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 18 ஆம் திகதி மன்னார் உயிலங்குளம் பகுதியில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி காரணமாக மன்னார் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் அழிவடைந்தன. அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் முகமாக அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற போது விவசாயிகளினால் குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், விவசாய அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பிரதான வாய்க்கால் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்தது.

இதன்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படவில்லை. விவசாயிகள் வங்கியில் பெற்றுக் கொண்ட கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

நகைகளை வங்கியில் வைத்துப் பணத்தைப் பெற்றவர்கள் திரும்பவும் நகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

வடமாகாணத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அரசினால் உதவித் திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. இதனால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளும் தற்போது பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதோடு விவசாயக் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அரசினால் வடமாகாண விவசாயிகள் சகல விடயங்களிலும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதைக் கண்டித்து எதிர்வரும் 18 ஆம் திகதி அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து மன்னார் உயிலங்குளம் பகுதியில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து அரச அதிபருக்கு மனுவொன்றைக் கையளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (க-12)

# மாற்றுத்திறனாளிகள் வளர்த்தெடுக்கப்படுவர்

### விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.11

மாற்றுத் திறனாளிகளை விளையாட்டுத் துறையில் வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு, தெரிவித்துள்ளார் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே.

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வருகை தந்த விளையாட்டுத்துறை அமைச்சர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாற்றுவலுவுடையோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது மாற்றுத் திறனாளிகள் பரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் செ.சிறிநிவாசன், கிளி.முல்லை.மாவட்டங்களின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக விளையாட்டுத்துறை அமைச்சர் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விளையாட்டு மைதானத்தையும் பார்வையிட்டார்.

கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் மட்டும் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அங்கவீன முற்றவர்களாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# அபிவிருத்தித் திட்டங்களில் புறக்கணிக்கப்படுவதாக விசனம்



மன்னார், பெப்.12

முசலிப் பிரதேசத்திலுள்ள சில கிராமங்கள் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் போது புறக்கணிக்கப்படுவதாக கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த போரின்போது மன்னார்-முசலிப் பிரதேசம் அதிகமான பாதிப்புக்களையும் இழப்புக்களையும் எதிர்கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது.

ஆனால் முசலிப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் போது பாகுபாடு காட்டப்படுவதாக சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பூனைச்சிக் குளம் மற்றும் பண்டாரவெளி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள மணற்குளம், இலந்தைக் குளம் மற்றும் வெளிமலை ஆகிய மீள்குடியமர்வுக் கிராமங்களில் உள்ள பிரதான வீதிகளும் உள்ளக வீதிகளும் இன்று வரையும் செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இதனால் மழை காலங்களில் பாடசாலை மாணவர்களும், கர்ப்பிணித் தாய்மாரும், முதியவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

முசலிப் பிரதேச சபையின் கீழ் உள்ள அரிப்பு வீதி, சவேரியார்புரம் வீதிகள் என்பன கொங்கிறீட் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் போரினால் பாதிப்புக்களை எதிர்கொண்ட முசலியில் பல வீதிகள் இன்னும் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே இந்த வீதிகளையும் புனர் நிர்மாணம் செய்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முசலிக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

# கணேசபுரம் பகுதியில் கால்நடைகளால் அழிவு

கிளிநொச்சி,பெப்.11

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் இரவு வேளைகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகள் பெரும் பயிரழிவுகளை ஏற்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் தற்போது நெல் அறுவடை மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் அதிகளவு நெற்கதிர்கள் இன்னமும் அறுவடை செய்யப்படவேண்டியுள்ளன. ஆனால் இரவு வேளைகளில் ஜெயந்திநகர், கணேசபுரம், திருநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த கட்டாக்காலி கால்நடைகள் நெற்செய்கை நிலங்களுக்குள் புகுந்து பெரும் பயிரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் பயிர்செய்கையினை மேற்கொண்டு அறுவடையைக் கூட மேற்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் பயிர்களை கால்நடைகள் அழித்து வருகின்றமை அவர்களுக்கு மேலும் நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# அக்கராயன் ம.வியில் துப்புரவுப் பணிகள்

அக்கராயன்,பெப்.12

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் துப்புரவுப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பாடசாலையின் மைதானம் மற்றும் ஆசிரியர்களின் விடுதிகள் என்பன வற்றிலேயே துப்புரவுப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் பெய்த மழை காரணமாக புற்கள் வளர்ந்ததை அடுத்து பாடசாலை முதல்வர் எடுத்த முயற்சி காரணமாக இந்த துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டு வருகின்றது. தற்போது முன்பக்க வேலி அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மேற்கில் உள்ள முக்கிய பாடசாலையான அக்கராயன் மகா வித்தியாலயத்தில் பல பௌதிக வளப்பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் இந்தப் பாடசாலை உள்வாங்கப்பட்டுள்ளதால் பௌதிக வளப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உறுதி அளித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-18)

# கடைகளின் திறப்புக்களை வழங்குமாறு கடிதம்

### கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் அனுப்பி வைத்தார்

கிளிநொச்சி,பெப்.12

கிளிநொச்சிச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கடைகளின் திறப்புக்களை வழங்குமாறு கோரும் கடிதமொன்றை கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலருக்கு இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிச் சந்தையின் வர்த்தக நிலையங்களை வழங்குவது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்குகளுக்கான தடையாணை கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தால் நீக்கம் செய்யப்பட்ட நிலையில் கடைகளின் திறப்புக்கள் ஒப்படைக்காமை குறித்தும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

மேலும் வர்த்தகர்கள் ஏக காலத்தில் சந்தையினுள் வியாபாரத்தை மேற்கொள்ளும் வகையில் கடைகளின் திறப்புகளை ஒப்படைக்குமாறும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (க-115)

# பாலம் அமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன், பெப்.12

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்திலுள்ள பாடசாலை செல்லும் வீதியில் பாலம் ஒன்றை அமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் மேட்டுக் காணியில் பாடசாலை செல்லும் வீதியிலேயே பாலம் ஒன்றை அமைக்குமாறு கிராம மக்கள் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பலவன் சின்னக்குட்டுக் குளம் அமைந்துள்ள பகுதியில் இந்தப் பாலத்தை அமைக்குமாறும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேவேளை இந்தக் கிராமத்தில் முன்பள்ளி அமைக்கப்படுதல், விநாயகர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்தல், தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல், சனசமூக நிலையம் உருவாக்குதல் ஆகிய கோரிக்கைகளையும் மக்கள் விடுத்துள்ளனர். மேலும் காணிகளுக்கான ஆவணங்களை வழங்குதல், அனைத்து வீதிகளையும் புனரமைத்தல், மின்சாரம் வழங்குதல், நிரந்தர வீடுகள் வழங்கப்படல் ஆகிய கோரிக்கைகளையும் அம்பலப் பெருமாள்குளம் கிராம மக்கள் விடுத்துள்ளனர். (க-18)



கிளிநொச்சி புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெற்ற உள்ளகவிளையாட்டுப் போட்டி செயற்பாட்டை ஆசிரியர் அ.க.சகாயராஜா மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். (க-18)

### இல்ல மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மை திறனாய்வு போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் ஹெ.அன்ரன்மரியதாஸ் தலைமையில் போட்டிகள் ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.புவனராஜா வும், சிறப்பு விருந்தினராக சிங்கர்பிளஸ் கிளிநொச்சி முகாமையாளர் க.விஜயரூபனும், கௌரவ விருந்தினர்களாக கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம் சிவனருள் கல்விப் பிரிவின் இணைப்பாளர் இ.சுதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-6)

## நாகவிகாரை இறங்குதுறைக்கு மின் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.12

நயினாதீவு நாகவிகாரைக்கு முன்பாகவுள்ள இறங்குதுறைப் பகுதிக்கு மின்சார விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இறங்குதுறைப் பகுதியைச் சூழவுள்ள பகுதிக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இன்று யாழ்ப்பாணம் வருகைதரவிருக்கும் ஜனாதிபதி நயினாதீவுக்கும் செல்லவுள்ளார். அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த இறங்குதுறையை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து ஜனாதிபதி நாகவிகாரை, நாகபூசணி அம்மன் ஆலயம் போன்றவற்றுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொள்வார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-17)



2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 10 ஆம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மாணவி நிரோஜினிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சித்தங்கேணி நாமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் ஜெ.ஜெயராணி, வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ம-14)

## சூரியகாந்தி எண்ணெய் சங்கானையில் உற்பத்தி

**மகளிர் குழுக்கள் ஊடாக சுயதொழிலாக உற்பத்தி இடம்பெறுகிறது.**

யாழ்ப்பாணம்,பெப்.12

சங்கானை பிரதேசத்தில் இயற்கை முறையிலான சூரியகாந்தி எண்ணெயை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை மகளிர் குழுக்கள் ஊடாக வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

சங்கானைப் பிரதேசத்தில் சுயதொழில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக ஆர்வமுடைய மகளிரை குழுக்களாக அமைத்து அந்தக் குழுக்களில் உள்ள பெண்கள் சுயதொழில் ஊடாக வருமானத்தைப் பெறக் கூடியதாக இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி சூரியகாந்தி எண்ணெயைத் தயாரிக்கும் வகையில் தகுந்த வழிகாட்டல்களை இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

தயாரிக்கப்பட்ட எண்ணெயை சந்தைப்படுத் தவும் அதனூடாக கூடிய வருமானத்தைப் பெறக் கூடியதாகவும் வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவன உத்தியோகத்தர்களால் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.

மகளிர் குழுக்கள் ஊடாக விற்பனை செய்யப்படும் சூரியகாந்தி எண்ணெய் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படுவதால் அதிக எண்ணிக்கையான பெண்கள் சுயதொழில் வருமானத்தையும் பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

## நிறுத்தல் அளவைக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், பெப்.12

வேலணை உப அலுவலக எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிறுவனங்களின் தராசுப் படிகள் அளவை நிறுக்கும் கருவிகளுக்கு இன்று செவ்வாய்க் கிழமையும் முத்திரையிடப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகளால் வேலணை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை முத்திரையிடப்படவுள்ளதால் சகல வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்களது நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுச் செல்லுமாறு வேலணைப் பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ம-14)

# 12 இலட்சத்து 89 ஆயிரம் ரூபா நிதியில் சர்வோதயத்தின் கல்விச் செயற்றிட்டம்

**யாழ். மாவட்டத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம்,பெப்.12

வட இலங்கை சர்வோதய நிறுவனத்தால் புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் கடந்த வருடம் 12 இலட்சத்து 89 ஆயிரம் ரூபா நிதியில் கல்விச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கல்விச் செயற்பாடுகளில் பிரான்ஸில் உள்ள புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தால் வழங்கப்பட்ட 5 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா நிதியுதவியில் 11 முன்பள்ளிகளைச் சேர்ந்த 13 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேதன உதவித் திட்டமும், இதே அமைப்பால் 9 முன்பள்ளிகளைச் சேர்ந்த 208 மாணவர்களுக்கு ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபா நிதியில் சத்துணவும் வழங்கப்பட்டன.

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் குடும்பங்களால் வழங்கப்பட்ட ஒரு இலட்சத்து 98 ஆயிரம் ரூபா நிதியுதவியில் 105 மாணவர்களுக்கு பரீட்சைக்கு தயார்படுத்தும் உதவிகளும் புலம்பெயர் உதவி நிதியத்தால் 90 ஆயிரம் ரூபா நிதி பாடசாலைகளுக்கு ஊக்குவிப்புத் திட்டத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

லண்டன் உதவி நிதியத்தால் 2 இலட்சத்து 22 ஆயிரம் ரூபா நிதியுதவியில் 12 பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித் திட்டமும் லண்டன் புங்குடுதீவு நலன்புரி சங்கத்தின் 41 ஆயிரம் ரூபா நிதியுதவியில் 15 மாணவர்களுக்கு கணினி வகுப்புத் திட்ட கற்கை நெறிகளுக்கு உதவியும், கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தால் 60 ஆயிரம் ரூபா நிதியுதவியில் 5 மாணவர்களுக்கு பல்கலைக்கழக மற்றும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.(ம-14)

## குழு மோதலில் பெண் உட்பட நால்வர் காயம்

தென்மராட்சி,பெப்.12

மட்டுவில் தெற்குப் பகுதியில் இரு பகுதியினருக்கிடையே இடம்பெற்ற மோதலில் பெண் உட்பட நால்வர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த செல்வரத்தினம் குணமணி (வயது-60), இவரது மகனான செல்வரத்தினம் யோகராஜன் (வயது- 24), கைதடி நுணாவிலைச் சேர்ந்த புலேந்திரன் தனுஷன் (வயது-22), துரைராஜசிங்கம் சதீஸ் (வயது-33) ஆகிய நால்வருமே காயமடைந்தவர்களாவர்.

இந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம-9)

## பாதையை விட்டு விலகிய பஸ்

வடமராட்சி,பெப்.12

பருத்தித்துறை ஆழியவளை வீதியில் சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகியது.

குடாரப்புக்கும் நாகர் கோயிலுக்கும் இடையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தால் பயணித்த பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகினர்.

ஆழியவளையில் இருந்து பருத்தித்துறை நோக்கி தனியார் பஸ் வந்து கொண்டிருந்த வேளை பருத்தித்துறையில் இருந்து ஆழியவளை நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸுக்கு வழிவிட்டுக் கொடுக்கும் பொழுது இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீதி மோசமாகச் சேதமடைந்ததாலேயே இது போன்ற சம்பவங்கள் இந்த வீதியில் இடம்பெற்று வருவதாக பயணிகள் விசனம் தெரிவித்தனர். (ம-8)

## புங்குடுதீவை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

**"2030 ஆம் ஆண்டில் பண்பாட்டின் தளத்தில் வளமுள்ள புங்குடுதீவு நோக்கி"**

கொழும்புத்துறை,பெப்.12

புங்குடுதீவு சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் "2030 ஆம் ஆண்டில் பண்பாட்டின் தளத்தில் வளமுள்ள புங்குடுதீவு நோக்கி" என்னும் வேலைத் திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

புங்குடுதீவை பல்வேறு துறைகளில் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக மாற்றுவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் என்று புங்குடுதீவு சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கவிதை, கட்டுரை, பேச்சு, சுவரொட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டுள்ளது. (ம-135)

## 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அடுத்த போக வெங்காயச் செய்கை

**முதற்கட்டப் பணிகளில் விவசாயிகள்**

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். மாவட்டத்தில் அடுத்த போகத்துக்கு 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை மற்றும் அதன் விலை அதிகரிப்பு போன்றவற்றை அடுத்து, அடுத்த போகத்தில் அதிக நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்காக விவசாயிகள் தற்போது தமது விவசாய நிலங்களை சீர்செய்து வருகின்றனர்.

பெரும்பாலான விவசாயிகள் கடந்த வாரத்தில் பெய்த மழையை பயன்படுத்தி தமது விவசாய நிலங்களை உழுதும் பசளையிட்டும் வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க ஏற்கனவே வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தற்போது அவற்றை அறுவடை செய்து வருகின் றனர்.

கடந்த வாரத்தில் பெய்த கனத்த மழையால் விவசாய நிலங்களில் வெள்ளம் ஏற்பட்டமையால் வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## கே.கே.எஸ். வீதியில் நடைபாதை அமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கை அண்மித்த கே.கே.எஸ். வீதியின் இரு பகுதிகளிலும் நடைபாதையமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சிமெந்துக் கலவை மூலம் இந்த வீதியின் இரு பக்கமும் நடைபாதை போடப்பட்டு வருகின்றது.

வீதியின் இரு பகுதிகளுக்கும் 2மீற்றர் அகலத்துக்கு நடைபாதை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நடைபாதை முற்றவெளி தனியார் பஸ் தரிப்பிட சுற்றுவட்ட வீதிவரைக்கும் அமைக்கப்படவுள்ளது.

அதே வேளை கே.கே.எஸ். வீதியில் முனீஸ்வரன் வீதி புல்லுக்குள சுற்றுப்பகுதி தற்போது அகலிக்கப்பட்டு காப்பெற் போடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## எரிபொருள் மானிய முத்திரை வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ்.குடாநாட்டில் மீனவர்களுக்கு ஜனவரி மாதத்துக்குரிய எரிபொருள் மானிய முத்திரைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த மானிய முத்திரைகள் விநியோகித்து முடிந்ததும் பெப்ரவரி மாதத்துக்குரிய முத்திரை விநியோகப்பணி இடம்பெறும் என்று கூறப்பட்டது.


பெப்ரவரி மாதத்துக்கான முத்திரைகள் இந்த மாத நடுப்பகுதியில் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஜனவரி மாதத்துக்கு மானிய முத்திரையைப் பெற்றுக் கொண்ட மீனவர்களுக்கு அதற்கான எரிபொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)



உத்தரப்பிரதேச மாநிலம், அமேதியில் சுற்றுப்பயணம் செய்துவரும் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுலுடன் கை குலுக்கி மகிழும் பாடசாலை மாணவர்கள்.

30 நிமிடத்தில் 38 யோகாசனங்கள்

## தண்ணீரில் மிதந்தபடி சாதனை நிகழ்த்திய ஆந்திர முதியவர்



ஹைதராபாத், பெப்.12

ஆந்திராவில் 70 வயதான ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர், தண்ணீரில் மிதந்தபடி 30 நிமிடத்தில் 38 யோகாசனங்களைச் செய்து சாதனை படைத்துள்ளார்.

ஹைதராபாத்தின், தில்சுக் நகர் பகுதியைச் சேர்ந்தவர் வைநரசிம்மமூர்த்தி. ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளரான அவர், தண்ணீரில் மிதந்தபடி, 'ஜல யோகா' சாதனைகளை நிகழ்த்துபவர். 'சாதனைகளுக்கு வயது தடையில்லை' என்பதை நிரூபிக்கும் வகையில் அண்மையில் அவர் நிகழ்த்திய 'ஜல யோகா' சாதனை, தெலுங்கு உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. தண்ணீரில் 30 நிமிடங்கள் மிதந்தபடி 38 யோகாசனப் பயிற்சிகளை அவர் செய்து காண்பித்தார்.

'30 நிமிடத்தில், 30 யோகாசனங்களை செய்யப் போகிறேன்' என்று அறிவித்து தண்ணீரில் இறங்கியவர் விறுவிறுவென 38 யோகாசனங்களைச் செய்து காட்டினார். அதை தெலுங்கு உலக சாதனைப் புத்தக நிர்வாகிகள் பதிவு செய்தனர்.

## இந்தியா–பிரான்ஸ் கூட்டுமுயற்சியில் உருவாகிய செயற்கைக்கோள்

### இந்தமாத இறுதியில் விண்ணுக்கு

டில்லி, பெப்.12

இந்தியா - பிரான்ஸ் கூட்டுமுயற்சியில் உருவான செயற்கைக்கோள் இந்த மாத மாத இறுதியில் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா, பிரான்ஸ் கூட்டுமுயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது 'சரள்' செயற்கைக்கோள். சுற்றுச்சூழல் பற்றிய ஆய்வுகள் தொடர்பாக கடலில் ஏற்படும் மாற்றங்களை அறிய குறித்த செயற்கைக்கோள் மூலம் தகவல்கள் பெறப்படும். இதனால் மழை வாய்ப்பு, கடலின் பரப்பில் ஏற்படும் மாற்றங்கள், அதன் மூலம் கரையோரங்களில் ஏற்படக் கூடிய பாதிப்பு, சுனாமி ஆபத்து போன்றவை குறித்து அறிய முடியும்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) ஏவுதளமான ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து மேற்படி செயற்கைக்கோள் ஏவப்படுகிறது. எதிர்வரும் 22-25 வரையில் ஏதாவது ஒரு நாளில் இந்தச் செயற்கைக்கோளை ஏவத் திட்டமிடப்பட்டுள்ளது.

450 கிலோ எடையுள்ள குறித்த செயற்கைக்கோளின் இரு முக்கிய பாகங்களை பிரெஞ் தேசிய விண்வெளி ஆய்வு நிலையம் வழங்கியிருக்கிறது. அந்தச் செயற்கைக்கோளை வடிவமைத்து, உருவாக்கி, விண்ணில் செலுத்துவதோடு அது செயற்படும் காலம் முழுவதும் அதனைப் பராமரிப்பது இஸ்ரோவின் பங்களிப்பு.

அதனை கடந்த டிசெம்பர் மாதம் விண்ணில் செலுத்த திட்டமிட்டிருந்த போதிலும், கூடுதல் சோதனைகள் நடத்துவதற்காக பிற்போடப்பட்டது. (வ)

# அலகாபாத் ரயில் நிலையத்தில் நெரிசலில் சிக்கி 36 பேர் சாவு

### கும்பமேளாவுக்குச் சென்று ஊர் திரும்பியபோது நிகழ்ந்த அவலம்





அலகாபாத், பெப்.12

உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத் கும்பமேளா விழாவில் பங்கேற்றுவிட்டு திரும்பும் போது ரயில் நிலைய நெரிசலில் சிக்கி 36 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் பலரது நிலை கவலைக்கிடமான நிலையில் இருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

உத்தரப் பிரதேச, மாநிலம் அலகாபாத் பிரயாகையில் மகா கும்பமேளா நடைபெற்றது. கடந்த மாதம் 14 ஆம் திகதி கும்பமேளா ஆரம்பமாகியது. நேற்று முன்தினத்துடன் விழா நிறைவடைந்தது. நேற்று முன்தினம் தை அமாவாசை என்பதால் அங்கு 3 கோடி பேர் புனித நீராடினர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்திருந்த பக்தர்கள், கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் புனித நீராடினர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் மாலை கும்பமேளாவில் கலந்து கொண்டவர்கள் தங்கள் ஊருக்குச் செல்வதற்காக அலகாபாத் ரயில் நிலையத்தில் குவிந்தனர். ரயில் நிலையத்தில் கடும் நெரிசல் ஏற்பட்டது.

மாலை 7 மணியளவில், அலகாபாத் ரயில் நிலையத்தில் 5 மற்றும் 6 ஆவது கட்டடங்களுக்குச் செல்ல பயன்படும் நடை மேடை பாரம் தாங்காமல் திடீரென இடிந்து விழுந்தது. இதில் அப்போது நடைமேடையில் இருந்த பலர் இடிபாடுகளிடையே சிக்கிக் கொண்டனர். அந்த விபத்தில் இதுவரை 36 பேர் உயிரிழந்தனர். (வ)

## காஷ்மீரில் மீண்டும் வன்முறை

### இளைஞன் சாவு; பொலிஸார் காயம்



காஷ்மீரில் மீண்டும் வன்முறை ஏற்பட்டுள்ளனது. இதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். 50 இற்கு மேற்பட்ட பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர்.

நாடாளுமன்ற தாக்குதல் குற்றவாளி அப்சல் குரு வுக்கு தூக்குத் தண்டனை நிறை வேற் றப்பட்டது. அதனையடுத்து, அவர் பிறந்த மாநிலமான ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு, அங்கு 3 ஆவது நாளை எட்டியுள்ளது.

அவ்வப்போது வன்முறைச் சம்பவங்கள் பரவலாக நிகழ்ந்த வண்ணம் உள்ளன. பாரமுல்லா மாவட்டம், வாட்டர்காம் பகுதியில் நிகழ்ந்த வன்முறையில், இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.(வ)

### இலங்கைச் சிறையில் 27 இந்தியத் தமிழர்கள்

## விவரங்களை அரசுக்கு அனுப்புவதில் அசமந்த நிலையில் தமிழக அரசு

சென்னை, பெப்.12

**இலங்கை சிறையில் வாடும் 27 தமிழர்களை,** தமிழகம் கொண்டு வருவதற்கு அவர்களின் முகவரியை மத்திய அரசுக்கு அனுப்பாமல் தமிழக அரசு காலம் தாழ்த்துவதாக முறைப்பாடு எழுந்துள்ளது.

கொழும்பு சிறைச்சாலையில் தமிழகத்தை சேர்ந்த 27 பேரும் கேரளாவைச் சேர்ந்த 6 பேரும் என மொத்தம் 33 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரையும் இந்தியா கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களில், சுந்தரம் என்பவர் கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவரது பெயர், தவறுதலாக தமிழகத்தை சேர்ந்தவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

அதையடுத்து, சிறையில் உள்ள 33 பேரின் சரியான முகவரியை தருமாறு மத்திய உள்துறை அமைச்சகம், தமிழகம் மற்றும் கேரள அரசுகளிடம் வேண்டுகோள் விடுத்தது.

கேரளா மட்டும், தன் மாநிலத்தைச் சேர்ந்த ஆறு பேரின் முகவரியை மத்திய அரசுக்கு அனுப்பியது. ஆனால் தமிழக அரசு, தமிழகத்தை சேர்ந்த 27 பேரின் முகவரியை இன்னும் அனுப்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மொத்தமுள்ள 33 பேரையும் கொழும்பு சிறையில் இருந்து, இந்தியா கொண்டு வர தாமதம் ஏற்பட்டுள்ளது.

## நீண்டகால விசாரணைக் கைதிகளுக்கு பிணை

சென்னை, பெப்.12

நீண்ட காலமாக விசாரணைக் கைதிகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை பிணையில் விடுவிப்பது குறித்து ஒரு குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் சதவீதம் குறைவடைந்து வந்த போதிலும், 67 சதவீதமானோர் விசாரணைக் கைதிகளாக உள்ளனர்.

குறிப்பாக, சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்கள்தான், பிணை கோர முடியாத நிலையில் நீண்ட காலமாக சிறையில் உள்ளது தெரியவந்துள்ளது.-என்றுள்ளது. (வ)

## அணுமின் நிலையத்தில் பணிகளை ஆரம்பித்தால் முற்றுகைப்போராட்டம்

### கூடங்குளப் போராட்டத் தலைவர் தெரிவிப்பு

கூடங்குளம், பெப்.12

கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் செயற்படுத்தினால் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-



கூடங்குளம் அணுமின் நிலையம் ஓரிரு நாளில் செயற்படத் தொடங்கும் என்று அணுசக்தி துறை அதிகாரி ரவிபூஷன் குரோவர் தெரிவித்துள்ளார்.

அணுமின் நிலையத்துக்கு எதிரான எங்களது போராட்டத்துக்கோ, அந்தப்பகுதி மக்களின் உணர்வுக்கோ, உயிருக்கோ மத்திய, மாநில அரசுகள் மதிப்பளிக்கவில்லை.

கூடங்குளம் அணுமின் நிலையம் எப்போது திறக்கப்பட்டாலும் அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோருடன் அணுமின் நிலையம் முன் அறவழியில் முற்றுகையிட்டு சிறை நிரப்பும் போராட்டத்தில் ஈடுபடுவோம். அந்தப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் ஆதரவு தரவேண்டும் - என்றுள்ளது.

# வடக்கு மாலியில் தொடரும் மோதல்

## மக்களின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிப்பு

பாமகா, பெப்.12

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாலியின் பெரும் பகுதியை பிரான்ஸ் தலைமையிலான படைகள் கைப்பற்றிய போதிலும் இருதரப்பினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாலியில் முக்கிய நகர்களை பிரான்ஸ் தலைமையிலான படைகள் கைப்பற்றிய போதும் மறைந்துள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீது தாக்குதல் மேற்கொள்வதில் அவை கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

வடக்கு மாலியின் கோவ் நகர்ப் பகுதிகளிலேயே இருதரப்பினருக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது. கோவ் நகரை இரண்டு வாரங்களுக்கு முன்னர் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்டதாகப் பிரான்ஸ் படைகள் அறிவித்திருந்தன. எனினும் அங்கு தொடர்ந்தும் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, இஸ்லாமிய தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட திம்புக்டு நகரம் இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை என்று கூறப்படுகிறது. பிரான்ஸ் படைகள் திம்புக்டு நகரைக் கைப்பற்றியதும் அங்கிருந்த அரேபியர்கள் நகரை விட்டு வெளியேறியுள்ளனர். திம்புக்டு நகரின் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் அரோபியர்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. அரேபியர்கள் வெளியேறியமையால் அங்கு பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலான அரோபியர்கள் அல்ஜீரியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.



பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையால் மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காது தவிக்கின்றனர். ஆங்காங்கே அரேபியர்களின் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டு வருகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## சிரியாவில் அமைச்சரவை மாற்றம்

டமஸ்கஸ், பெப்.12

சிரிய ஜனாதிபதி அல் அசாத் தமது அமைச்சரவையில் மாற்றங்கள் செய்துள்ளார். உள்நாட்டுப் போர் கடுமையாக நடைபெற்றுவரும் நிலையில் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது.

சரிந்து வரும் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டே அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரவையில் புதிதாக 7 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிரியாவின் பொருளாதாரம் 20 சதவீதத்தால் சரிவடைந்துள்ளது. 2013ஆம் ஆண்டில் இது 50 சதவீதமாக அதிகரிக்கும் என்று உலக வங்கி அண்மையில் எச் சரித்திருந்தது. இந்தநிலையிலேயே அமைச்சரவையில் சிரிய ஜனாதிபதி மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளார். (ற)

## பாக். ஜனாதிபதி ஊழல் வழக்கு; மீண்டும் விசாரணை செய்ய சுவிஸ் அதிகாரிகள் மறுப்பு

இஸ்லாமாபாத், பெப்.12

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தொடர்பான வழக்கை விசாரிக்க இயலாதென சுவிற்ஸர்லாந்து அதிகாரிகள் அறிவித்துள்ளனர் என்று பாகிஸ்தான் சட்டத்துறை அமைச்சர் பரூக் நேக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, சுவிற்ஸர்லாந்து வங்கிகளில் இருந்து தகவல்களைப் பெறும் விவகாரத்தில் பாகிஸ்தான் அரசுக்கும், உச்ச நீதி மன்றத்துக்கும் இடையே பிரச்சினை நிலவி வருகிறது. இந்த நிலையிலேயே சட்டத்துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பாகிஸ்தான் உச்ச நீதி மன்ற உத்தரவின் படி, சுவிற்ஸர்லாந்து அதிகாரிகள் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தொடர்பான குற்றச்சாட்டு வழக்கு விவரங்களை மீண்டும் விசாரிக்கப் போவதில்லை. இது குறித்து தங்களின் நிலைப்பாட்டை சுவிற்ஸர்லாந்து அதிகாரிகள் கடந்த வாரம் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்-என்றார்.

இதேவேளை, சுவிற்ஸர்லாந்து அதிகாரிகளின் இந்த முடிவு, பாகிஸ்தான் அரசின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போவதாக உள்ளது- என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் செய்தித்துறை அமைச்சர் கமார் ஜமான் கைரா.

பாகிஸ்தான் உச்ச நீதி மன்றம் சுவிஸ் வங்கிகளிடம் இருந்து வழக்கு விவரங்களைப் பெற அறிவுறுத்தியும், பாகிஸ்தான் அரசு அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. அதையடுத்து, அப் போதைய பிரதமர் யூசுப் கிலானியை உச்ச நீதிமன்றம் பிரதமர் பதவியில் இருந்து தகுதியிழப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



பிரேஸிலில் வருடந்தோறும் 'ரியோ' காணிவேல் கொண்டாடப்படுவது வழமை. இந்த வருட 'ரியோ' காணிவேல் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் வீதிகளில் பவனி வந்தன. 'ரியோ' காணிவேல் 1723 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விண் வெளியில் இருந்து பதிவு செய்யப்பட்ட முதற்பாடல்

ரொறண்றோ, பெப்.12

முதன் முதலாக விண்வெளியில் ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது. கனடாவை சேர்ந்த விண்வெளி வீரர் ஒருவரும் அமெரிக்காவின் இசைக்குழுவை சேர்ந்த பாடகர் ஒருவரும் இணைந்து இந்த சாதனையை செய்துள்ளனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி பணிபுரியும், கனடாவை சேர்ந்த கிறிஸ் ஹேட்பீல்டு, நல்ல பாடகர் ஆவார். அவரது நண்பரும், பாடகருமான எட் ராபர்ட் சனும் இணைந்து விண்வெளி யில் இருந்து ஒரு பாடலை பாடி, பதிவு செய்துள்ளனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள, கப்போலா எனும் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கிறிஸ் ஹேட்பீல்டும், கனடாவில் உள்ள ஒலிப்பதிவுக் கூடம் ஒன்றில் இருந்த எட் ராபர்ட்சனும் இணைந்து இந்தப் பாடலை எழுதினர்.

பின்னர் செயற்கைக் கோள் ஒளிபரப்பு மூலம், கிறிஸ் ஹேட்பீல்ட் பாடிய பாடல் பூமியில் உள்ள ஒலிப்பதிவு கூடத்தில் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறானதொரு முயற்சி இதுவே முதற்தடவை என்று கூறப்படுகிறது.(ற)

## ஸ்கொட்லாந்து தனியாக பிரிவது பிரிட்டனைப் பலவீனமாக்கும்

### பிரதமர் டேவிட் கமரூன்

லண்டன், பெப்.12

பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்வதை ஸ்கொட்லாந்து தவிர்க்க வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டனில் ஸ்கொட்லாந்தின் பங்கு குறித்த ஆய்வறிக்கையை பிரிட்டன் அரசு வெளியிட உள்ளது. இந்த நிலையில் அதுகுறித்துக் கருத்து வெளியிட்ட கமரூன் தெரிவிக்கையில்:-

300 ஆண்டுகளுக்கும் மேலாக இணைந்திருந்த நாம் பிரிந்தால் சர்வதேச அரங்கில் பிரிட்டனின் பலம் குறைந்து விடும். பிரிட்டன் இப்போது நன்றாக செயற்படுகிறது. இதை ஏன் உடைக்க வேண்டும்?'' என்று கூறினார்.

பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்வதற்கு ஸ்கொட்லாந்து திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அடுத்த ஆண்டு மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 23 சதவீத ஸ்கொட்லாந்து மக்கள் மட்டுமே பிரிந்து செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். 61 சதவீதம் பேர் பிரிட்டனுடன் இணைந்திருக்க விரும்புவதாக தெரியவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.(ற)

## செவ்வாய்க் கிரகத்தை துளையிட்டது கிரியோசிட்டி ரோவர்



நியூயோர்க், பெப்.12

செவ்வாய்க்கிரகத்தின் தரை மேற்பரப்பில் தங்கி அதனை ஆய்வுகளை மேற்கொண்டு வரும் கியூரியோசிட்டி முதன் முறையாக ஒரு பாறையைத் துளைத்து அதில் இருந்து வெளியேறும் தூசிகளை சேகரித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அதற்கான புகைப்படங்களை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா வெளியிட்டுள்ளது.

அந்த ஆய்வுகள் குறித்து கியூரியோசிட்டி செயற்திட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவிக் கையில்:-

இதுவரை விண்வெளியில் உள்ள வேற்றுக் கிரகமொன்றில் இறங்கி சுயமாகப் பரிசோதனை செய்து வரும் ரோபோக்களிலேயிருந்த தரமுடையதும் உயர் தொழிநுட்ப வசதிகள் உடையதுமான கியூரியோசிட்டி அதன் அதிகபட்ச செயற்திட்டமாக செவ்வாயின் பாறைகளைத் துளைத்து பரிசோதனை மேற்கொள்கிறது- என்று தெரிவித்தார்.

நாசா வெளியிட்டுள்ள புகைப்படத்தில் 1.6 சென்டி மீற்றர் அகலமும், 6.4 சென்ரி மீற்றர் ஆழமும் கொண்ட துளை ஒன்று பாறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## லத்தீன் அமெரிக்க நாடுகளில் வெள்ளம்

நியூயோர்க், பெப்.12

லத்தீன் அமெரிக்க நாடுகள் மழை வெள்ளத்தினால் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. சில்லி பேரு மற்றும் பொலிவியா போன்ற நாடுகளே பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பருவப் பெயர்ச்சி மழையினால் குறித்த நாடுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மழை வெள்ளம் காரணமாக பேருவில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொலிவியாவில் 9000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சில்லி நாட்டிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. (ற)

## அமெரிக்காவில் பனிப்புயல்

### 10 பேர் சாவு; பல்லாயிரக்கணக்கானோர் பாதிப்பு

நியூயோர்க், பெப்.12

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதிகளில் வீசிவரும் 'நேமோ' பனிப்புயல் காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கனெக்டிகட், மசாசூசெட்ஸ், ரோட் ஐலண்ட் ஆகிய மூன்று மாகாணங்களில் கடந்த சில நாள்களாகப் பலத்த பனிப்புயல் வீசி வருகிறது. வீதிகளில் மக்கள் நடமாட முடியாத அளவுக்கு பனிக்கட்டிகள் உருவாகியுள்ளன. வாகனங்களை இயக்க முடியாததால் மக்கள் அவற்றை ஆங்காங்கே நிறுத்தியுள்ளனர்.



நான்கு மாகாணங்களிலும் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பனிப்புயல் காரணமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

**Projector and Tablet Pc Sale**
**புதிய வரவு**



Tab 14500/=
With Sim 19500/=



LED Projecter
24500/=
1 வருட உத்தரவாதம்

தொடர்புக்கு-Leenu Computers
கோப்பாய் பொலிஸ் அருகில்
0772546511 Prasannaraj (29462)(3.8.7)


# ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.12

வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம்6, தரம் 7 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான விஞ்ஞான ஒலிம்பியாட் முதலாவது தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9மணி தொடக்கம் முற்பகல் 11மணிவரை இரு நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைகளிலும் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வவுனியா சீ.சீ.த. பாடசாலையிலும் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைத் தயார்ப்படுத்தி அருகில் உள்ள பரீட்சை நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

(ம-9)

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் நந்தன வருடம் தைமாதம்
21ஆம் நாள்(03-02-2013)
ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ**
**கார்த்திகேசக்குருக்கள்**
**கிருபானந்த சர்மா**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

12.02.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தசாகம்
13.02.2013 புதன்கிழமை முற்பகல் 10 மணி ஏகோதிட்டம் மாசிகம்
14.02.2013 வியாழக்கிழமை முற்பகல் 10 மணி சபிண்டீகரணம்
15.02.2013 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி கிருஹயக்ஞம் (மதியபோசனம்)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி இறைவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

385,டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
வட்டாக்கை அம்மன் கோயிலடி,
கந்தரோடை ,சுன்னாகம்.

குடும்பத்தினர்
271 C,மன்னார் வீதி,
பட்டாணிச்சூர்,வவுனியா.

THE HALO TRUST

## சாரதிக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதும் ஆகும்.

**அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.**

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களையும், அனுபவமுள்ளவர்கள் அவை குறித்த விவரங்களையும் கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.

அனைத்து விண்ணப்பங்களும் 15 மாசி 2013 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். (26342)(2-6.7)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17.04.1982

மறைவு
26.01.2012

**அமரர் ஜெயப்பிரபா கமல்ராஜ்**

பெற்றோருக்கு இளைய மகளாய் தரணியிலே நீ பிறந்தாய்!
உற்ற வயதில் உன் துணையை உன்னதமாய் கரம் பிடித்த நீ !
இம்மியளவும் குறையில்லா இனிதான வாழ்வு வாழ்ந்து
பாரினிற்கு பண்பான பிள்ளை ஒன்றை பெற்றுத் தந்து விட்டு
உற்ற துணையையும், பிள்ளையையும்
பெற்றோரையும், உறவினர்களையும் பாதியிலே பரிதவிக்கவிட்டு
எங்கு தான் சென்றீரோ? ஆண்டொன்று
ஆனாலும் ஆறவில்லை எம் மனது என்றென்றும்
உங்கள் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பத்தினர் !

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (29458) (6.7.11) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**கதிரவேலு தனலட்சுமி**

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தனலட்சுமி 10.02.2013 அன்று காலமானார்.

அன்னார் திருமதி ராஜி பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு தாயும், இரங்கநாதன் பாலசுப்பிரமணியத்தின் மாமியாரும், திருமதி டயானா, அஜித், வைகுந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,ஆகாஷின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.02.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் கலட்டி ஒழுங்கை, சங்கரத்தை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ராஜி பாலசுப்பிரமணியம் (மகள்)

கலட்டி ஒழுங்கை,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (சி/6360)(5-6-7)


## இதோ! தரம் 4,5 மாணவர்களே!

**புலமை 18 வெளிவந்துவிட்டது**

உள்ளே...




தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்
மாதிரி வினாத்தாள்
கடந்தகால வினாக்கள்
தொடர்மொழிக்கு ஒரு மொழி
மேலும் பல தகவல்களுடன்

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

## தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் வ.து

பதிவிலக்கம் ஜே/1013

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 03.03.2013 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் கூட்டுறவு வைத்திய சாலையில் நடைபெறும். பிரேரணைகளை 16.02.2013 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

கு.கணேசமூர்த்தி
தலைவர்.

கு.ஏழூர்நாயகம்
செயலாளர்.

கூட்டுறவு வைத்தியசாலை தூர்க்காபுரம், தெல்லிப்பழை.

(29464)(6.7.11)

## சமூகசேவை உத்தியோகத்தர் இடமாற்றம்

நவாலி,பெப்.12

சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகங்களில் பணியாற்றிய சமூக சேவை உத்தியோகத்தர்கள் சமூக சேவைகள் திணைக்களத்தால் இந்த மாதத் திலிருந்து மாவட்டத்துக்குள்ளேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றிய நல்லையா புரட்சிதாசன் வேலணை பிரதேச செயலகத்துக்கும், சங்கானை பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த செல்வம் காரைநகருக்கும், காரைநகரில் பணிபுரிந்த சிதம்பரநாதன் ஊர்காவற்றுறைக்கும், வேலணை பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த கதிரமலை தெல்லிப்பழைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-100)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
31.12.1957
விண்ணுலகில்
25.01.2012

அமரர் தேவதாஸ் விவேகானந்தன்

(தனங்களப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர்)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே எம்மை வளர்த்து
பாசமழை பொழிந்து, இன்பமுடன் நாம் வாழ
எல்லாம் எமக்களித்தாய்
என்றும் இப்படியே வாழ்ந்திருப்போம் என்றிருக்க
இறைவனடி சென்றனையே!
ஓராண்டாகினிலும் உம்மை மறவோம்

தனங்களப்பு, சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(18038)(2.6.7)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
08
★
10
★
1925



மறைவு
19
★
01
★
1999

அமரர்

ஸ்ரீமான் செல்லப்பா கனகசபை

(தங்கோடை-காரைநகர் ஸ்தாபகர் யாழ். கணேசன் ஸ்ரோர், சிவகணேசன் ஸ்ரோர்)

திதி: துதியை 12.02.2013

பாசமுகம் பார்த்திடாது கண்கள் பூத்தது
பதின் நான்கு ஆண்டுகள் நீங்களின்றி நெஞ்சு வாடுது
காரை......! கனகசபையர் எங்கு என்று கேட்குது உள்ளம் கலங்கி....
உங்கள் நினைவினோடு தானே வாழுது!

இல.115,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/6362)(5-6-7)

## THE HALO TRUST — சாரதிக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 14 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற் றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்டின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, பார ஊர்தி செலுத்துவது, ரிப்பர் ஊர்தி செலுத்துவது.

அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.


ஹெலோ ரஸ்ட், 12, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021-2223779, 021-7538355

அனைத்து விண்ணப்பங்களும் 15 மாசி 2013
வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(சி/6359)(2-6.7)

## மனமார வாழ்த்துகின்றோம்





இலங்கை வங்கி வடபிராந்திய
உதவிப் பொது முகாமையாளர்
திரு. கே. ஈ. டி. சுமணசிறி
அவர்கள் பிரதிப் பொது
முகாமையாளராகப்
பதவியுயர்வு பெற்றதையிட்டு அவரை
மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- தட்டெழுத்தாளர் பயிலுநர்கள்.
இலங்கை வங்கி, யாழ். மாவட்டம்.

(29465)(2.6.7)

## மரண அறிவித்தல்



## அரசரத்தினம் கந்தமூர்த்தி

வேலணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, தபால் நிலைய வீதியை வதிவிடமாகவும் கொண்ட அரசரத்தினம் கந்தமூர்த்தி 10.02.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - நவரத்தினவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - அன்னம் தம்பதியரின் மருமகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும் சயிலராஜ், றகிலா (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3 ஆம் வருட மாணவி), காலஞ்சென்ற அகிலராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஸ்கந்தராசா (பிரான்ஸ்), கந்தசோதி (நோர்வே), கார்த்திகை ரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.
0779228353

தகவல்:
குடும்பத்தினர்.

(C/9203)(6.7.11)

# நல்லிணக்கம் எவ்விதம் சாத்தியமாகும்?

இலங்கையின் 65 ஆவது சுதந்திரதின விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை அந்நிய சக்திகளின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது எனவும், இனங்களுக்கு இடையேயான தேசிய நல்லிணக்கத்தின் மூலமும் அபிவிருத்தியின் மூலமுமே அந்தச் சவால்களை வெற்றி கொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சம உரிமைகளுடனும், ஐக்கியத்துடனும் வாழ்வதாகவும், தாம் நாட்டைப் பிரிக்கும் சதிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

ஒரு நாட்டு அதிபரின் சுதந்திரதின உரை என்பது அந்த நாட்டின் செல்வழிப் பயணத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகிறது.

ஆனால், இலங்கை ஜனாதிபதியின் உரை தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாகவும், "உண்மையில் இருந்து விலகி வெகு தொலைவில் நிற்பதாகவும் உள்ளது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

இலங்கை அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்தில் உள்ள அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா ஒரு விழாவில் பேசும் போது, "தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் உரிமை, உரிமை எனக் கூச்ச லிட்டுக் கொண்டு, இருப்பதையும் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறார் கள்" எனத் தெரிவித்திருந்தார்.

இருப்பவற்றையும் பறிகொடுக்கிறார்கள் என்பதன் மூலம் இருப்பவையும் பறிக்கப்படுகின்றன என்ற உண்மையை அவர் ஒப்புக் கொள்கிறார்.

இருப்பவற்றைப் பறிக்கும் அரசில் அவரும் ஒரு பங்காளி என்பதும், அப்படியாயின் 18 ஆவது திருத்தச் சட்டம், 'திவிநெகும' சட்டம் என்பவற்றுக்கு ஆதரவு வழங்கி, பறிப்பவர்களுக்கு கரம் கொடுத்த வர் அவர் என்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஆனால், இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சம உரிமையுடன் வாழ்கின்றனர் என்ற ஜனாதிபதியின் கூற்றை, தமிழ் மக்கள் இருப்பவற்றைப் பறிகொடுக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டதன் மூலம் அவர் மறுதலித்துள்ளார் என்பதுதான் உண்மை.

**பேச்சுக் கரைந்து போகும் முன்னரே...**

தேசிய நல்லிணக்கத்தின் மூலமும், ஸ்திரமான அபிவிருத்தி மூலமுமே அந்நிய சக்திகளின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், ஜனாதிபதி தலைமை வகிக்கும் அரசில் மேற் கொள்ளப்படும் தேசிய நல்லிணக்கத்துக்கு விரோதமான ஒடுக்கு முறை நடவடிக்கைகளே அந்நிய சக்திகளின் தலையீட்டுக்கான கதவுகளைத் திறந்து விடுகின்றன என்பதை மறுத்து விட முடியுமா?

இலங்கை அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஒரு புறம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பனவாகவும், இன்னொருபுறம் சாதாரண இயல்பு வாழ்வைக் கூடப் பறிப்பனவாகவும் அமையும் போது நாட்டில் தேசிய நல்லிணக்கம் எவ்வாறு உருவாக முடியும்?

ஜனாதிபதியின் பேச்சு காற்றில் கரைந்து போகும் முன்பே வலிகாமம் வடக்கில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள் படையினரால் இடித்து அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பல ஆயிரம் ஹெக்ரெயர் காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு முட்கம்பி வேலியிடப்பட்டுள்ளன.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் வர்ணகுல சூரிய, "இலங்கையில் எங்குமே உயர்பாதுகாப்பு வலயம் இல்லை. 2000 ஹெக்ரெயர் காணியில் மட்டும் வடக்கில் படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசுக்குக் காணி தேவைப்பட்டால் முறைப் படி கையகப் படுத்தப்படும்" என்று தெரிவித்தார். படையினரால் எந்த ஒரு வீடும் அழிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு புறம் உண்மைகளை மூடி மறைத்துக் கொண்டு, மறுபுறம் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்தும், வீடுகளை இடித்தும் வெறி யாட்டம் போடும் போது தேசிய நல்லிணக்கம் உருவாக முடியுமா?


இத்தகைய அத்துமீறல்களை வெளிக்கொண்டுவரும் ஊடகங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன.

உதயன் பத்திரிகை அலுவலகம் பல முறை தாக்கப்பட்டதும், பல பணியாளர்கள் கொல்லப்பட்டதும், பிரதமஆசிரியர், செய்தி ஆசிரியர் உட்படப் பல பணியாளர்கள் மேல் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டமையும் இங்கு கருத்துச் சுதந் திரத்துக்கு எதிரான அடக்குமுறை யைத் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளன.

கொலை, கொலைமுயற்சி, தாக்குதல், தீயிடல் எனப் பலவித வன்முறைகள் ஊடகங்கள் மீது நடத்தப்பட்ட போதும் இதுவரை எவரும் கைது செய்யப்படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை. எங்கும் பரவலாகப் படை முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தும், பொலிசாருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தும் ஏன் இத்தகைய வன்முறைகள் தடுக்கப்படவில்லை? ஏன் சம்பந்தப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவில்லை?

இப்படியாக தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகள் தொடரப்படுவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் சக்திகள் எவை? அவற்றின் பின்னணியில் நிற்பவர்கள் யார்? இன்று வட மாகாணசபையின் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, வடபகுதி யின் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க

இலங்கையில் இப்போது நல்லிணக்கம் எந்த அளவுக்கு நடைமுறையில் உள்ளது என்பது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஊடகங் களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விவரம்



என்று வட மாகாணத்தின்ஒவ்வொரு முனையிலும் தங்கள் அதிகாரக் கரங்களை விரித்திருக்கும் இவர்களே, இந் தக் கேள்விகளுக்குப் பதில் வழங் கும் கடப்பாடுடையவர்கள்.

மக்களால்தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ, பிரதேச சபைகளின் தலைவர் களோ, உறுப்பினர்களோ பொருட் படுத்தப்படுவதில்லை.

அபிவிருத்தி தொடர்பாக அவர்களால் முன்வைக்கப்படும் திட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. இத்தகைய தான்தோன்றித் தனமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் மக்கள் பிரதிநிதிகள் எப்படி அபிவிருத்தியில் பங்கு கொள்ள முடியும்?

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் ஒட்டியிருக்கும் இளம் செயலாளரின் செயற்பாடுகள் இராணுவ சர்வாதிகாரிகளின் செயன்முறை போல் அமைந்திருப்பதாகப் பல முனைகளிலும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஆளுநரைத் திருப்திப்படுத்தும் வகையிலும், ஈ.பி.டி.பி. தலைமையகத்தில் இருந்துவரும் கட்டளைகளுக்கு அமையவுமே அவரின் செயற்பாடுகள் தொடர்வதாகவும் கருத்துகள் பலமாக நிலவி வருகின்றன. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பளிக்கும் பண்புகூடத் தெரியாதவர் இந்த இளம் செயலாளர்.

**மனம் புளுங்கி செயற்படுபவர்களே பலர்**

இதன் காரணமாகப் பல அரச அதிகாரிகள் தங்கள் கடமைகளை முறைப்படி செய்ய முடியாமல் திணறுகின்றனர். சிலர் நெருக்கு தல்களுக்கு அடிபணிவதா அல்லது சட்டப்படி வேலை செய்வதா என்று முடிவெடுக்க முடியாத நிலையில் தடுமாறுகின்றனர். இத்தகைய நிலையில் சில அதிகாரிகள் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டனர். இன் னும் சிலர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர். தொலை தூரங் களுக்கு இடமாற்றம் செய்யப்பட் டால், தமது பிள்ளைகளின் கல்வி போன்ற விடயங்களுக்கு இடையூறு ஏற்படலாம் என்ற அச்சத்தில் பல அதிகாரிகள் மனம் புளுங்கி யவாறே செய்வதறியாது சொல்பவற்றைச் செய்து வருகின்றனர்.

அபிவிருத்தி தொடர்பான கூட்டங்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்குக் கூட அழைக்கப்படுபவர்களின் பட்டியல் ஈ.பி.டி.பி தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சில அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அடிப்படையில் பொது நிர்வாக சேவை அதிகாரிகளோ, பணியாளர்களோ, அரச அதிபருக்குக் கட் டுப்பட்டவர்கள். அரச அதிபரை விட வேறு எவரும் அவர்களுக்குக் கட்டளையிட முடியாது. ஆனால், இன்று அரச அதிகாரிகள் பல முனைகளில் நெருக்குதல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

நேர்மையாகவும் துணிவுடனும் பணியாற்றும் சில உதவி அர சாங்க அதிபர்கள் பலவித நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். மக்களால் தெரிவு செய்யப் பட்ட பிரதேச சபைகள் கூட சரி யாகச் செயற்பட முடியவில்லை. அவர்களின் வேலைத் திட்டங்க ளுக்குப் பிரதேச சபை செயலர்கள் மூலம் முட்டுக் கட்டைகள் போடப் படுகின்றன.

இன்று ஆளுநரையும், சில அரசியல்வாதிகளையும் திருப்திப்படுத்தும் முகமாக முறை மீறல் களில் ஈடுபடும் எந்த ஓர் அதிகாரி யும், நாளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கையில் ஆட்சி அதிகாரம் வரும்போது பதில் சொல்லியாக வேண்டிய நிலை ஏற்படும் என்பதனை மனதில் கொள்வது நல்லது.

**தமிழ் மக்கள் சம உரிமைகளுடன் வாழ்வதாகக் கூறுவது என்ன பொருத்தம்?**

இவ்வாறான ஓர் இராணுவ மயப்படுத்தப்பட்ட நிர்வாகம் தமிழ் மக்கள் மீது திணிக்கப் படுவதை அனுமதிக்கும் ஜனாதிபதி, தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்வா தாக எப்படிக் கூற முடியும்?

வடக்கின் இயல்பு வாழ்வைச் சீர்குலைப்பதில் இன்னுமொரு முக்கிய பாத்திரம் வகிப்பவர் வடபகுதியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க.

இவரது அதிகாரத்தில் பாடசாலை விழாக்கள் உட்பட இங்கு நடைபெறும் ஒவ்வொரு வைபவத்திலும் இராணுவப் பிரசன்னம் எழு தப்படாத சட்டமாக்கப்பட்டுள்ளது.

இவரின் அதிகாரத்திலேயே எவ்வித சட்ட வரைமுறையுமின்றி வலி. வடக்கு மக்களின் காணிகள் படையினரால் கையகப்படுத்தப்படுகின்றன. மக்களின் பெறுமதி மிக்க வீடுகள் இடிக்கப்பட்டு வீதிகள் அமைக்கப்படுகின்றன. ஆனால், இராணுவப் பேச்சாளரோ அப்படி எதுவும் நடக்கவில்லை என்று சமாளிக்கிறார். அது மட்டுமன்றிப் பல இடங்களில் பொதுமக்களின் காணிகளைத் தமக்குக் கையளிக்கும்படி படையினர் பிரதேச செயலர்களை வற்புறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, மாவீரர்களுக்கு அஞ்சலி மேற்கொள்ள பல்கலைக் கழக மாணவர்கள் எடுத்த முயற்சிகள் தொடர்பாகவும், அவர்களின் கைதுகள், விடுதலை தொடர்பாகவும் கட்டளைத் தளபதி ஒரு சிவில் அதிகாரி போன்று கருத்துகளை வெளியிட்டார். அது மட்டுமின்றி பல்கலைக் கழக மாணவர்கள் பிரச்சினையில் அரசியல்வாதிகள் தலையீடு செய்வதாகக் கண்டனமும் வெளியிட்டார்.

நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். எமக்கெனச் சில சிறப்புரிமைகள் உண்டு. எமது மக்களுக்கு எங்கு பிரச்சினை என்றாலும் அங்கு நாம் நிற்க வேண்டியது எமது கடமை. எம்மை விமர்சிக்க எந்த ஓர் அரச பணியாளர்களுக்கும் அதிகாரம் கிடையாது என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை இராணுவம் பாதுகாப்புப்படை என்ற வகையில் மக்களைப் பாதுகாக்கும் முகமாக, இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்படும் மர்மக் கொலைகள், தாக்குதல்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படும் வன்முறைகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்தவும், சம்பந் தப்பட்டவர்களைக் கண்டு பிடிக்க வும் முயற்சிகள் மேற்கொண்டால் அதனை வரவேற்க முடியும்.

அரச இயந்திரமும், அரச அதிகாரிகளும், அரச படையினரும், அரசுடன் இணைந்துள்ள அரசியல் வாதிகளும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்களின் நிம்மதியையும், அமைதியையும் குலைக்கும் போது, தேசிய நல்லிணக்கம் உருவாக முடியாது என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும். இப்போதைய இராணுவ நிர்வாகத்தில், முழுக்க முழுக்க அதனையே நாம் எதிர் கொள்கிறோம். ★

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021 567 1111
விநியோகம்: 021 567 7222
**தொலைநகல்**
செய்தி: 021 567 8844,
விளம்பரம்: 021 222 9731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா கிருத்.மூன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா ஃபோன்ஸ்' –மாவு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி பொரேக்ஸ் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்ரிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹானா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# ஐந்து ரூபாய்க் குதிரைகள்

''ஐந்து ரூபாவுக்கு குதிரையும் வேண்டும்; அது ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.'' பச்சைத்தண்ணீரில் பலகாரம் சுடும் கஞ்சர்களைக் குறித்துச் சொல்லப்பட்ட மூத்தோர் மொழியிது. கிட்டத்தட்ட நமது அரசும் இதே வழியிலேயே சென்றுகொண்டிருக்கிறது.

அரச பணிகள் ஏராளமாக முடங்கிக்கிடக்கையில் அவற்றை ஒப்பேற்றுவதற்கு பணிவெற்றிடங்கள் ஏராளம் நிலவுகின்றன. ஆனால் அவற்றை நிரப்புவதற்குரிய பொருளாதாரப் பலம் இருக்கவில்லை. இருந்த பணமெல்லாவற்றையும் விற்று, 'சுட்டு' போரை நடத்தி முடித்தாயிற்று. போதாக்குறைக்கு பல்லாயிரம் கோடி ரூபாய்களுக்கு உலகெல்லாம் கடனும் வாங்கியாயிற்று.

போர் நடக்கும் வரையும் நல்ல பிள்ளைகள் போல் சிரித்துச் சிரித்துக் கடனை வழங்கிய நாடுகள், போர் முடிந்த கையோடு ''வட்டியோடு கடனைத் தா'' என்ற கோதாவில் இறங்கிவிட்டன. ஏற்கனவே இருந்த உற்பத்தித் துறைகளெல்லாம் ஒவ்வொன்றாகச் சரிந்துகொண்டிருந்த சமயத்தில், பெருந்தொகைக் கடனைச் செலுத்துவதெப்படி? முழி பிதுங்கிநின்றது அரசு.

அரசின் இக்கட்டு நிலை தெரியாமல், எப்போதெல்லாம் வீடுகளில் ''தண்ணிச்சோறு'' என்று ஏச்சு விழுகிறதோ, அப்போதெல்லாம் பொங்கியெழுந்து ''எங்களுக்கு வேலை வேண்டும்'' என்று போர்க்கொடி தூக்கிக்கொண்டிருந்தார்கள் பட்டதாரிகள். 'அரசின் இலவசக் கல்வியில் பட்டதாரி ஆனவர்களுக்கு அரசே வேலையும் வழங்கவேண்டும் என்று தலையெழுத்தா?' என்ற எண்ணத்தில் சர்வ வல்லமை பொருந்தியவர்கள் அதனைக் கண்டுகொள்ளவேயில்லை. பட்டதாரிகள் போராட்டம் கோயில் திருவிழாபோல் வருடத்துக்கு ஒருமுறை தவறாது நடந்துகொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் தான் மலைபோல் தேங்கிக்கிடந்த பணிகளைச் செய்துமுடிக்க பெரும் ஆளணி தேவைப்பட்டது. அப்போதுதான் அரசுக்கு ஒரு 'ஐடியா' தோன்றியது. பட்டதாரிகள் 10 ஆயிரம் ரூபாவுக்கு பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டனர். 'நிரந்தர நியமனம்' என்ற இரையைக் காட்டியபடி அரசு முன்னே நடக்க, சுமக்கமுடியாத பாரத்தோடு, 'அரச பணி' என்ற வண்டிலை இழுக்கத் தொடங்கினார்கள் பட்டதாரிகள்.

போதாக்குறைக்கு ''உங்களுக்கு கொழும்பில வைச்சுப் பெரியவற்ற கையால நியமனக்கடிதம் வாங்கிற பேறு கிடைக்கப் போகுது'' என்று அவர்களை அழைத்துப் போய், 'ஷோ' காட்டிவிட்டதுதான் மிச்சம். நிரந்தரநியமனம் வந்தபாடாக இல்லை. பட்டதாரிகளுக்கு தனித்தனித் திணைக்களங்கள் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கான பிரமாணக்குறிப்புகளும் வெளியிடப்படப் போவதாக அறிவிப்புக்கள் வருகின்றன. ஆனால் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

வழமையான ஓர் அரச ஊழியரைவிடவும் அதிகளவான வேலைப்பளு தங்கள் தலையில் சுமத்தப்படுவதாக பட்டதாரிப் பயிலுநர்கள் உணர்கிறார்கள். அவர்களுடைய வழமையான பணியைவிடவும் தமக்கான 'எடுபிடி' வேலைகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் இந்தப் பட்டதாரிப்பயிலுநர்களைப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிகிறது. அண்மையில் ஒரு பிரதேச செயலகத்தில் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கட்டுகளை விற்பனை செய்யுமாறு பட்டதாரிப்பயிலுநர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சாதாரண விற்பனைப் பிரதிநிதிகள் போல் வெயிலிலும் மழையிலும் அலைந்து, திரிந்து அவற்றை விற்கவேண்டும்.

தங்களுடைய வேலைக்கு மேலதிகமாக நிரந்தர உத்தியோகத்தரின் 'சிண்'ஆகவும், லொத்தர் ரிக்கட் விற்பனையாளராகவும் பணியாற்றியும்கூட பட்டதாரிப் பயிலுநர்களுக்கான மாதாந்தச் சம்பளம் பெரும் இழுத்தடிப்பின் பின்னரே, பிச்சையிடப்படுவதுபோல் 'பெரும் எடுப்பு'க் காட்டி வழங்கப்படுகிறது. மூன்று மாதங்கள் முடிந்த பின்னர்தான் தங்களுடைய முதல் சம்பளத்தை இவர்கள் கண்ணில் ஒற்றிக் கொள்ள நேர்ந்தது. இப்போது மீண்டும் சம்பளம் கிடைக்கவில்லை. பட்டதாரிகள் போராட்டம் பயிலுநர்கள் ஆனபின்னும் முடியவேயில்லை.

# சட்ட நிபுணர் வருகைக்கு ஏன் தடை போட வேண்டும்?

*சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து*
**■ கோகுலன்**

## செய்தவை சரியென்றால் பயப்பீதி தேவையில்லையே

அரச தரப்பிலும் அரச செய்தி வழங்கல் விடயங்களிலும் பல குளறுபடிகள் இடம்பெற்றிருக்கும் நிலையில், சர்வதேச சட்டவாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு விஸா வழங்குவதில் ஏற்பட்டுள்ள இன்னுமொரு குளறுபடி வெளிவந்துள்ளது. இவர்கள் பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை நிறைவேற்றத்துக்கு பின்னரான நிலைமைகளை ஆராயவிருந்தனர். இந்தக் குழுவின் தலைவராக இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜகதீஸ் சரன் வர்மா வரவிருந்தார். அண்மையில் புதுடில்லியில் இடம்பெற்ற வல்லுறவுகள் தொடர்பாக ஆராய்ந்த குழுவின் தலைவராக அவர் இடம்பெற்றிருந்தார். ஓய்வுபெற்றதன் பின்னர் வர்மா இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக இருந்து வந்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் ராஜதந்திர கடவுச் சீட்டைக் கொண்டவராக இருந்து வருகின்றார். புதுடில்லியில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு அவர் விஸா கோட்டு மனு செய்தபோது மனுவுடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் கடிதம் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்துள்ளது. தனிப்பட்ட முறையில் அவர் இலங்கைக்கு வருகிறார் என்றும் அதற்கு அவசியமான படிவங்களை பூர்த்தி செய்துள்ளார் என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கட்டணம் எதுவுமின்றி அவருக்கு விஸா வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் அது நிராகரிக்கப்பட்டது. அதே போல் மேலும் 3 சர்வதேச சட்டவாளர்கள் ஏற்கனவே ஒன்லைனில் லண்டனில் இருந்து விஸா பெற்றிருந்த நிலையில் பின்னர் அவை நிராகரிக்கப்பட்டிருப்பதை அறிந்தார்கள்.

''இவர்களின் வருகை மகா நாடுகளில் அல்லது கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. இலங்கையின் இறைமைக்குள் தலையிடும் தன்மையைக் கொண்டிருந்தது'' என்று இலங்கை வெளியுறவு அமைச்சு தெரிவித்திருந்தது.

இந்தக் குற்றச்சாட்டானது இலங்கை அரசின் சார்பில் இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் மீதும் மற்றும் மதிப்பார்ந்த நீதித்துறையாளர் குழுவின் மீதும் இலங்கை வெளியுறவு அமைச்சினால் சுமத்தப்பட்டிருந்தது. இதன்படி இந்திய வெளியுறவு அமைச்சும் இரகசிய நடவடிக்கையில் ஒரு பங்காளியாக இருந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து சர்வதேச சட்டவாளர்கள் சங்க நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் மார்க் எல்லிஸ் விடுத்த அறிக்கையில் சர்வதேச சட்ட அமைப்பின் மதிப்புமிக்க சில உறுப்பினர்களின் வருகையில் இலங்கை அதிகாரிகள் ஒத்துழைக்க மறுத்திருப்பது ஏமாற்றமளிக்கிறது. இலங்கை அதிகாரிகள் நீதித்துறைக்கு அக்கறையுள்ள விடயங்களில் சுயாதீனமான பார்வை விழுவது குறித்து பயந்து போயுள்ளார்கள் என்பதையே இது சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் சொல்வதாக இருக்கின்றது என்று சாடியுள்ளார்.

விஸா விண்ணப்பப் படிவங்கள் தவறாக நிரப்பப்பட்டிருப்பதாக இலங்கை வெளியுறவு அதிகாரிகள் தெரிவித்திருப்பதையும் சர்வதேச சட்டவாளர்கள் சங்கம் நிராகரித்துள்ளது. கொடுக்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பங்கள் எவ்வாறு அடையாளமிட்டு நிரப்பப்பட வேண்டும் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. வேறு விளக்கங்கள் கொடுப்பதற்கு படிவங்களில் இடமிருக்கவில்லை. எதுவானாலும் முதலில் விஸாக்கள் வழங்கப்பட்டிருந்தன. எனவே படிவங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தன என்பதற்கு நியாயமில்லை.

கடந்த வாரம் திங்கட்கிழமை ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் வெளிநாட்டவர்களை இங்குவந்து நிலைமைகளைப் பார்வையிடும்படி கோரிக்கை விடுத்திருந்தார். நாட்டின் 65 ஆவது சுதந்திர தின விழாவில் பேசுகையில் இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் பிரசாரம் செய்யப்படுவதற்கு நாம் பதிலளிக்க விரும்புகிறோம். அவர்களை இங்கு வந்து பார்க்கும்படி கேட்கிறோம். வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு இங்கு நடைபெறும் அபிவிருத்திகளும் நல்லிணக்கமும் தான் சரியான பதிலாக இருக்கும் என்று கூறியிருந்தார்.

''யாரோ எதையோ சொல்கிறார்கள் என்பதற்காக அறிக்கைகளைப் படிப்பதால் அல்லது விமர்சகர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக அல்லது ஊடகங்கள் அதை வெளியிடுவதனால் மட்டும் எதையும் நம்பாதீர்கள். நாம் உலக மக்களுக்குக் கூறுகிறோம் வாருங்கள், இங்கே வந்து நீங்களே நேரில் பாருங்கள் நண்பர்களே'' என்றார் ஜனாதிபதி. ஆனால் அவரது சொந்த அரசே உலக மக்கள் இங்கு வந்து நேரில் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்க மறுக்கிறது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அரசாங்கப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல ஒரு கேள்விக்குப் பதில் தருகையில், அவர்கள் இங்கே வந்து எமது அரசமைப்பு விடயங்களில் குழம்பிப் போகாமல் இருக்கும் வகையில் நாம் அவர்களுக்கு கூறவேண்டியிருக்கின்றது. அது (குற்றப்பிரேரணை) முற்றுமுழுதாக அரசமைப்புச் சார்ந்த விடயம். அதுகுறித்து வெளியில் இருந்து வரும் எந்தஅமைப்பும் கேள்வியெழுப்ப முடியாது என்று கூறினார். குற்றப் பிரேரணையானது அரசமைப்பின்படி மேற்கொள்ளப்பட்ட ஒன்று. அதனை வெளிச் சக்தி எதுவும் கேள்விக்குள்ளாக்க முடியாது என்பதைச் சர்வதேச சட்டவாளர்கள் சங்கத்துக்கு அரசு தெளிவுபடுத்தியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் அல்லவா?

ஏனென்றால் அந்த செயற்பாட்டில் எந்தவித தவறான நடைமுறையும் இடம்பெறவில்லை என்று அரசு கூறிவரும் நிலையில் பிரதம நீதியரசர் குற்றவாளி யென்றால் இதில் பயப்படுவதற்கு என்ன இருக்கின்றது?

சுதந்திரதினவிழாவில் ஜனாதிபதி ராஜபக்ஷ நிகழ்த்திய உரையில் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஒரு தவறு ஏற்பட்டிருப்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஜனாதிபதியின் ஊடக அலகினால் வெளியிடப்பட்டிருந்த ஆங்கில அறிக்கையில் குறித்த பகுதி, ''இந்த நாட்டில் இன அடிப்படையில் வெவ்வேறு நிர்வாகங்கள் இருப்பது நடைமுறை சாத்தியமற்றது'' என்று தரப்பட்டிருந்தது.

இதன் மீது கருத்து வெளியிட்டிருந்த சென்னை இந்துப் பத்திரிகை, ''தமிழருக்கு சுயாட்சி வழங்கப் போவதில்லை'' என்று ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாகக் கூறியிருந்தது. இதைவைத்து தி.மு.க தலைவர் மு.கருணாநிதி இந்திய பிரதம மந்திரிக்கு அவசரமாக எழுதிய கடிதத்தில் ராஜபக்ஷ தனது ''கலர்'' என்னவென்று காட்டி விட்டார். அவரை இந்தியாவுக்குள் வர அனுமதிக்க வேண்டாம் என்று வற்புறுத்தியிருந்தார்.

எதுவானாலும் அந்தக் கருத்து ஜனாதிபதியின் இணையச் செய்தியில் திருத்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தத் திருத்தம் பின்வருமாறு இருந்தது. ''இன அடிப்படையில் இந்த நாடு பிரிக்கப்படுவது நடைமுறைச் சாத்தியமற்றது'' என்று திருத்தம் காணப்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் ஜெனிவாவில் கூடவிருக்கும் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்க ஆதரவில் கொண்டுவரப்படவிருக்கும் இரண்டாவது பிரேரணையை எதிர்கொள்ள இலங்கை அரசு ஆயத்தமாகி வருகின்றது. இது தொடர்பான ஓர் ஆவணம் எந்நேரமும் ஜெனிவாவில் விடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இனநல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை மேம்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசுக்கு ஆலோசனைகளும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்குவது குறித்த மனித உரிமைகளுக்கான ஐ.நா.உயர் ஆணையாளர் காரியாலயத்தின் அறிக்கை என்ற பெயரில் இந்த ஆவணம் வெளியிடப்படும் என்று தெரிகின்றது. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவநீதம் பிள்ளையால் வெளியிடப்படும் இவ்வறிக்கை அவர்களின் இணையத்தில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆவணத்தின் பிரதியொன்று ஏற்கனவே ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஆரிய சிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் அமெரிக்க அனுசரணையில் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைவாக அரசு மேற்கொண்ட, அல்லது மேற்கொள்ளாத விடயங்களை இந்த ஆவணம் வெளிப்படுத்தும் என்று தெரிகின்றது. அறிக்கையின் ஆரம்ப விவரங்களின்படி தீர்மானத்தின் பல விடயங்கள் செயற்படுத்தப்படவில்லையென்பது குறித்து ஏமாற்றம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் ஆணையாளர் அலுவலகத்தினால் கோரப்பட்ட தகவல்களை இலங்கை அரசு தருவதற்கு பின்னடித்தமை பற்றியும் குறிப்பிடுவதாய் இருக்குமாம்.

ஆணையாளரின் அறிக்கையின் மீது பேரவையில் பெப்ரவரி 28 அல்லது மார்ச் முதலாம் திகதி விவாதம் நடைபெறலாம் என்று தெரிகின்றது. இவைகளுக்கிடையில்,

இலங்கை பற்றிய பருவகால ஆய்வு தொடர்பான அறிக்கையும் மார்ச் 15 ஆம் திகதி விவாதத்துக்கு வரவிருக்கின்றது. இந்த அறிக்கையில் பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளுக்குசட்ட வரைவு வழங்கும்படி அரசு கோரப்படலாம் என்று தெரிகின்றது.

மனித உரிமைப் பேரவையின் விவாதங்களின் பிற்பகுதியில் அமெரிக்காவின் இரண்டாவது தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படலாம். கடந்த முறையைப் போன்று இந்த முறையும் இந்தியா தீர்மானத்தை ஆதரிக்கும் என்று தெரிகிறது. ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போதும் அவர் புதுடில்லிக்கு பேச்சுக்கள் நடத்துவதற்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை. ★

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் சுபகாரியங்கள் ஏற்பாடாகும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

**இடபம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டுமென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**நாளை**

மாசி- 01 புதன்கிழமை 13.02.2013
திதி: திருதியை மு.ப. 11.22 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ 05.58 வரை
(சதுர்த்தி விரதம்)
சுபநேரம்: 05.03- 06.33 வரை
ராகுகாலம்: 12.33- 02.03 வரை

**துலாம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**தனுசு:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**கும்பம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மீனம்:** எடுத்த வேலையை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். அரச விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். சகோதர வகையில் மனவருத்தம் வரும். வியாபாரத்தில் மிகுதிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப் போங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 8 | | | 7 |
| | | | | 1 | | 3 | 2 | |
| 4 | | 3 | | | 5 | | 1 | 6 |
| 2 | | | 5 | 8 | | 6 | 7 | |
| | | 4 | 2 | | 3 | 9 | | |
| | 8 | 5 | | 6 | 1 | | | 4 |
| 9 | 4 | | 1 | | | 5 | | 2 |
| | 6 | 1 | | 5 | | | | |
| 5 | | | 6 | | 9 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 5 | 4 | 8 | 7 | 2 | 1 | 9 |
| 7 | 2 | 8 | 1 | 5 | 9 | 3 | 6 | 4 |
| 1 | 9 | 4 | 2 | 6 | 3 | 7 | 5 | 8 |
| 5 | 3 | 2 | 8 | 9 | 6 | 1 | 4 | 7 |
| 4 | 8 | 1 | 7 | 3 | 2 | 6 | 9 | 5 |
| 9 | 7 | 6 | 5 | 4 | 1 | 8 | 3 | 2 |
| 6 | 4 | 7 | 3 | 2 | 5 | 9 | 8 | 1 |
| 2 | 5 | 3 | 9 | 1 | 8 | 4 | 7 | 6 |
| 8 | 1 | 9 | 6 | 7 | 4 | 5 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





காதி நீதிவான்கள் சம்மேளனத்தின் வருடாந்த மாநாடு கொழும்பிலுள்ள ரண்முத்து ஹோட்டலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அந்த மாநாட்டில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டார்.

## இந்திய- இலங்கை மின்சாரசபைகளுக்கு இடையில் முறுகல்

கொழும்பு,பெப்.12

இந்தியாவின் தேசிய மின்சாரக் கூட்டுத்தாபனத்துக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

அதன்காரணமாக திருகோணமலை மாவட்டம் சம்பூரில் இந்தியாவின் உதவி யுடன் அமைக்கப்படவுள்ள 500 மெகாவோட்ஸ் உற்பத்தியைத் தரவல்ல மின்சார நிலையத்தின் பணிகள் தாமதமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கையில் மாற்றங்களைக் கொண்டுவர இலங்கை மின்சார சபை முயற்சிப்பதையடுத்தே முறுகல் ஏற்பட்டுள்ளது என்று இந்திய தேசிய மின்சாரக் கூட்டுத்தாபனம் குற்றம் சுமத்தியுள்ளது. (ச)

## வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு காணியை விற்கமுடியாத வகையில் சட்டத்திருத்தம்

### காணி அபிவிருத்தி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,பெப்.12

வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்பனை செய்ய முடியாத வகையில் சட்ட திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தம்புள்ள பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்தச் சட்ட திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது என்று அவர் கூறினார்.



வறிய மக்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். காணிச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதன் மூலம் வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகளைக் கொள்வனவு செய்யவது தடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## தரக்குறைவான டீசல் இறக்குமதி திருப்பி அனுப்பியது இலங்கை

### பரிசோதனையின் பின்பே நிராகரிப்பு என்கிறது பெற்றோலிய வள அமைச்சு

கொழும்பு,பெப்.12

இலங்கைக்குத் தருவிக்கப்பட்ட தரக்குறைவான ஐயாயிரம் மெற்றிக்தொன் டீசல் அடங்கிய கப்பல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்று பெற்றோலிய வள அமைச்சு தெரிவித்துள்ளது.

லங்கா இந்தியன் ஒயில் கம்பனி நிறுவனம் சிங்கப்பூரில் இருந்து தருவித்திருந்த டீசலே உரிய தரத்தில் இல்லாமையால் திருப்பி அனுப் பப்பட்டது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த எண்ணெய்க் கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையை வந்தடைந்தது. கப்பலில் உள்ள டீசல் இறக்கப்படுவதற்கு முன்னர் அதன் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று எண்ணெய் சுத்திகரிப்புக் கம்பனி தெரிவித்துள்ளது.

எண்ணெய் மாதிரிகள் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆய்வு கூடத்திலும், கொலன்னாவ ஆய்வு கூடத்திலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பரிசோதனையை அடுத்து அவை உரிய தரத்துக்கமைய இருக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.. அதனையடுத்து 5 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலும் நிராகரிக்கப்பட்டது என்று பெற்றோலிய வள அமைச்சு சுட்டிக்காட்டியது. அது குறித்து இந்தியன் ஒயில் கம்பனிக்கும் அறிவிக்கப்பட்டது.

பரிசோதனையின் மூலம் தாம் கொள்வனவு செய்த டீசல் நிராகரிக்கப்பட்டதையடுத்து, அவற்றை மீள சிங்கப்பூருக்கு அனுப்ப எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் முடிவு செய்துள்ளது.

குறித்த டீசலில் ஒரு துளி கூட இங்கு இறக்கப்படவில்லை என்று எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர் சுபோத் பக்வாதி தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தரம் குறைவான எரிபொருள் இறக்குமதி தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டதோடு வாகனங்களிலும் கோளாறுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைக்கு பேட்ஸ் கிருமிநாசனி பாவிப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும்

### சுகாதார அமைச்சர் உத்தரவு

கொழும்பு,பெப்.12

பேட்ஸ் கிருமிநாசனிகளை நுளம்பு ஒழிப்புக்கெனப் பயன்படுத்தப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பி. ரி. ஐ. பக்றீரியா நுண்ணுயிரைப் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பயிர்ச் செய்கைகளுக்குத் துணைபுரியும் தேனீக்கள், குளவிகள், வண்ணத்துப் பூச்சிகள், சிலந்திகள் போன்றவற்றுக்கு பேட்ஸ் போன்ற கிருமிநாசனிகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பி.ரி.ஐ. பக்றீரியாக்கள் அவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்த மாட்டா என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபை, தெஹிவளை, கல்கிஸை மாநகர சபை, கொலன்னாவ நகர சபை



உள்ளிட்ட பிரதேசங்களில் மாத்திரம் நுளம்பு ஒழிப்புக்காக பி.ரி.ஐ. பக்றீரியாவை ஒரு தடவை விமானம் மூலம் விசிறுவதற்கு 225 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

பி.ரி.ஐ.பக்றீரியா சுமார் இரு வாரங்கள் அளவில்தான் உயிருடன் காணப்படும். அதனால் அதனை மீண்டும் மீண்டும் விமானம் மூலம் விசிற அதிக செலவு ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதனை அமைச்சரவையின் கவனத்துக்கு எடுத்துக் கூறியுள்ளேன் என்று அவர் குறிப்பிட்டார்.(ச)

## ஆயுள்வேத வைத்தியர்களுக்கான இடமாற்றங்கள் சட்டரீதியற்றன

### சுகாதார சேவைகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.12

ஆயுள்வேத வைத்தியர்களுக்கான இடமாற்றம் சட்டரீதியான முறையில் வழங்கப்படவில்லை என்று அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அதிகாரிகளின் தேவைக்கேற்ப நீதிக்குப் புறம்பான வகையில் குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயுள்வேத வைத்தியத் துறையில் பல்வேறு பிரச்சினைகள் தற்போது எழுந்துள்ளன என்று குறித்த சங்கம் கூறியுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வரும் நோக்கில், வைத்தியர்கள் சங்கம், வைத்தியசாலை சேவைகள் சங்கம், தேசிய வைத்திய சபை உட்பட பல அமைப்புகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## பொலிஸாரைத் தாக்கிவிட்டு இரு குழுக்கள் தப்பியோட்டம்

கொழும்பு,பெப்.12

பன்னல பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலை கட்டுப்படுத்தச் சென்ற மூன்று பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அவசரப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பன்னல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளது.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய இரு குழுவினரும் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் காயமடைந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும்மாக துர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

(ச)

## மும்மொழிக் கொள்கையை கடைப்பிடிக்காத நிறுவனங்களுக்கு எதிராக வழங்குத் தாக்குல்

கொழும்பு,பெப்.12

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் ஊடாக வெளியிடப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் செயற்படுத்தத் தவறிய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக சட்ட மா அதிபரின் ஆலோசனைகளைத் தாம் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் மெதிவக்க தெரிவித்தார்.

மும்மொழிகளிலும் பெயர்ப் பலகைகளைக் காட்சிப் படுத்தாத பஸ்களை சுற்றி வளைப்பதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களில் பெயர் பலகைகள் மும்மொழியிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று அரச கரும

**தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களில் பெயர் பலகைகள் மும்மொழியிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்**

மொழிகள் ஆணைக்குழுவால் கட்டாய மாக்கப்பட்டிருந்தது என்று அவர் கூறினார்.

மும்மொழிகளிலும் பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்படாத பஸ்கள் தொடர் பான தகவல்களைப் பெற்றுத் தருமாறு ஆணைக்குழுவால் பொலிஸ் மாஅதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டமைக்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று ஆணைக்குழுவின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.(ச)

## மொரட்டுவ பொலிஸ் நிலைய உயரதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு,பெப்.12

மொரட்டுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட நான்கு பேர் இடமாற் றம் செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவ எகொடஉயன விகாரையின் விகாரதிபதி மிடிகஹா தென்னே விமலவன் சதேரரின் படுகொலைச் சம்பவத்தையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல் காணப்படு வதாக குறித்த பௌத்த பிக்கு பல தடவைகள் முறைப்பாடு செய்த போதிலும், பொலிஸார் உரிய முறையில் விசாரணை நடத்தவில்லை என்று கூறப் படுகிறது.

மொரட்டுவ பொலிஸ் நிலை யத்தின் பொறுப்பதி காரியாக கமல் ஜயநெத்தி நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

## இணையத்தளத்தின் ஊடாக விசா பெறுவோரின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு,பெப்.12

இணையத்தளத்தின் ஊடாக விசா பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் இணையத்தளத்தின் ஊடாக விசா பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக தகவல், தொடர்பாடல் முகவர் நிறுவகம் அறிவித்துள்ளது.

மாதாந்தம் இணையத் தளத்தின் ஊடாக சுமார் ஒரு லட்சம் பேர் விசா பெற்றுக்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

இணையத் தளத்தின் ஊடாக விசா வழங்குவதன் மூலம் உரிய முறையில் துரிதகதியில் சேவைகளை வழங்க முடிகிறது என்று கூறப் படுகிறது.

இவ்வாறு இணை யத்தளத்தின் ஊடாக் விசா வழங்குவதன் மூலம் முன்னரைவிட வருமானம் கிடைக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

(ச)

# உங்கள் கனவுகள் நனவாகும் இலண்டன் ஸ்டாண்ட்போர்ட்ஸ்

இன்று இலங்கையில் நகரம் எங்கும் உள்ள பேச்சு என்னவென்றால் கல்வி மற்றும் போட்டிகளுமான உயர் கல்வியாகும். தற்போது அரச பல்கலைக்கழகங்களின் மாணவர் உள்வாங்கும் அடைவு மட்டத்தில் உள்ள போட்டித்தன்மை காரணமாக சர்வதேச பல்கலைக்கழக கல்லூரிகள் நல்லாட்சி, திறமையான கல்வி மூலம் மாணவர்களின் கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு பாதைகளில் இட்டுச் செல்வதில் முன்னோடியாக விளங்குகின்றன. இது ஓர் இரகசியமாக மேலும் விளங்கவில்லை. அதன் பிரதிபலனாய் இலங்கையின் உயர்கல்வி அமைச்சு இலங்கையை ஆசியாவின் கல்விக்கான மத்திய நிலையம் ஆக மாற்றும் நோக்கத்தினை அமைத்துள்ளது.

சாதாரண தரம் உயர்தரத்தின் பின் லண்டன், கனடாவில் கல்வி மற்றும் வேலை உடனான வாழ்க்கை.

இவ்வாறான ஒரு பின்னணியில் புது வருட ஆரம்பத்துடன் இலண்டன் ஸ்டான்போர்ட்ஸ் கல்லூரி இலங்கை மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களின் கனவுகளை நனவாக்கும் முகமாக புதிய மாற்றங்களைச் செய்துள்ளது.

இது பயனுள்ள கற்பித்தல் மற்றும் கல்வித்துறையில் சிறப்பியல்பை உருவாக்கும் தரத்தினைக் கொண்ட ஐக்கிய இராச்சிய ஸ்டான் போர்ட்ஸ் கல்லூரி, எஸெக்ஸ் கல்லூரி மற்றும் கனடாவைச் சேர்ந்த வட அட்லாண்டா கல்லூரி ஆகிய வழங்கல்களை ஒன்றிணைத்த சர்வதேச பங்காளிக் கல்லூரியாகும். சர்வதேச மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் 80 வருடங்களுக்கு மேலான ஒன்று திரட்டிய அனுபவங்கள் கொண்டுள்ளதுடன் தற்போது வருடாந்தம் 400 இற்கும் மேற்பட்ட முழு நேர பகுதி, நேர கற்கை நெறிகளுக்குச் சுமார் 25,000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

எவ்வாறாயினும் உள்ளூர், கல்விமான்கள் சங்கிலித் தொடரின் கேள்வி நிரம்பல் சவால்களுடன், இலங்கை இளைஞர்களுக்கான உயர் கல்வி இலக்குகளை அடைவதற்காக சமுத்திரத்தைக் கடந்து காற்று வீச வேண்டியுள்ளது.

அதன்படி எமது இலங்கை வளாகம் சரியாக இல 396 இல் கொள்ளுப்பிட்டி மத்தியில் அமையப் பெற்றுள்ளது. இது மாணவர்களுக்கு வாழ்க்கை மாற்றத்துக்கான அனுபவத்தை உறுதி செய்யும். அதேவேளை தரமான மற்றும் தொழில் நிபுண கல்விச் சூழலை வழங்குவதற்கு டியூட்டோரியல் நிர்வாக மற்றும் உதவிப் பிரிவுகள் அர்ப்பணத்துடனும் உள்ளன.

**கல்லூரியின் நோக்கமும் குறிக்கோளும்**

தரமான உயர்கல்விக்கு சந்தர்ப்ப முறைமைய இலங்கை மாணவர்களின் வீதத்தை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு தனி நபர்களுக்கு தாங்கக் கூடிய வகையில் உயர் தர முறைமைய கல்வியை வழங்குவதை அடைவதே கல்லூரியின் நோக்கம்.

அத்தோடு உள்ளூர் தொழில் அதிபர்களின் தொழில்சார் பங்காளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் உறுதியான வேலைப் பங்காளியாக விளங்குவதுமாகும்.



இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் 18 பிளஸ் கணக்கைப் பேணி வருகின்ற திருமதி விமல்ஜா அகிலனின் திருமணத்தின் போது இலங்கை வங்கியினால் ஒரு பவுண் தங்க நாணயம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. முகாமையாளர் இ.சிவதாஸ் அதனை வழங்கினார். (த-253)

# "நெஸ்லே" நிறுவனத்தின் மலேசியாச் சுற்றுலா


யாழ்ப்பாணம்,பெப்.12

நெஸ்லே நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனையை திறம்பட மேற்கொண்ட விற்பனையாளர்கள் 36 பேருக்கு மேற்பட்டோர் மலேசியாவில் ஒருவார கால சுற்றுலாப் பயணம் மேற்கொண்டார்கள்.

அப் பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நெஸ்லே நிறுவனமே செய்திருந்தது.

இச் சுற்றுப் பயணத்தில் யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை ஜெயகணேசா நிறுவனத்தைச் சேர்ந்த கே. தங்கராசா, கிளிநொச்சி முல்லை ஸ்ரோர் உரிமையாளர் க. சந்திரசேகரன் வவுனியா வர்த்தகர் செ.குமணன், கற்பிட்டி வர்த்தகர் ஏ. அஸ்லம் உட்பட நாடெங்கிலும் இருந்து வர்த்தகர்கள் பங்கு பற்றினார்கள்.

மலேசியாவில் உள்ள சுற்றுலா மையங்கள், மற்றும் கோயில்கள், பள்ளிவாசல்கள் என்பனவற்றையும், அந் நாட்டில் மிக உயர்ந்த 8 மாடிகளைக் கொண்ட குயின்ரலர் என்னும் இரட்டைக் கோபுரத்தையும் இவர்கள் பார்வையிட்டனர். அத்துடன் கொக்கோ தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் பலவற்றையும் இவர்கள் பார்வையிட்டுத்திரும்பினார்கள். (த-8)



யாழ்.நகரில் வின்சர் சந்தியில் அமைந்துள்ள என். எஸ். ஆர். ரூபன் கடைத்தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கடைத்தொகுதியின் உரிமையாளர் நடராசா சத்தியரூபன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

# ஐ.ஐ.எஸ். பட்டமளிப்புவிழாவும் 17 ஆவது நிறுவன தின நிகழ்வும்

யாழ்ப்பாணம்,பெப்.12

IIS நிறுவனத்தின் 17 ஆவது நிறுவன தினவிழாவும் IIS City Campus நிறுவனத்தின் பட்டமளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஷ் தலைமையில் இல 1229, கே.கே.வீதி, பூநாறிமரத்தடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ''செல்வா மஹாலில்'' நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் IIS City Campusஇல் 2012/13 கல்வியாண்டில் தமது கற்கை நெறிகளை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படுவதுடன் IIS நிறுவனத்தில் பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

இவர்களில் சிறந்த முதன்மையான தகைமைகளை வெளிப்படுத்திய மாணவர் ஒருவருக்கு IIS நிறுவனத்தின் அதியுயர் விருதான அமரர் வைத்தியலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்படும். மேலும் ஒவ்வொரு கற்கை நெறிகளிலும் முதன்மையாக வந்த மாணவர்களுக்கு விசேட விருதுகளும் வழங்கப்படும். (த)

# பைனோ கெயார் வழங்கும் பாதுகாப்பு

சருமத்தில் ஏற்படுகின்ற நிறமாற்றத்திலிருந்து ஓர் இலகுவான, பாதுகாப்பான, திறன்மிக்க தீர்வு வழிமுறையாக, மேகா லைஃப்சயனன்சஸ் விரைவில் அறிமுகப்படுத்த வுள்ள வாய் மூலமாக உட்கொள்ளும் தீர்வான பைனோகெயார், சருமத்தில் ஏற்படும் நிறமாற்றத்திற்கான காரணத்தை அடிப்படை மூலத்திலேயே குணப்படுத்தும் பலனை அளிக்கின்றது.

முன்னிலை வகிக்கும் ஒரு மருந்து வகை உற்பத்தி நிறுவனமான மெகா லைஃப்சயன்சஸ் நிறுவனம் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தனது வியாபாரத் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது. ஜேர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த உணவு மற்றும் மருந்து வகை அதிகார சபைகளின் சான்று அங்கீகாரத் தைப் பெற்றுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஏற்பட்டு வசதிகள் தாய் லாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ளன. சருமப் பராமரிப்பு மற்றும் அழகுச் சேர்க்கை, பெண்கள் ஆரோக்கியம், உடல் எடையை கட்டுப் படுத்தல், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருத்தல் மற்றும் பொதுவான போஷாக்கு ஆகிய துறைகளில் பல்வேறு நாடுகளிலும் சந்தையில் முன்னிலை வகிக்கின்ற சர்வதேச அளவில் பிரபலமான முன்னணி வர்த்தக நாமங்கள் பல மெகா (Mega) என்ற வர்த்தக நாமத்தின் கீழ் கிடைக்கப்பெறுகின்றன.

புத்தாக்கத்துடன் தரமான உற்பத்திகளை அறிமுகப்படுத்தி மக்களின் வாழ்வை வளப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பில் எப்பொழுதும் கவனம் செலுத்தி வருகின்ற மெகா லைஃப் சயன்ஸ்சஸ் (Mega Lifesciences) நிறுவனம் இதே கோட்பாட்டின் அடிப்படையில் அறிமுகப்படுத்தும் மற்றுமொரு உற்பத்தியே பைனோகெயார். கரும்புள்ளிகள், சருமத்தில் ஏற்படுகின்ற நிறமாற்றங்கள் மற்றும் சருமத்தில் ஏற்படுகின்ற சீரற்ற நிறத்தோற்றம் ஆகியவற்றை வெற்றிகரமாகக் குணப்படுத்துவதற்கு இலங்கையில் கிடைக்கப்பெறும் வாய்மூலமாக உட்கொள்ளும் ஒரேயொரு தீர்வாக பைனோகெயார் உள்ளது. பைனோகெயார் ஏற்கனவே பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர்,மலேசியா, தாய்லாந்து மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் 2004 ஆம் ஆண்டு உடல் கட்டுக் கோப்புக்காக மிஸ் மலேசியா (Miss Malaysia Fitness) பட்டத்தைப் பெற்றிருந்த மீய் லியு அவர்கள் இந்த உற்பத்தி மீது மிகுந்த நல்லபிப்பிராயம் கொண்டுள்ளார். என்று பைனோகெயார் உற்பத்தி யின் வர்த்தக முகாமையாளரான ருச்சிரா வெலிப்பிட்டிய குறிப்பிட்டார்

ஒவ்வொரு பைனோகெயார் ஜெல் வில்லைகளிலும் தாழம் பட்டை மற்றும் கடல் பூண்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பதார்த்தங்களின் சேர்வை கிடைக்கப் பெறுவதுடன் விட்டமின் 'சி' மற்றும் 'டி' பயனின் வலிமையை விடவும் 50 மடங்கு சிறந்த எதிர்ப்பாற்றல் பண்பு வலுவைக் கொண்டுள்ளது.

அத்துடன் இதன் வீரியத்தின் முழுப் பலனையும் வழங்கும் வகையில் Actisome ஆற்றலின் இணைப்பையும் கொண்டுள்ளது.

# தேசப்பற்று, சமூகப்பற்றுள்ளோராக ஒவ்வொருவரும் இருக்க வேண்டும்

**கல்முனை மாநகரசபை உறுப்பினர் தெரிவிப்பு**

கல்முனை,பெப்.12

தேசப்பற்று, சமூகப் பற்று, ஊர்ப்பற்று, வீட்டுப்பற்று என பல்வேறு வழிகளிலும் மக்கள் பற்றாளர்களாக இருக்க வேண்டும். தனது சமூகம் சார்ந்த பற்றாளர்களாக ஒவ்வொரு மனிதனும் இருக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஏ.எம்.பறக்கத்துல்லா தெரிவித்தார்.

கல்முனைக்குடி, செயிலான் வீதியில் அண்மையில் இடம்பெற்ற இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று உலகளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகள், வன்முறைகள் என்பன ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்று பிளவுகள் அதிகரிக்கப்பட்டமையால் கல்வி, கலாசாரம், வாழ்வியல் போன்ற விடயங்களில் எமது சமூகம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

**கல்வி, கலாசாரம், வாழ்வியல் போன்ற விடயங்களில் எமது சமூகம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.**

இலங்கையில் இன்று முஸ்லிம் மக்களின் பூர்வீகம் அழித் தொழிக்கப்படும் கைங்கரியம் சில மதவாத அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எமது சமூகம் கருத்து முரண்பாடுகளுக்கப்பால் ஒன்றுபட்டு அதனை எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக வேண்டும்.

இன்று பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் எமது சேவை தொடர்கிறது. கல்முனைப் பிரதேசத்தில் வீதிகள் மற்றும் இதர தேவைகள் நிறைவேற்றப்படுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதற்காக திட்டமிடப்பட்ட ஒரு பொறிமுறையின் அடிப்படையில் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். மக்கள் தங்களுக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை அரசியல்வாதிகளை அணுகி சுட்டிக்காட்ட வேண்டும். -என்றார். (ச)

# உணவு ஒவ்வாமையால் 20 மாணவிகள் சுகவீனம்

**பொதுச் சுகாதார பரிசோதகர் குழு விசாரணை**



காத்தான்குடி,பெப்.12


**காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலயத்தில் கல்வி** கற்கும் 20 மாணவிகள் காலை உணவு ஒவ்வாமையினால் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் நேற்று திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

**இவ்வாறு** திடீரென சுகவீனமடைந்த மாணவிகள் **காத்தான்குடி** ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.ஆதில் தெரிவித்தார்.

**இந்த** மாணவிகளில் 5 பேருக்கு மயக்கம் மற்றும் **வாந்தி** ஏற்பட்டுள்ளன என்று **வைத்தியர்** கூறினார்.

**காத்தான்குடி** ஸித்தீக்கியா மகளிர் அரபுக் கல்லூரியைச் சேர்ந்த இந்த மாணவிகள், நேற்றுக் காலை ஸித்தீக்கியா அரபுக் கல்லூரியிலிருந்து காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலயத்துக்கு வந்து கல்வி கற்றுக்கொண்டிருந்தபோதே திடீர் சுகவீனமடைந்தனர்.

பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.எல்.எம்.றஹ்மான் தலைமையில், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி, யு.எல்.நசிர்தீன் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினர் வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன வைத்தியசாலைக்குச் சென்று ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்தார். (ச)



கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியபோது...

## கிணற்றில் தவறி விழுந்து குழந்தை சாவு

பொகவந்தலாவை,பெப்.12

பொகவந்தலாவை, தெரேசியா தோட்டத்தில் ஒரு வயதுக் குழந்தை கிணற்றில் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளது. வீட்டுத் தோட்டத் தில் அமைந்துள்ள கிணற்றில் கடந்த சனிக்கிழமை மாலை தவறி விழுந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சடலம் பொகவந்த லாவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பள்ளத்தில் விழுந்தது வாகனம் 12 பேர் வைத்தியசாலையில்



மஸ்கெலியா,பெப்.12

மஸ்கெலியா நகரில் இருந்து டங்கள் நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் போக்குவரத்து வாகனம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விபத்தில் சிக்கியதில் 12 பேர் காய மடைந்தனர்.

டங்கள் தமிழ் வித்தியாலயத்துக்கு அருகில் வீதியை விட்டு விலகி சுமார் 25 அடி பள்ளத்தில் இந்தப் வாகனம் விழுந்து விபத்துக்குள்ளானது.

வாகனத்தில் பயணித்த 12 பயணிகளும் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகனத்தில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்துக்குக் காரணம் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்த நெருக்கடியை எதிர்கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

**ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வேண்டுகோள்**

நுவரெலியா,பெப்.12

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதில் தற்போது தோன்றியுள்ள நெருக்கடி நிலைமையை எதிர்கொள்வதற்கு அனைத்து மலையக அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வரவேண்டும்.

இவ்வாறு ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப் அஸீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தோட்ட சேவையாளர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள சம்பள உயர்வு தொடர்பான வழக்கு, தொழில் நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. அந்தநிலையில் கூட்டொப்பந்தத்தை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது என்று முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன என்று முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது. அதனை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஏனெனில், தோட்டப் பொதுச் சேவையாளர்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் தோன்றியிருக்கும் முரண்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாட்டு சபை மூலமாகவே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தநிலையில், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஏற்படும் கூட்டு ஒப்பந்தத்தை இது எவ்வகையிலும் பாதிக்கப்போவதில்லை என்ற யதார்த்தத்தை முதலாளிமார் சம்மேளனம் உணர்ந்து செயற்படவேண்டும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை முன்னெடுக்கப்படும் கூட்டு ஒப்பந்தம் மூலம் உண்மையிலேயே பெருந் தோட்டத் துறை மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

**வரவு – செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத்துறை மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கும் உரிமைகள் அவர்களுக்கு திட்டமிட்டு மறுக்கப்படுகின்றன.**

வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத்துறை மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கும் உரிமைகள் அவர்களுக்கு திட்டமிட்டு மறுக்கப்படுகின்றன.

நாளாந்தம் அதிகரிக்கும் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தால் வறுமை நிலைக்குள் மக்கள் தள்ளப்படுகின்றனர்.

ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கும் கல்வி, தொழில் வாய்ப்பு போன்ற வசதிகள் அவர்களுக்கு மிக அரிதாகவே வழங்கப்படுகின்றன.

எனவே முதலாளிமார் சம்மேளனத்தின் அறிவிப்பை அனைத்து தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்டு நிராகரித்து தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க அணைவரும் முன்வரவேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## குளவி கொட்டுக்கு இலக்கான அறுவர் வைத்தியசாலையில்

லிந்துலை,பெப்.12

லிந்துலைப் பகுதியில் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

தேயிலைத் தோட்டமொன்றில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஆறு தொழிலாளர்களே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தார்.

காயமடைந்த நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் மூன்று பெண்களும், ஆணொருவரும் தொடர்ந்து சிகிச்சைப் பெற்றுவருகின்றனர்.

இரண்டு பேர் சிகிச்சைகளின் பின்னர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர். (ச)

## விற்பனை முகவர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் பிரபல விற்பனை நிலையத்தின் பொருள்களை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய முகவர் தேவை. மாதாந்தம் ரூபா 30,000/= தொடக்கம் ரூபா 35,000/= வரை சம்பாதிக்கலாம்.

(ரி/9202)(5-6-7) தொ.பே: 021 227 0586


# பெரும்பான்மை இனத்தவர் எம்வாழ்வையும் காணிகளையும் தொடர்ந்து அபகரிக்கின்றனர்

## முல்லை மக்கள் முறையீடு

யாழ்ப்பாணம், பெப்.12

''எமது காணிகள் பெரும்பான்மையினத்தவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. சட்ட விரோதமான மீன்பிடி நடவடிக்கையிலும் பெரும்பான்மையின மக்கள் ஈடுபடுவதால் எமது தொழில் நடவடிக்கைகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.'' இவ்வாறு இளம் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடம் முல்லைத்தீவு மக்கள் முறையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் மற்றும் செம்மலை போன்ற பிரதேசங்களுக்கு, இலங்கையின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினர் நேற்றுச் சென்றனர். இவர்கள் அந்தப் பகுதிகளிலுள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது கொக்கிளாய் மக்கள் தமது பிரச்சினைகளை இந்தக் குழுவிடம் எடுத்துரைத்தனர்.

''கடல் நீரேரிப் பகுதியில் தென்பகுதி மீனவர்கள் தடை செய்யப்பட்ட உபகரணங்களையும், தடைசெய்யப்பட்ட முறைகளையும் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் மீன்வளம் அருகிவருகின்றது. எமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

அத்துடன் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற இந்தப் பகுதியில் புதிதாக விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. மாரியாமுனையில் எங்களது காணிகள் பெரும்பான்மையினத்தவர்களால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இல்மனைட் தொழிற்சாலைக்காகவும் எங்களது காணிகள் கையகப்படுத்தப்படுகின்றன.

மேலும் கொக்கிளாய் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருகின்றன. அத்துடன் இந்த வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸை இராணுவத்தினரும், பிக்குகளுமே பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நாம் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றோம்'' என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

செம்மலை மக்கள் தெரிவிக்கையில், ''நாயாற்றிலும், கடலிலும் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தென்பகுதி மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர். நாயாற்றின் முகத்துவாரத்தில் சிங்கள மக்கள் படகுகளை கட்டுகின்றார்கள். இது தடை செய்யப்பட்ட நடவடிக்கை. இருப்பினும் அவர்கள் மேற்கொள்கின்றார்கள்.

மேலும் முல்லைத்தீவு கடல்தொழில் சமாசம் முன்னர் செயற்திறனோடு இயங்கி வந்தது. தற்போது அது மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளது.

செம்மலையைச்சேர்ந்த மக்களுக்கு புளியமுனைப் பகுதியில் பெமிற் காணிகள் இருக்கின்றன. இருப்பினும் அந்தப் பகுதிகளுக்கு தற்போது செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. அதனை மீட்டுத் தாருங்கள்'' என்றனர்.

இவற்றைக் கேட்டறிந்துகொண்ட இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவிக்கையில், ''இந்த விடயங்கள் எங்களுக்கு அதிர்ச்சியைத் தருகின்றன. அதேவேளை கவலையாகவும் இருக்கின்றது. இதனை உரிய இடத்துக்கு எடுத்துச் சென்று தீர்வைப் பெற்றுத் தருகின்றோம்'' என்றனர். (ரா-5)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை தர்மலிங்கம்



அளவெட்டி கிழக்கு கும்பிளாவளைப் பிறப்பிடமாகவும், உடுவில்கிழக்கு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தர்மலிங்கம் நேற்று (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகரஞ்சனியின் அன்புக் கணவரும், புஸ்பராசா, சந்திரபோஸ், பொன்ராசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கீதா(ஜேர்மனி), பிரகாஸ், ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொன்னுத்துரை(ஜேர்மனி), பிரேமினி, ஜீவிதா ஆகியோரின் அன்பு மாமனும், றெஜினா, சிதா, றெனித்தா, கனிஸ்ரன், கவி ஆகியோரின் அன்பு பேரனும், யோகலிங்கம், யோகரத்தினம், யோகம்மா, யோகலக்சுமி, சிறீமதி, சிவலிங்கம், தெய்வேந்திரம்(பிரான்ஸ்), பத்மஸ்ரீ (நோர்வே), ஸ்ரீதரன்(நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.02.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக தலையாழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பிஜயா சாந்தி



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை 4ஆம் கட்டை யை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சாந்தி நேற்று (11.02.2013) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தம்பிஜயாவின் (கணவர்) அன்பு மனைவியும் துஷ்யந்தனின் பாசமிகு தாயும் கஜேந்தினியின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, கண்ணம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் ராசரத்தினம், செல்வரத்தினம், அரசன் ஆகியோரின் ஒரே செல்வச் சகோதரியும் காலஞ்சென்ற கிருஷ்ணன், செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் உமாதேவி, இந்திரா, கோணேஸ்வரி, மைனா, றதி, வலி, நளினி, தில்லையம்பலம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுஜித், சுஜீவா, பிரவணா, லகீசன், கௌசிகன், குற்றாலீசன், ஜெயகோபன் ஆகியோரின் அன்புச் சித்தியும் கிருபாயினி, துஷாந்தினி, தர்சாயினி, பத்மலோயினி, ஜனனி, திவாகரன், கிருராச், நந்தா பிரதாபன், சஜந்தன், கஜேந்தினி, முகுந்தன், புவனேயினி, மயூரன், சிந்துஜா, சஜிந்தன், ஜெயந்தன், பிருந்தா, நிரோயினி, யசோதரன் குஷாலினி, கிருஜிகா, கஜானா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (13.02.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை,
(பக்கத்தின்னி பிள்ளையார் கோயிலடி)

தகவல்
தம்பிஜயா,
துஷ்யந்தன் (மகன்)

## தம்பிஜயா இராஜேஸ்வரி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய், வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா இராஜேஸ்வரி நேற்றுக்காலை (11.02.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜகாரி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தம்பி ஐயாவின் அன்பு மனைவியும் ரஞ்சனா (சுவிஸ்), நந்தகுமார் (சுவிஸ்), நளினா (துபாய்), காலஞ்சென்ற சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் சிவனொளிபாதம் (சுவிஸ்), சர்மிளா (குட்டி- சுவிஸ்), கார்த்திக் (கோபி) ஆகியோரின் அன்பு மாமியும் தீபிகன், அஸ்விதா, ஸஸ்மிதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், ஈஸ்வரி, மகேஸ்வரி, கந்தசாமி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.02.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.


## பணிப் பெண் தேவை

வீட்டில் நிரந்தரமாகத் தங்கிப் பணி செய்யக் கூடிய எவ்வித பொறுப்பு மற்ற 24 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.

தொ.பே: 021 222 8125

## விற்பனைக்கு

★ஜேர்மனி சப்போட இரண்டு மாதம் நிரம்பிய குட்டி, கிறேடன் 1-3வயது (ஆண்,பெண்) நாய்விற்பனைக்கு
★ஐஸ்கிறீம் கொம்பனி, ஐஸ்கிறீம் வான் என்பன விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 9592945

## விற்பனைக்கு

எம்மிடம் Super Sound prov perkins (30kva, 40kva) மின்பிறப்பாக்கிகள் U.K இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 0774722780
கற்பொக்கணை, கந்தரோடை,
சுன்னாகம். (29243)(8.14)

## வேலையாள் தேவை

★கணினியில் தமிழ்,ஆங்கில ரைப்பிங் செய்யக்கூடிய பெண்பிள்ளை தேவை.
★ யூஸ் கொம்பனியில் பைக்கிங் வேலை செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை.

அம்மா ஸ்ரூடியோ
இல.28,வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 711 1530,
077 758 7079
(29159)(5-6-7)

தூரிகையின்

## கேக் ஐசிங்

### பயிற்சி வகுப்புக்கள்

16.02.2013
சனி 2.30 மணிக்கு
ஆரம்பமாகின்றன



கலந்து கொள்ள விரும்புவோர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்க.



தூரிகை
11,பொன் கந்தையா லேன்,
ம.ம.வித்தியாலய வீதி,
நெல்லியடி.

## துரிதகதியில் துல்லியமான பதிப்பு

- விசிட்டிங்காட்
- வில்புத்தகம்
- லேபல்கள்
- நினைவுமலர்கள்
- பருவகால மலர்கள்
- சஞ்சிகைகள்
- போஸ்டர்கள்
- லேட்டபாட்
- சான்றிதழ்கள்
- அழைப்பிதழ்கள்
- CD கவர்கள்
- CD ஸ்ரிக்கர்கள்

நியாய விலை உத்தரவாதம்

சகலவிதமான பிறிண்டிங் வேலைகளும்

xerox டிஜிற்றல் முறையில் கலர் பிறிண்ட்

யாழில் M கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875 கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்


## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08.09.1950

இறப்பு
24.02.2012



அமரர்
கந்தையா
நடராசமூர்த்தி
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்-விடத்தற்பளை)

அன்புள்ள அப்பா!
ஆண்டு ஒன்று ஆனாலும்
அகலாது உங்கள் நினைவு
காலமோடிப் போனாலும்
மறைந்திடுமோ உங்கள் அன்பு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் சிறகடித்துப் பறந்ததுவோ
உங்கள் சிரித்தமுகம் இனி எப்போது காண்போம்-அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓராண்டு நினைவு தின நிகழ்வு இன்று(12.02.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.09, உடையார் ஒழுங்கை,
பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(29426)(8.14)

# மரண அறிவித்தல்

## முருகேசு தங்கராசா (பாரதி)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா சாந்தசோலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தங்கராசா (பாரதி) நேற்று (11.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கெங்காநிதியின் பாசமிகு கணவரும் ஈஸ்வரன், சித்திரா, துஷி, காலஞ்சென்ற கிருஷ்ணா மற்றும் கஜேந்தினி, நிஷாந்தினி, கஜந்தன் ஆகியோரின் தந்தையும் நவநீதன், நாகேஸ்வரி, ராஜேஸ்வரி, சுதர்சன், இராகுகி, காயத்ரி, தேவசீலன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2013) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு சாந்தசோலை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாந்தசோலை,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நவநாள் திருவிழா

பளை, பெப்.12

பளை புலோப்பளை புனித லூர்து மாதா தேவாலய நவநாள் திருவிழா எதிர்வரும் 14ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

14 ஆம் திகதி வியாழக் கிழமை மாலை திரு நற் கருணை ஆராதனையும், திருப்பலி பூசையும் இடம் பெற்ற மறுநாள் வெள்ளிக் கிழமை காலை திருநாள் பாடற் பலிபூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

திருநாள் ஆராதனைகளை பங்குத் தந்தை அருட்பணி ஜேம்ஸ்நாதன் அடிகள் நடத்துவார். (3-9)

# ஐ.நா. அலுவலகங்கள் இன்று முற்றுகையிடப்படும்

## மே 17 இயக்கம் அறிவிப்பு

உலக நாடுகளில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகங்களை இன்று செவ்வாய்க்கிழமை முற்றுகையிடப் போவதாக 'மே 17' இயக்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அதனைத் தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை எந்த முயற்சிகளையும் மேற் கொள்ளவில்லை.

இலங்கைப் போரில் ஐக்கிய நாடுகளின் பணிகள் குறித்து மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

அதில் ஐக்கிய நாடுகள் இழைத்த தவறுகளை பொதுச் செயலாளர் பான்கி மூனும் ஏற்றுக்கொண் டிருந்தார்.

இந்தநிலையிலேயே, ஐக்கிய நாடுகளின் அலுவலகங்களை இன்றைய தினம் முற்றுகையிடப் போவதாக 'மே 17' இயக்கம் அறிவித்துள்ளது. (வ)

## இளைஞர் கழகங்களை பதிவு செய்ய அறிவுறுத்து

தென்மராட்சி, பெப்.12

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் இளைஞர் கழகங்களின் இந்த வருடத்துக்கான மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள, ஆரம்பிக்கப்படவுள்ள இளைஞர்கழகங்கள் எதிர்வரும் மார்ச்31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ள இளைஞர் கழகங்களின் பதிவு தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும். பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலு வலர் ரி.விமலதாஸ் அறிவித்துள்ளார். (3-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

கம்பர் மலை வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இரவீந்திரன் தலைமையில் நடபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை, வைத்திய கலாநிதி வே.கமலநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

* * *

குருநகர், பெப்.12

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடை பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரிட்டன் லில்லி விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் எட்வின் குணரத்தினமும், கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளனும் கலந்து கொள்வர். (3-51)

* * *

கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் அதிபர் கே.கிரிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் கலந்துகொள்வார். (3)

* * *

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சு.நோபேட் உதயகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜ பிரதம விருந்தினராகவும், பழைய மாணவர் கு.முருகானந்தா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.(வ-29)

# உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.12

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயம்**

**கணிதப் பிரிவு**

நடராசா சாருசன்-3ஏ, சிவஞானம் அனுதீபன்-2சிஎஸ்,

**உயிரியல் பிரிவு**

மகேந்திரம் பொன்வேல்-2பிசி, தில்லைநாதன் தினேஸ்குமார்-3சி, தங்கராசா சிந்துஜா-பிசிஎஸ்,

கலைப்பிரிவு

தங்கவேல் கலைச்செல்வி-ஏ2பி, வரதராசன் நிரஞ்சனா-ஏபிஎஸ். (வ)

# பிறேமசாந் ஆய்வாளர் நிலைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.12

இந்திய எழுத்தாளர் பிறேமசாந்தின் 125 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தால் இலங்கையைச் சேர்ந்த கலாசாரம், இலக்கியத்துறை சார்ந்தவர்களிடமிருந்து பிறேமசாந் ஆய்வாளர் நிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்திய சாகித்திய கல்வி நிதியத்தால் பிறேமசாந் எனும் பெயரைக் கொண்டு ஆய்வாளர் நிலையை ஏற்படுத்தி, வருடாவருடம் ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளிலிருந்தும் கலாசாரம், இலக்கியத் துறைகளில் திறமை வாய்ந்த ஒருவருக்கு ஆய்வாளர் நிலை வழங்கப்பட்டு வருகின்றது.

ஆய்வாளர் நிலை, எழுத்தாளர் துறை, ஆய்வாளர் வசதிக்கேற்ப ஒரு மாதம் தொடக்கம் மூன்று மாதகாலமாக இருப்பதோடு சாகித்திய நிலையத்தால் உணவு, தங்குமிடம், சர்வதேச பயணம், இந்தியாவுக்குள்ளான பயணம் என்பன வழங்கப்படுகின்றன. அத்துடன் மேலதிகசெலவுகளுக்கும் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆய்வு நிலைக்கு வருகை தருபவர் தன்னுடைய ஆக்கங்கள் பற்றி அவருடைய ஆய்வாளர் நிலை காலப் பகுதியில் இந்தியாவில் வெவ்வேறு இடங்களில் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் அளிக்கவேண்டியவராவார்.

2013 ஆம் ஆண்டு பிறேமசாந் ஆய்வு நிலைக்காக கலை, இலக்கியத்துறை சார்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது சுய விவரங்களை நியமனங்கள், இந்திய கலா சார நிலையம், 16/2 கிறெகரிஸ் இடம், கொழும்பு-7 எனும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கலாம் என்று இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. (ம-14)

நினைவலைகள்

ஐந்தாம் ஆண்டு | ஏழாம் ஆண்டு





அமரர் சி.கந்தசாமி | அமரர் க.சந்திராதேவி

01.04.1934 தோற்றம் 21.12.1948

20.01.2008 மறைவு 31.01.2006

பூர்வபக்க திரயோதசி - திதி - பூர்வபக்க துதிகை

'வாழும் நாள் வரை நீளும் உம் நினைவுகள் வாழும்'

கந்தரோடை. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29400)(5.6.7)

**ஒத்துமாறல்**

கொழும்பு-12,கொட்டாஞ்சேனையில் தேசிய பாடசாலை ஒன்றில் பணிபுரியும் ஆசிரியை ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற விரும்புகிறார். ஒத்து மாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். 077 796 6796, 077 188 2495

(29422)(5-6-7)

**வீடு வாடகைக்குண்டு**

ஜின்னா வீதி, யாழ்ப்பாணத்தில் ஒஸ்மானியா பாடசாலைக்கு முன் ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட இரண்டு மாடி வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு -0779235610,0212255438

(29454)(3.8.7)

**காணிகள் விற்பனைக்கு**

சங்கானை மேற்கு, சாங்கையில் 11 பரப்பு பள்ள வயற்காணி (இரண்டு போகம் செய்யக்கூடியது) உரும்பிராய் சம்பந்தர் ஒழுங்கை, வடலிப் புலத்தில் 15 பரப்பு தோட்டக் காணி என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0772873245, 0778025022

(29401)(6.7.11)

PERFETTI van Melle

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மின் திருத்திக்கொடுக்கப்படும்.

Tel: 021 222 8680, 0775925088, 0750407430

(c/8217)(2.6)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 15.12.1979



உதிர்வு 26.01.2012

**கனகரத்தினம் தர்மரூபி (ரூபி)**

(திதி- 12.02.2013)

கார் கருத்த கூந்தல் சீர் வெளுத்துப் போகு முன்பு
தீ யெரிக்க வீழ்ந்து ஆண்டு ஒன்று ஆனதம்மா!
ஆண்டொன்றென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எம் சோகம் ! தீராது எம் துயரம்!
எம் குடும்பத்து குத்து விளக்கே! குன்றா மணியே!
ஏன் அணைத்தான் உனை இறைவன்?
எம்மையெல்லாம் விட்டு எங்கம்மா சென்று விட்டாய்?
ஊரெல்லாம் உன் செய்தி இடியாய் வந்து விழுந்ததம்மா!
கல் மனங்கள் கூடத் கண்ணீர் விட்டுக் கதறி அழுததம்மா!
மங்களம் காணுவாய் என மனமகிழ்ந்து இருக்கையிலே
மின்னாமல் பொழியாமல் மறைந்த மாயம் ஏன் தாயே!
ஏங்குகின்றோம்! தேம்புகின்றோம்! துடிதுடித்துப் போய் விட்டோம்
திரும்புகின்ற திசையெல்லலாம் உன் திருமுகமே தெரியுதம்மா
புன்சிரிப்பும் புண் படாப் பேச்சுமாய்
எல்லார் மனங்களிலும் என்றும் நீ வாழ்ந்திடுவாய்!
மீண்டும் ஒரு முறை மகளாய் நீ பிறக்க வேண்டும்
மன மகிழ்ந்து நாம் வாழ வேண்டும்
உன் ஆத்ம சாந்திக்காய் நாம் பிரார்த்திக்கின்றோம்.

நி.முகவரி
சாயுடை, மாவிட்டபுரம்.
த.முகவரி
கந்தையா வாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(c/8342)(6.7.11)

**6 ஆம் மாத நினைவஞ்சலி**



தோற்றம் 22.02.1963

மறைவு 21.07.2012

அமரர் **வேலுப்பிள்ளை பாலேந்திரன்**

கடந்த 21.07.2012 இல் சிவபதமடைந்த எமது சகோதரனின் நினைவாக நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய தபாற்கந்தோர் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

வே.இராடசேந்திரம் (சகோதரன்)

(29399)(6.7.11)

**தேவை (Sales Rep)**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு எமது பொருள்களை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) தேவைப்படுகின்றனர்.

PERFETTI van Melle Distributor

43, அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்பு- 0771541852,0773918678

(c/8358)(3.6.7)

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(14)

பிரம்மச்சரிய விரதம் என்பது காம எண்ணங்களின் கட்டுப்பாடு மட்டுமல்ல, அது சுய வளர்ச்சியின் உன்னத நிலையை அடைவதற்கான தொடக்கம்.

எமது எண்ணம் தான் எமது செயலைத் தூண்டுகிறது. ஆகவே, எமது கட்டுப்பாட்டை வளர்க்கும் எண்ணங்களை நாம் வரவேற்க வேண்டும். இல்லையென்றால் எண்ணங்களோடு கட்டுப்பாடும் எம்மை விட்டு அகலும்! சுய கட்டுப்பாடு மனதில் தான் தொடங்குகிறது. அதை மன உறுதி என்று கூறலாம். பிடிவாதம் என்றும் கூறலாம்.

ஒரு நோக்கத்தையும் அதனை அடையும் வழியையும் ஆராய்ந்து பார்த்தோமானால், கட்டுப்பாடு, ஒழுங்கு நெறி ஆகியவை வாழ்வுக்கு இன்றியமையாதவை என்பது புரிய வரும். இதைத்தான் எலிசபெத் ஹெய்க் என்ற அறிஞர் 'விழிப்புணர்வு' என்று எழுதுகிறார். இந்த விழிப்புணர்வு சதாசர்வ நேரமும், முக்கியமாக முடிவெடுக்கும் சமயங்களில் எமக்கு வழிகாட்டுமானால் வாழ்வில் வெற்றி காண்பது எளிதாகும்.

கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் மன உறுதிக்கு எது உதவுகிறது? எமது கட்டுப்பாட்டைச் சோதிக்கும் சூழ்நிலையில் எம்மை வைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. துறவறம் பூணும் இளைஞன் இளம் பெண்களுக்கு ஞானம் புகட்டும் சூழ்நிலையில் தன்னை வைத்துக் கொள்வது நல்லதல்ல. சாப்பாட்டைக் கட்டுப்படுத்த விரும்பும் மனிதர் விருந்துகளுக்குப் போவது உசிதமல்ல.

புத்தர் வெகுநாள் வரை பெண்களைச் சீடராக ஏற்றுக் கொள்ளவில்லை. ஐயப்பமலையிலிருக்கும் தவத்திரு சுப்பிரமுனிய சுவாமி, தமது கோயிலில், பெண் தெய்வங்களின் சிலைகளைக் கூட நிறுவவில்லை. எமது கட்டுப்பாட்டைச் சோதிக்கும் - தகர்க்கும் - எந்த எண்ணம் வந்தாலும் அதைத் தொடராதீர்கள். பிரம்மச்சரியத்தைப் பற்றி எழுதும் எமது நூல்கள் உணர்வுகளைத் தூண்டி விடும் உணவுப் பொருள்களான பூண்டு, வெங்காயம், மிளகாய், தேநீர், சர்க்கரை, நெய் ஆகியவற்றையும் சுருட்டு, பீடி, மது போன்றவற்றையும் ஒதுக்குமாறு எழுதுகின்றன.

கட்டுப்பாடுகளை நாம் முக்கியமாக செய்ய வேண்டியது முயற்சி, எமது கட்டுப்பாட்டிலிருந்து ஓரிரு முறை நாம் நழுவிப் போய்விட நேரலாம். அப்போதெல்லாம் நாம் எம்மை மிகவும் கடிந்து கொள்ளாமல், சாந்தமாக இழுத்து வந்து மீண்டும் கட்டுப்பாட்டில் நுழைப்பது தான் முக்கியம்.

காந்தி, ரமண மகரிஷி, மொரார்ஜிதேசாய் போன்றவர்கள் கட்டுப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள்.

கட்டுப்பாட்டுடன் செயற்படும் இராணுவ வீரனை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். விண்வெளிக்குச் சென்ற அப்பொலோ குழு எத்தகைய பயிற்சிகளையும், கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டது என்று எண்ணிப் பாருங்கள். கிரிக்கெட் வீரர்களான வெங்கட்டும், கவாஸ்கரும், கபில்தேவும் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்காமல் இந்த அளவுக்கு முன்னேறி இருக்க முடியுமா? ஹெலன்கெல்லர், மில்டன் என்று கண் தெரியாத மனிதர்கள் இத்தனை சாதனைகளை எப்படிச் செய்தார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சாதனைகள் எல்லாம் மனக்கட்டுப்பாட்டிலிருந்து பிறந்தவையே.

சுயகட்டுப்பாட்டை எப்படி வளர்க்கலாம்? எமது வாழ்வின் ஒரு பகுதியாக எப்படி அமைத்துக் கொள்ளலாம்? சுய கட்டுப்பாட்டைப் பற்றிய விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும் நாம். 'நான் சுயகட்டுப்பாட்டுள்ளவன்' என்று எமக்கு நாமே அடிக்கடி பேசிப் பெருமைப்பட்டுக் கொள்வது அவசியம் என்கிறார்கள் மனவியல் அறிஞர்கள். சுயகட்டுப்பாட்டால் விளையும் நன்மைகளை மனத்தில் அடிக்கடி கற்பனை செய்வது; அந்தக் கற்பனைகளின்போது எழும் இனிய உணர்வுகளை அடிக்கடி நினைவில் கொண்டு வருவது; கட்டுப்பாட்டின் விளைவாக வெற்றிகள் வரும்போது '' அதுதான் நான்! இந்தச் சிங்கம்!'' என்று எம்மை நாமே தட்டிக்கொடுத்துக் கொள்வது; எமது இலட்சியங்களையும் அதிலுள்ள எமது ஈடுபாட்டையும் நினைவில் கொள்வது; கடைசியாக, தளராத மனம்; ஓரிரு முறை தவறினாலும் மீண்டும் மீண்டும் ஓர் ஒழுங்குக்கும், கட்டுப்பாட்டுக்கும் வந்து சேருவது; அதிகம் சிந்திப்பவர்கள், உடற்பயிற்சியில் ஒழுங்காகத் தொடர்ந்து ஈடுபடுவது போன்றவை நல்ல மன உறுதியை வளர்க்கும்.

கட்டுப்பாடு என்பது, தோட்டத்தில் பாத்தி கட்டி, வாய்க்கால் வழியாக ஒவ்வொரு பாத்திக்கும் வரிசையாகத் தண்ணீர் பாய்ச்சுவது போல. பாத்தி கட்டும் போது தண்ணீர் வீணாவதில்லை. கட்டுப்பாட்டின் மூலம் எம் சக்தியை அதிக அளவுக்கு உபயோகிக்கிறோம்.

கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். குழந்தையை இரண்டுவிதமாக வளர்க்கலாம். கண்டிப்புடன், தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதுடன் சிறு சிறு தண்டனைகள் அளிப்பது - இது ஒரு வழி. '' சின்னப் பையன்! போனால் போகிறான்! எல்லாம் போகப் போகத் தெரிந்து கொள்வான். அவனைச் சும்மா விடு!'' என்று கூறி வளர்க்கும் முறை - இது இரண்டாவது. கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்த பின், வாழ்க்கையை எளிதாகச் சமாளித்தார்கள். அதிகம் மரியாதை கொண்டவர்களாக, நன்றி உள்ளவர்களாக, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுபவர்களாக, படிப்பிலும், வேலையிலும் அதிகம் கவனம் உடையவர்களாக, உத்தரவுகளை ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தார்கள். நல்ல மனோபாவம் கொண்டிருந்தார்கள் இவர்கள்.

இதன் மறுபக்கமும் இருக்கத்தான் இருந்தது. இவர்கள் அதிகம் வெட்கப்படுகிறவர்களாகவும், உணர்ச்சி வசப்படக் கூடியவர்களாகவும், தன்னைப் பற்றிய நினைப்பும், பிறர் என்ன சொல்வார்களோ என்று கவலைப்படுபவர்களாகவும் இருந்தார்கள். இவர்களிடம் சற்று அளவுக்கு மீறிய பணிவு இருந்தது. தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துவதில் இவர்களிடம் தயக்கம் இருந்தது ஒதுங்கி நின்றார்கள்.

எம்.எஸ்.உதயமூர்த்தி (தொடரும்)

# சகலதையும் இழந்து நிற்கும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பது ஆலய வழிபாடாகும்

## இந்து சமய பேரவைத் தலைவர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, பெப்.12

இன்றைய சூழலில் சகலதையும் இழந்து கையறு நிலையில் நிற்கும் எமது மக்களுக்கு ஆறுதல் அளித்து, எதிர்காலம் பற்றி தெம்பும் தெளிவும் தருவது முறையான ஆலய வழிபாடு ஆகும். இதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்று இந்து சமய பேரவைத் தலைவரும் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயத்தின் திருப்பணி மலர் வெளியீட்டு விழா பரிபாலன, திருப்பணிச் சபைத் தலைவர் இ.அருணகிரி தலைமையில் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அந்த விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே பேராசிரியர் சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆலயத்தின் மீது மக்களை ஈர்ப்பது தோற்றம் மட்டுமல்லாது அங்கு நேரம், காலம் தவறாது நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அலையும் மனதை ஒரு நிலைப்படுத்தி ஆண்டவனின் அருளைப் பெறுவதற்கு இவையே வழிவகுக்கின்றன.

**ஆலயத்தின் மீது மக்களை ஈர்ப்பது தோற்றம் மட்டுமல்லாது அங்கு நேரம், காலம் தவறாது நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அலையும் மனதை ஒருநிலைப்படுத்தி ஆண்டவனின் அருளைப் பெறுவதற்கு இவையே வழிவகுக்கின்றன.**

ஆறுமுகநாவலர் பெருமான் கூறியவாறு இறைவன் இந்தச் சரீரத்தை எமக்கு அளித்தது முறைப்படி அவரை வழிபட்டு முக்தியின்படி பெறுவதற்காகும். ஆனால் இன்று பெரும்பாலான ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் இறைவன் மீது நம்பிக்கை ஈட்டும் தகைமையை இழந்து நிற்கின்றன-என்றார்.

மேலும் யாழ்.சைவ பரிபாலன சபைத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை திருப்பணி மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

சபையின் மீது மக்களுக்கு ஏற்பட்ட நம்பகத்தன்மையினாலும் உரிய முறைப்படி நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட்டதாலும் பல கோடி ரூபாய்களுக்கான பெரிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்த மலர் ஆலய நிர்வாகங்களுக்கு மட்டுமல்ல ஏனைய பொது நிறுவனங்களுக்கும் ஒரு வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. இந்த மலரின் உள்ளடக்கம் ஓர் ஆலய நிர்வாகம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. இந்த மலரின் மூலம் ஏனைய ஆலயங்களும் பொது நிறுவனங்களும் மிகத் திறமையுடன் செயற்பட முடியும் - என்றார். (எ-115)



யாழ். புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் புதிதாக அனுமதிபெற்ற மாணவர்கள், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி மைதிலி தேவராஜா ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் அழைத்து வரப்படுகின்றனர். (எ-7)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

வட்டுக்கோட்டை,பெப்.12

வட்டுக்கோட்டை மூளாய் ஐக்கிய நாணய சங்கத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றுள்ளன.

தலைவர்- க.இராதாகிருஷ்ணன், உபதலைவர்- த.நாராயணன், செயலாளர்- ப.அருள்ராஜன், பொருளாளர்- வே.சுப்பிரமணியம் ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக கு.கருணாநிதி, கு.குகதாசன், திருமதி க.புவனேந்திரனும், வாசிகசாலைப் பொறுப்பாளராக-சி.கனகசபாபதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம)

★ ★ ★

யாழ்.வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 46 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர்-ச.ஜெயகணேஸ், உபதலைவர்-கே.என்.தேவதாஸ் மற்றும் சி.மதுசூதனன், செயலாளர்- பூ.அகமணிதேவர், உபசெயலாளர்- இ.சிவகுமார், பொருளாளர்-இ.இராதாகிருஷ்ணன். மேலும் உறுப்பினர்களாக கி.மகாலிங்கம், இ.ஆனந், சி.அருணாசலம், த.சந்தானவேல், தி.சந்திரசேகரம், இ.சண்முகதாஸ், ச.ரமேஸ்குமார் ஆகியோரும், கணக்காய்வாளராக ஐ.கா.நஞ்சனதாசும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

★ ★ ★

காரைநகர்,பெப்.12

காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

தலைவர்-அதிபர் செல்வி வி.விஸ்வநாதன், உப தலைவர்-புலவர் வே.குமாரசாமி, செயலாளர்- யாழ்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி, உப செயலாளர்- க.நாகராசா, பொருளாளர்- ச.இராசநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உறுப்பினர்களாக திருமதி பு.சந்திரராசா, ச.கனகேஸ்வரி, வி.தவமலர், வே.தவகுமாரி, சு.கோகுலவாணி, சி.சொர்ணாம்பிகை, வி.கம்சன், வி.வைகுந்தவாசன், க.கனகரத்தினம், பா.சண்முகரூபன் ஆகிய பத்துப் பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-250)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



அத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த கணேசானந்தம் சுனாசீரன் சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றி தற்பொழுது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றி வருகிறார். (எ)

# இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பாக நலன்பேணும் அமைப்பால் கடிதம்

## வவுனியா அரச அதிபருக்கு அனுப்பப்பட்டது

வவுனியா, பெப்.12

*இந்திய வீட்டுத் திட்டத் தெரிவு தொடர்பாக வவுனியா மாவட்ட மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பினர் குறிப்பிட்ட சில விடயங்களைத் தெளிவுபடுத்தி கடிதம் அனுப்பியுள்ளனர்.*

*இந்திய வீட்டுத்திட்டத் தெரிவில் எந்தவித பாரபட்சமும் இடம்பெறவில்லை என்று வவுனியா மாவட்ட அரச அதிபரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவே வவுனியா மாவட்ட மீளக்குடியமர்ந்தோர் நலன்பேணும் அமைப்பினர் சில விடயங்களைத் தெளிவுபடுத்தி வவுனியா அரச அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.*

இந்திய நிதியுதவியுடனான வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிராக இந்த அமைப்பு கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை வவுனியா செயலக முன்றிலில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதோடு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு மனு ஒன்றையும் கையளித்தது.

இதனை அடுத்து அரச அதிபரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவே இந்த அமைப்பு இக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:-

இந்திய வீட்டுத் திட்டத் தெரிவில் பாரபட்சம் காட்டப்படவில்லை எனக் கூறும் தங்களது அறிக்கையில் 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் இந்திய வீட்டுத் திட்ட ஒதுக்கீட்டில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை போன்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதே வேளை இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதில் பாரபட்சம் இடம்பெறவில்லை எனக் கூறும் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் செயலை நியாயப்படுத்தும் மாவட்ட இன நல்லுறவுக்கான ஒன்றியம் என்ற அமைப்பின் ஜனாதிபதிக்கான மனுவில் கூறப்பட்ட அதே விடயங்கள் மற்றும் அதேபுள்ளி விவரங்களே தங்களது அறிக்கையில் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த அறிக்கையில் 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு 7,454 வீடுகளும், முஸ்லிம் மக்களுக்கு 1,123 வீடுகளும் சிங்கள மக்களுக்கு 245 வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்கள். இந்திய உதவியுடனான வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற எமது முறைப்பாட்டுக்குச் சம்பந்தமில்லாத வகையில் 1994 ஆம் ஆண்டானது ஏன் இங்கு கணக்கிலெடுக்கப்பட்டது என்பது புரியவில்லை. 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்தில் எந்தவித போர் பாதிப்புகளும் இடம்பெறவில்லையா?

மேலும் முதலியார்குளம், வீரபுரம் போன்ற மீளக்குடியமர்வுக் கிராமங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் மாதா மாதம் வாடகை அறவிடப்படும் வீடுகளுக்கும், ஏனைய மீளக்குடியமர்வுக் கிராமங்களில் நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்படும் என்ற வாக்குறுதியுடன் அரை நிரந்தர வீடுகளே அமைத்துக் கொடுக்கப்பட்டன. இவை கூட நிரந்தர வீட்டுத்திட்ட உதவிகளாக தங்களால் கருதப்பட்டுள்ளன.

தங்களது அறிக்கையில் முஸ்லிம் மக்களுக்கு வீடமைப்பு உதவிகள் வழங்கப்படவில்லை. அல்லது வழங்கப்பட்டமை போதாது என்ற வகையிலான கருத்தையும் முன் வைத்திருந்தீர்கள். முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்து சென்று தங்கியிருந்த இக்கிரிக்கொல்லாவ, புத்தளம் போன்ற பிரதேசங்களில் ஆயிரக் கணக்கானோருக்கு காணி, வீடு வழங்கப்பட்டு மீளக்குடியமர்வு செய்யப்பட்டதுடன் வன்னி மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அந்த மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதையும் நினைவூட்ட விரும்புகின்றோம்.

வீட்டுத்திட்டத் தெரிவில் கிராமங்களின் எண்ணிக்கை ரீதியாக தமிழ்க் கிராமங்கள் 11, சிங்களக் கிராமங்கள் 08, முஸ்லிம் கிராமங்கள் 3 என்ற அடிப்படையிலேயே தெரிவு இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் பாரபட்சம் இடம்பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். கிராம ரீதியாக அன்றி பயனாளிகளின் எண்ணிக்கை ரீதியாக நோக்கின் தமிழ் மக்கள் மீதான பாரபட்சத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்திய வீட்டுத்திட்டத் தெரிவில் நடப்பது என்ன? இந்திய வீட்டுத்திட்ட தெரிவில் கிராம மற்றும் பயனாளிகள் எண்ணிக்கையினை உண்மையில் தீர்மானிப்பது யார்? இது குறித்த உண்மை நிலைமையை அறியலாமா என்றுள்ளது. (க-எ-435)

## ‘சேவர்’ இன குஞ்சுகளுக்கு வவுனியாவில் அதிக கிராக்கி

நெளுக்குளம்,பெப்.12

வவுனியாவில் ‘சேவர்’ இன கோழிக்குஞ்சுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இனத்தைச் சேர்ந்த கோழிகள் அதிக நிறையைக் கொண்டதுடன் அதிகளவு முட்டைகளையும் இடுவதால் கோழி வளர்ப்போரின் கவனம் இந்த இனக் கோழிகளின் மீது திரும்பியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த ஆண்டு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ‘சேவர்’ இனக் கோழிக் குஞ்சுகள் வவுனியா கால்நடைத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதன் மூலமாக 600 க்கும் மேற்பட்ட கோழி வளர்ப்பாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பெருமளவான ‘சேவர்’ இனக் கோழிகள் இறந்துள்ளன. அத்துடன் இந்த இனத்தைச் சேர்ந்த கோழிக் குஞ்சுகள் இந்த ஆண்டு கால்நடைத் திணைக்களத்தால் விநியோகிக்கப்படவில்லை. இதனால் ‘சேவர்’ இனக் கோழிகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்த இனக் கோழியொன்று நாலரைக் கிலோ நிறையுள்ளதாகக் காணப்படுவதுடன் அதிக முட்டைகளையும் மாதாந்தம் தரக் கூடியது. இந்த இனக் கோழிக் குஞ்சுகளின் விநியோகத்துக்காக கோழி வளர்ப்பாளர்கள் காத்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. (க-402)





மன்னாரில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவின்போது வவுனியா தமிழ்ச் சங்கத் தலைவர் த.சிவகுமாரனுக்கு ‘முத்தமிழ் காவலர் விருதை மன்னார் சைவக்கலை இலக்கிய மன்றத் தலைவர் மஹா தர்மகுமாரக் குருக்கள், திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லப் பணிப்பாளர் வே.பொ.மாணிக்கவாசகர் ஆகியோர் இணைந்து வழங்குவதையும், சபையோரையும் படங்களில் காணலாம். (க-400)

## தீர்மானங்கள் நிறைவேற்றப்படாத மன்னார்க் கலந்துரையாடல்

### திணைக்களத் தலைவர்கள் வராமையே காரணம்

மன்னார், பெப்.12

வரியிறுப்பாளர் சங்கத்துக்கும், மன்னார் அரச அதிபருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தீர்மானம் எதனையும் நிறைவேற்ற முடியாத நிலையில் முடிவடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்துக்கும், அரச அதிபர் சரத் ரவீந்திரவுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதற்கு அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் பலர் சமுகமளிக்காததால் தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படாத நிலையில் குறித்த கலந்துரையாடல் முடிவடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் பொருளாளர் ஐ.சாள்ஸ் கவலை தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மக்களின் நலன் கருதி கடந்த வருடம் மன்னாரில் மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த சங்கம் மன்னார் நகர சபையுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் நடவடிக்கையில் ஈடுப ளளது-

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வரியிறுப்பாளர் சங்கத்துக்கும், திணைக்களங்களின் தலைவர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தோம்-

ஆனால் குறித்த கலந்துரையாடலின் போது வரியிறுப்பாளர் சங்கத்தின் நிர்வாகிகள், அரச அதிபர், மன்னார் நகர சபைத் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை-

இந்தக் கலந்துரையாடலின் போது மன்னார் நகர சபையுடன் இணைந்து மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கம் மேற்கொள்ளவிருந்த பல விடயங்கள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர மற்றும் நகரசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது-

எனினும் அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் பலர் கலந்து கொள்ளாமையால் தீர்மானங்களை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## பெற்றோரின் பங்களிப்புடன் மைதானம் புனரமைப்பு

நெளுக்குளம்,பெப்.12

வவுனியாவிலுள்ள பாடசாலையொன்றின் மைதானம் பெற்றோரின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு வளாகத்தில் அமைந்துள்ள மைதானமே மேற்கண்டவாறு புனரமைக்கப்பட்டுள்ளது.

இங்கு பெற்றோரின் நிதிப் பங்களிப்புடன் கிரவல் மண் பறிக்கப்பட்டு அதனைப் பரவிவரும் பணியிலும் பெற்றோர்கள் உதவி நல்கியுள்ளனர்.

கிரவல் மண் பரவப்பட்டு மைதானம் புனரமைக்கப்பட்டதன் மூலமாக மழை காலத்தில் தண்ணீர் தேங்கி நிற்பதைத் தவிர்க்க முடியும். மேலும் டெங்கு போன்ற நோய்த் தாக்கத்திலிருந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் அங்கு வரும் பெற்றோர்களையும் பாதுகாக்க முடியுமெனவும் பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-402)



# இளம்வீரர்கள் ஆக்ரோஷம் கே.ஸி.ஸி.ஸி. சம்பியன்






யாழ்ப்பாணம், பெப்.12

இளம் வீரர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தால் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக நடத்திய கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை கே.ஸி.ஸி.ஸி. அணி சுவீகரித்தது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன், யாழ்.மாவட்டத்துக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் 30 பந்து பரிமாற்றங்கள் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியைகொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தி வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கே.ஸி.ஸி.ஸி. அணியும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன.

இந்த இறுதிப்போட்டி 40 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற கே.ஸி.ஸி.ஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய சத்தியன் - பங்குஜன் ஆகியோர் இணைப்பாட்டமாக 120 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இதனால் அந்த அணி எடுத்த எடுப்பிலேயே பலமான நிலையை அடைந்தது.

தொடர்ந்து வந்த வீரர்களும் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவிக்க 40 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து கே.ஸி.ஸி.ஸி. அணி 303 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக பங்குஜன் 41 ஓட்டங்களையும், சத்தியன் 88 ஓட்டங்களையும், உமாநாத் 56 ஓட்டங்களையும், ராகுலன் 35 ஓட்டங்களையும், வல்லவக்குமரன் 35 ஓட்டங்களையும் பெற்றுகொடுத்தனர்.

304 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 38.4 பந்துபரிமாற்றங்களில் 222 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.

அந்த அணி சார்பாக மதுசன் 71ஓட்டங்களையும், தீபன் 36ஓட்டங்களையும் , ராஜேந்தின் 27ஓட்டங்களையும், பிரியதர்சன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் மத்தியசனசமூகநிலைய அணி சார்பாக ராகுலன் 5 இலக்குகளையும், பங்குஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்துவீச்சாளராகவும் கே.ஸி.ஸி.ஸி. அணியின் இராகுலனும் , சிறந்த துடுப்பாட்ட வீரராக அதே அணியினைச் சேர்ந்த சத்தியனும், சிறந்த களத்தடுப்பாளராக ஜொலிஸ்ரார் அணியினைச் சேர்ந்த உமாதரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ங-23-86)

## இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

பி.ப.3 மணி

ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம்

எதிர்

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

பாடசாலைகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையே கீர்த்திகன் ஞாபகார்த்தவெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றவுள்ள காலிறுதியாட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப 3 மணி

சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

பி.ப 4.30 மணி

கொக்குவில் இந்துக் கல்லூரிஅணி எதிர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை. (ங-23)

## டைமன்ஸ், மனோகரா எல்லே இறுதிக்குள்

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு வதிரி டைமன்ஸ் அணியும், அல்வாய் மனோகரா அணியும் தகுதி பெற்றுள்ளன.

குறித்த சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் டைமன்ஸ் அணியை எதிர்த்து இமையாணன் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது. இதில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 8:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைஒளிச்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 12:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகு வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (ங-23)

## கலந்துரையாடல்

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் பரந்தாம் கேட்டுள்ளார். (ங-23)

## பாடும்மீனை வென்றது விண்மீன்



யாழ்ப்பாணம், பெப். 12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரிபொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இறுதிவரை பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் விண்மீன் விளையாட்டுக் கழகஅணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## பாஷையூர் சென். அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ். உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி களம் இறங்கியது.

இதில் ஆரம்பத்திலிருந்தே அபாரமாக ஆடியது பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி. எதிரணியின் கோல் பெறும் முயற்சிகளை முறியடிக்க அன்ரனிஸ் அணி வீரர்கள் ஆட்ட நிறைவில் 2:0 என்ற கோல் கணக்கில் யாழ். ஐக்கிய அணியை தோற்கடித்தனர். (ங-23)

# லோகதீஸ்வரின் அபார பந்துவீச்சால் பற்றிக்ஸ் பணிந்தது சென்.ஜோன்ஸிடம்



யாழ்ப்பாணம், பெப. 12

லோகதீஸ்வர் ஆக்ரோஷத்தோடு துல்லியமான பந்துவீச்சில் இறங்கியதால் சென். ஜோன்ஸ் கல்லூரியிடம் பணிந்தது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் 19வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடர் ஆட்டம் ஒன்று கடந்த வாரம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி களம் இறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட்டத்தைத் தெரிவு செய்தது.

இதற்கமைய முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 37 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லிவிங்ரன் 22 ஓட்டங்களையும் ரியுடர்15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் கானமிர்தன் 6பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி15 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும், லோகதீஸ்வர் 11 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், அனோஷன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், நிலோசன் , கவாஸ்கர் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடியது சென். ஜோன்ஸ் கல்லூரி. அந்த அணி 80.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து184 ஓட்டங்களைப்பெற்றது.

பிருந்தாபன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், துவாரகசீலன் 42ஓட்டங்களையும், அமிர்தேயன் 33 ஓட்டங்களையும், கபில்ராஜ் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக தனுஷன் 16.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், ஜக்ஷன் 19பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 55 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், தனுசங்கர் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

தமது 2 ஆவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 32.4பந்துப் பரிமாற்றங்கள நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களையே பெற முடிந்தது. லோகதீஸ்வர் அபாரமாகப் பந்து வீசியதே இதற்குக் காரணம்.

பற்றிக்ஸ் அணி சார்பில் கரன்ஷண் 9 ஓட்டங்களையும், ஜக்சன் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லோகதீஸ்வர் 16.4பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி14 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளையும், கானமிர்தன் 15 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர். இதனால் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் சென். ஜோன்ஸ் அணி நீண்ட காலத்துக்குப் பின்னர் பற்றிக்ஸ் அணியை வீழ்த்தி வரலாறு படைத்தது. (ங-23)

# தூக்கியெறியப்பட்டார் சரித்




இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க அந்தப் பதவியிலிருந்து நேற்று நீக்கப்பட்டார். இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச, இலங்கை அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை உறுதிசெய்தார். ஆனால் அவரது பதவி நீக்கம் குறித்த மேலதிக தகவல்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

இது குறித்து உபாலி தர்மதாச மேலும் தெரிவித்ததாவது-

''சரித் சேனநாயக்கவின் இடத்துக்கு இலங்கையின் மற்றொரு முன்னாள் வீரரான மைக்கல் டி சொய்ஸா நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் அந்தப் பதவியை ஏற்பது குறித்து மைக்கல் டி சொய்ஸா இன்னமும் உறுதிப்படுத்தவில்லை-'' என்றார்.

ஆயினும் பழிவாங்கும் நடவடிக்கையாகவே தன்னைப் பதவி நீக்கம் செய்து விட்டார்கள் என்று சரித் சேனநாயக்க தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

''அண்மையில் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கெதிராக மஹேல ஜெயவர்தன ஊடகம் ஒன்றுக்கு பகிரங்கமாக எழுதிய கடிதத்தை வெளியிட மஹேலவுக்கு நான் உதவியிருந்தேன். இதற்காக மஹேலவோடு சேர்த்து எனக்கும் விளக்கம் கோரப்பட்டிருந்தது. அதன்பின்னர் திடீரென இப்போது பதவியிலிருந்து நீக்கிய அறிவிப்பு வெளிவந்துள்ளது. மஹேலவுக்கு உதவிய காரணத்துக்காகவும், சில தனிப்பட்ட காரணங்களுக்காகவும் நான் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளேன்''- என்றார்.

எனினும் இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை அதிகாரியொருவர், சரித் சேனநாயக்க மீது குற்றச்சாட்டுக்கள் பலவும் காணப்படுகின்றன. அவர் தனது பதவிக்குரிய கடமைகளை திருப்திகரமாகச் செய்திருக்கவில்லை. வீரர்கள் பலமுறை அவர் குறித்து முறையிட்டுள்ளனர். இதன் அடிப்படையிலேயே அவர் தற்போது பதவி நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார். (ந)

# றொனால்டோ ஹட்ரிக்: வென்றது மட்ரிட்



செவில்லா அணிக்கு எதிரான ''லா லிகா'' உதைபந்துப் போட்டியில், கிறிஸ்டியானோ றொனால்டோ ''ஹட்ரிக்'' கோல் அடித்து கைகொடுக்க, ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில், ''லா லிகா'' உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டி ஒன்றில் ரியல் மட்ரிட் அணியும், செவில்லா அணியும் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே ரியல் மட்ரிட் அணியின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. அந்த அணியின் கரிம் பென் ஜிமா 18ஆவது நிமிடத்திலும், கிறிஸ்டியானோ றொனால்டோ 26ஆவது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். இதற்கு செவில்லா அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் ரியல் மட்ரிட் அணி 2-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில், அபார ஆட்டத்தைத் தொடர்ந்த றொனால்டோ, 46ஆவது மற்றும் 59வது நிமிடங்களில் கோல் அடித்து, ''ஹட்ரிக்'' சாதனை படைத்தார். ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் மானுவெல் மோரல் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். ஆட்டநேர முடிவில், ரியல் மட்ரிட் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதுவரை விளையாடிய 22 லீக் போட்டியில் 13 வெற்றிகள், 14 சமநிலைகள் 5 தோல்விகள் உட்பட 43 புள்ளிகளுடன் ரியல் மட்ரிட் அணி 3ஆவது இடத்தில் உள்ளது. முதலிரண்டு இடங்களில் பார்சிலோனா (59 புள்ளிகள்), அட்லெடிக்கோ டி மட்ரிட் (50 புள்ளிகள்) அணிகள் உள்ளன. (ந)

# தடை




உள்ளூர்ப் போட்டியின் போது எதிரணி வீரருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இந்திய வீரர் பிரவீன்குமார் உள்ளூர் கிரிக்கெட் தொடர் ஒன்றில் விளையாட இந்திய கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரவீன்குமார் சமீபத்தில் உள்ளூர் கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றில் ஓ.என்.ஜி.சி. அணிக்காக விளையாடினார்.

இதில் எதிரணியில் விளையாடிய வீரரான வரித்துறை அணியைச் சேர்ந்த அஜிதேஷ் என்பவரை பிரவீண்குமார், தலையால் முட்டி மோதியதுடன், தகாத வார்த்தைகளாலும் திட்டினார். மேலும், நடுவரிடமும் முறைத்துக் கொண்டார்.

இது குறித்து களநடுவர் தனஞ்சய் சிங், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு (பி.சி.சி.ஐ.,) முறைப்பாடு செய்தார். அந்த முறைப்பாட்டில் பிரவீன்குமாருக்குப் போட்டிகளில் விளையாடும் அளவுக்கு மனநிலை சரியில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து விளக்கம் கேட்டு, பிரவீன்குமாருக்கு பி.சி.சி.ஐ. நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அத்துடன் விரைவில் நடைபெறவுள்ள விஜய் ஹசாரே உள்ளூர்க் கிரிக்கெட் தொடரில் பிரவீன்குமார் பங்கேற்கவும் தடை விதித்துள்ளது. (ந)

# வழக்கு...



டுவர் டி பிரான்ஸ் பட்டங்களுக்காக வழங்கப்பட்ட பரிசுப் பணம் குறித்து அமெரிக்க சைக்கிளோட்ட வீரர் லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங்குக்கு எதிராக நிறுவனமொன்று வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மூன்று டுவர் டி பிரான்ஸ் பட்டங்களை வெற்றிகொண்டமைக்காக அவருக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர் பணப் பரிசு வழங்கியதாக குறித்த நிறுவனம் கூறியுள்ளது.

ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டில், லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங் பெற்ற ஏழு டுவர் டி பிரான்ஸ் பட்டங்களையும் சர்வதேச சைக்கிளோட்ட ஒன்றியம் கடந்த ஆண்டு மீளப்பெற்றிருந்தது.

இந்த நிலையில் டெக்ஸாஸ் மாநிலத்தின் டலாஸ் பகுதியிலுள்ள நீதிமன்றில் குறித்த நிறுவனம் ஆம்ஸ்ட்ரோங்குக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஆம்ஸ்ட்ரோங் மற்றும் அவரின் நிர்வாக நிறுவனம் ஆகியன தமது நிறுவனத்தை ஏமாற்றியுள்ளதாக குறித்த நிறுவனம் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளது.

2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் டுவர் டி பிரான்ஸ் சைக்கிளோட்டத்தில் லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங் பெற்ற பட்டங்களுக்கென இந்த பரிசுத் தொகை வழங்கப்பட்டதாகவும் குறித்த நிறுவனம் கூறியுள்ளது. (ந)

# நடால் தோல்வி

சிலி பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் ஸ்பெய்னின் முன்னணி வீரர் ரபெயல் நடால் தோல்வியடைந்துள்ளார்.

இறுதிப் போட்டியில் நடாலுக்கு அதிர்ச்சியளித்த தரப்படுத்தலில் 73 ஆம் இடத்திலுள்ள ஆஜென்ரினாவின் ஹொராசியோ ஷெபொலஸ் 2 :1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

போட்டியின் முதல் செட்டை 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் நடால் கைப்பற்றிய போதிலும், அடுத்த இரண்டு செட்களையும் 7:6, 6:4 என ஹொராசியோ ஷெபொலஸ் தன்வசப்படுத்தினார்.

டென்னிஸ் வரலாற்றில் தனது முதலாவது பட்டத்தை ஹொராசியோ ஷெபொலஸ் வெற்றிகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# மீள்வருகையை மேற்கொள்வது கடினம்

## ஹர்பஜன் சிங்

மோசமான ஆட்டத்திறன், உடற்தகுதிப் பிரச்சினைகள் காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்ட ஹர்பஜன் சிங், அண்மையில் இடம்பெற்ற இங்கிலாந்துக் கெதிரான தொடரில் ஒரு போட்டியில் பங்கு பற்றியிருந்தார்.



அணியொன்றிலிருந்து நீக்கப்பட்ட பின்னர், அந்த அணிக்கு மீள்வருகையை மேற்கொள்வது கடினமானது என இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் குழாமுக்கு அழைக்கப்பட்டமை தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மோசமான ஆட்டத் திறன், உடற்தகுதிப் பிரச்சினைகள் காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்ட ஹர்பஜன் சிங், அண்மையில் இடம்பெற்ற இங்கிலாந்துக்கெதிரான தொடரில் ஒரு போட்டியில் பங்குபற்றியிருந்தார்.

அதைத் தவிர, இந்தியக் குழாமில் அவருக்கு இடம் கிடைத்திருக்கவில்லை.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த ஹர்பஜன் சிங், மீள்வருகைகளை மேற்கொள்வது எப்போதும் கடினமானது எனவும், தனது கிரிக்கெட் திறமைகள் தொடர்பாக அதிக பயிற்சிகளை மேற்கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தன்னால் முடிந்தளவு சிறப்பான பயிற்சிகளை மேற்கொண்டதாகத் தெரிவித்த அவர், தனது தெரிவு தொடர்பாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்தியக் குழாமில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை ஒரு புதிய சந்தர்ப்பம், புதிய நாள் எனத் தெரிவித்த அவர், அதையே தான் எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவைச் சர்வதேசப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்தும் திறமை தனக்கு இன்னமும் காணப்படுவதாகத் தெரிவித்த ஹர்பஜன் சிங், அதன் காரணமாகவே கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்தும் பங்குபற்றுவதாகவும் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் 4 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதோடு, முதலாவது போட்டி 22 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், ஆஸ்திரேலிய வீரர்களில் கிளார்க், வொட்சன் தவிர ஏனைய வீரர்கள் இதுவரை இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியிருக்காத நிலையில், இந்திய அணி வெற்றிபெறும் எனவும் ஹர்பஜன் சிங் தெரிவித்தார். (ந)

---

### ஐ.நா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் பரிந் துரைகளை இலங்கை மதிக்கத் தவறினால், ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் மீண்டும் அந்த நாட்டுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் எத்தகைய தீர்மானத்தையும் இந்தியா ஆதரிக்கும்.

மத்திய அரசு எப்போதும் இலங்கையில் உள்ள தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது. அவர்களுக்கு ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தன உடன்பாட்டின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை, இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது.

சில தமிழ்க்கட்சிகள், தமிழ்நாடு அரசு போன் றன முன்யோசனையின்றி தீர்மானம் நிறை வேற்றியது போலன்றி, இந்தியா நடுநிலை நிலைப்பாட்டை எடுத்தது. அதனாலேயே இலங்கைப் பிரச்சினையை இந்திய அரசு நாசூக்காகவே கையாள வேண்டி உள்ளது. அங்குள்ள தமிழர்களுக்காக 500 கோடி ரூபா செலவில் வீடமைப்பு, சாலை அமைப்பு பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். இன்னும் பல நலத்திட்டங்களையும் செயற்படுத்த இருக்கிறோம்.

தமிழ்நாடு அரசு கூறுவதுபோல், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்து அவர்களை விரோதித்துக் கொண்டால், அங்குள்ள தமிழர்களுக்கு நம்மால் உதவி செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

### ஜனாதிபதி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லில் ஈடுபட்டனர்.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாள் பயணமாக இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று முற்பகல் 10 மணியளவில் சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேர மின்சார விநியோகத்தை வழங்கும் புதிய மின் பிறப்பாக்கிகளை அவர் இயக்கி வைப்பார். அதன் பின்னர் மு.ப. 11 மணியளவில் யாழ். ரில்கோ ஹோட்டலில், யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பின்பு மாலை 4 மணியளவில் நயினா தீவுக்குச் சென்று, அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள இறங்குதுறையை அவர் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளிலும் ஜனாதிபதி பங்கேற்பார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ்.நகரில் பாதுகாப்பு பல மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி செல்லவுள்ள இடங்களில் விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். நேற்றுக்காலை முதல் யாழ்.நகரின் முக்கிய வீதிகள் அனைத்திலும் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (த-5-17)

### முட்டாள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் எனது வேலையை பார்க்கின்றேன். இந்த மக்களைப் பாதுகாப்பதுதான் எனது வேலை. நான் ஒருபோதும் அரசியல் செய்யவில்லை.

நான் அரசியலுக்கு வரப்போவதும் இல்லை. இங்குள்ள அரசியல்வாதிகளின் வாக்குகளை நான் பிரித்தெடுத்து விடுவேன் என்று பயப்படுகிறார்கள். ஒரு போதும் நான் அரசியலுக்கு வரப்போவதில்லை.

அரசியல்வாதிகள் பதவிக்காக எதையும் சொல்வார்கள். அவர்கள் பதவிக்கு வந்த பின்னர் என்ன செய்கிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். அவர்களால் அரசியல்வாதிகள் என்பதால் எதையும் சாதிக்கலாம் என்று நினைக்கிறார்கள். இது பாரதூரமான விடயம்.

இராணுவம் காணிகளை அபகரிப்பதாக அரசியல்வாதிகள் கருதுகின்றார்கள். உண்மையில் மக்களின் காணிகளை நாம் பலவற்றை விடுவித்துள்ளோம்.

நாங்கள் 1,800 வீடுகள் வரையில் நிர்மாணித்துக் கொடுத்திருக்கின்றோம். இதனால் அந்தக் குடும்பங்கள் இன்று நிம்மதியாக வாழ்கின்றன. இந்த அரசியல் வாதிகள் என்ன செய்தார்கள்?

முட்டாள் அரசியல் வாதிகள் சொல்லுவதை நீங்கள் பத்திரிகையில் எழுத வேண்டாம். நல்லவற்றை எழுதுங்கள்- என்றார். (த-1)

**எமது புதிய ஆலோசனை ஆஸ்திரேலியா தனிநபர் விசா**

- நீங்கள் வியாபாரம் செய்பவரா? அல்லது
- நீங்கள் பட்டதாரியா?
- நிரந்தர குடியுரிமை பெற சட்ட ரீதியான அருகதை
- மிகவும் இலாபகரமானது

மறு அறிவித்தல் வரை குடும்பவிசா ஆலோசனைகள் வழங்கப்பட மாட்டா.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் PV 82703
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 0212219016
(29467)(6.7.11)

**வான் விற்பனைக்கு**

Toyato Hiace G.S.xxxx ரக வான் உடன் விற்பனைக்குண்டு. டுவல் AC, பூவர் செற், TV, றெடேசன்சீற் எலோவீல் வேறும் சகல வசதிகளும் உண்டு.
தொடர்பு -0773922990
0772616970
(29454)(3.8.7)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதி, நீர்வேலியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0775890730

**SUMAN'S ENTERPRISE இல்**
**இல-291, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியில்**

- நவீன வகையான Wall tiles, Floor tiles, Bath room wall tiles, Commode Sets, Bathroom Doors.
- PVC PIPES & fittings, நீர்தாங்கிகள் என்பனவற்றை மலிவுவிலையில் பெற்றிடலாம்.

மற்றும்

- கல்சியம் நீக்கி, AIR FRESHNER, GLASS CLEANER, TOILET CLEANER, FLOOR MOPPER, DISH WASH என்பவற்றை மொத்த கொள்வனவில் பெற்றிடலாம்.

விநியோகம் இலவசம்
தொடர்பு- 021 5100 700
E.mail:sumansenterprise@gmail.com
(29338)(6.7.11)

GATEWAY Language Centre

**VACANCY ANNOUNCEMENT**

*Gateway Language Centre invites application from qualified, dedicated and result - oriented professionals for Full Time English Lectures to our branches at Jaffna, Nelliady & Chavakacheri.*

Qualifications : Bachelor or equivalent with academic background with minimum 1 year teaching experience in English. Must have overall computer skills

*Further training will be provided in Colombo . Interested, ideal candidates send their updated resume and credentials along with hand written application on or before 20th February 2013.*

**The Manager/HR,**
**347, Kasthuriyar Road,Jaffna**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.